# அரங்கம்
செய்திகள்
தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்



மட்டக்களப்பில் ஒரே ஒரு Family Restaurant
TP: 065 49 27 927
Call us for table reservation
SUNSHINE
Tomato Family Restaurant
Batticaloa
Sunshine Group



வார இதழ் – இலவசம் | www.arangamnews.com | வெள்ளி, சித்திரை 27, 2018. இதழ் – 10


# தரவளை தோட்டத்தில் திடீர் நிலத்தாழிறக்கம்



அட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா தரவளை மேற்பிரிவு தோட்டத்தில் 26.04.2018 அன்று விடியற்காலை ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக 24 வீடுகள் கொண்ட லய தொடர் குடியிருப்பில் இடைக்கிடையே 5 வீடுகளில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதோடு, லய தொடர் குடியிருப்பில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளது.





விடியற்காலை 5 மணியளவில் நில அதிர்வு உணர்ப்பட்டதாகவும், இதன்பின்பே வீடுகளின் கூரைகள் மற்றும் சுவர்கள் இடிபாடுகளுக்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கும் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த ஒரு வீட்டில் உறங்கி கொண்டிருந்த ஒருவரின் மீது சுவர்கள் இடிந்து விழுந்ததில் அவர் காயங்களுக்குள்ளாகி டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிவானந்தன் வயது 40 என தெரியவந்துள்ளது. அதேவேளையில் பாதிக்குப்புக்குள்ளாகிய 5 வீடுகளில் வசிக்கும் 20 பேர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர் என மேலும் தெரியவந்துள்ளது. இந்த நில அதிர்வு மற்றும் வெடிப்பு சம்பவம் என்பன தீடிரென ஏற்பட்டமைக்கான காரணத்தை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



# மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கோரி போராட்டம்

பதவிக்காலம் முடிவடைந்து, கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என்பதை வலியுறுத்தி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியினர் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் மே தினத்திற்குப் பின்னர் இந்த போராட்டங்களை அடுத்தடுத்து நடத்த தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற


தொடர்ச்சி... (பக்கம் -23 )








- Wedding reception
- Birthday parties
- Anniversary events
- Conferences & Workshops
- Puberty ceremony
- Corporate events
- Music concerts
- Dance programme
- Get-together
- Holiday parties
- Exhibition

SUNSHINE GRAND
Modern Banquel Hall
Kallady -Batticaloa

# ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நியமனத்தில் அதிருப்தி



ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா அந்தக் கட்சியின் செயற்குழுவில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

ரவி கருணநாயக்காவை செயற்குழுவில் இணைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்தே தான் அதிலிருந்து விலகுவதாக அவர் கூறியுள்ளார்.

ஐ.தே.கவின் செயற்குழு கூட்டத்தில் இருந்து இடைநடுவில் வெளியே வந்த அவர் இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே புதிதாக நியமிக்கப்பட்ட செயற்குழு குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் மத்தியில் கணிசமான எதிர்ப்பு இருப்பதாக அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சி எதிர்நோக்கியுள்ள அண்மைக்கால சிக்கல்களை தீர்ப்பதற்கு பதிலாக புதிய நியமனங்கள் சிக்கலை மேலும்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# இலங்கை நாணயம் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி இதுவரை இல்லாத அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

இதற்கமைய, அமெரிக்க டொலர் ஒன்று 159 ரூபாவிற்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

ஏற்கனவே டொலர் ஒன்றின் பெறுமதி 158.17 ரூபாவாகக் காணப்பட்டதுடன், பின்னர் அது மேலும் அதிகரித்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறிய 2015 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி டொலர் ஒன்றின் பெறுமதி 131 ரூபா 25 சதமாகக் காணப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களில் ரூபாவின் பெறுமதி 20 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

இலங்கையில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலை காரணமாக இலங்கை நாணயத்தின் மதிப்பில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுனின் விளக்கமறியல் நீடிப்பு

பிணை முறி ஊழல் குறித்த வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பேர்ப்பச்சுவல் ரெசரிஸ் நிறுவன உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரியான கசுன் பலிசேன ஆகியோரின் விளக்கமறியல் மேலும் மே 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இவர்கள் அவர்களது வீடுகளில் வைத்து சிஐடியினரால் கைது செய்யப்பட்டனர்.

பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கொழும்பு கோட்டை மஜிஸ்றேட் நீதிமன்றம் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் அர்ஜுனா மகேந்திரன், அவரது மருமகன் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் ஆகியோரை பிணை முறி ஊழல் தொடர்பான வழக்கில் சந்தேக நபர்களாக அறிவித்தது.

# மகுடம் நிகழ்வு

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி தின இலக்கிய நிகழ்வின் முப்பத்திரண்டாவது நிகழ்வாக தாய்வீடு (கனடா) பத்திரிகை நடாத்திய அமரர் திருமதி.நாகேஸ்வரி திருநாவுக்கரசு நினைவு சிறுகதைப்போட்டி பரிசளிப்பு நிகழ்வும் " மயான பூமி" பரிசுக்கதைகள் நூல் வெளியீடும் எதிர்வரும் 29-04-2018 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்டோர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஆலோசகர் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் மட்டக்களப்பு தமிழ்ச் சங்க பொருளாளர் சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கிறார்.

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் வி.மைக்கல் கொலினின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் "புலம்பெயர் பத்திரிகைகள் வரிசையில் தாய்வீடு" என்ற தலைப்பில் பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் சிறப்புரையாற்ற " மயான பூமி " என்ற பெயரில் வெளியிடப்படும் பரிசுக் கதைகள் நூல் பற்றிய அறிமுகத்தினை தமிழர் தளம் பத்திரிகையின் இணை ஆசிரியர் திரு.ச.மணிசேகரன் ஆற்றுவார்.

ஈழத்தின் பிரபல குறும்பட இயக்குனர் ஞானதாஸ் காசிநாதர் சிறப்பு அதிதியாக கலந்து கொள்ளும் நிகழ்வின் நன்றியுரையினை ஊடகவியலாளர் திரு. தேவ அதிரன் ஆற்றுவார்.

இந் நிகழ்வை கவிஞர் ஜி.எழில் வண்ணன் தொகுத்து வழங்குவார்.

# கொழும்பு வெசாக் பாதுகாப்புக்கு 3000 பொலிஸார்

வெசாக் வாரத்தை முன்னிட்டு நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்காக கொழும்பு நகரத்தில் மாத்திரம் 3000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தரப்பு பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் 5 வெசாக் வலயங்களில் 11 பெரிய பந்தல்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்புக்காகவும், போக்குவரத்து தேவைகளுக்காகவும், போதை மருந்து கடத்துபவர்களை தடுக்கவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். வெசாக் காலங்களில் 2016ஆம் ஆண்டில் 23 பேரும், 2017இல் 40 பேரும் போக்குவரத்து விபத்துக்களில் மரணமானதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

# மஹியங்கன கால்வாயில் ஒரு கார்

மஹியங்கன வியன கால்வாயில் கார் ஒன்று மிதக்கக் காணப்பட்டுள்ளது. இது குறித்து அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

பதுளை - மஹியங்கன வீதியில் 17வது மைல்கல் பகுதியில் அந்தக் கார் கால்வாய்க்குள் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

காரில் யாராவது பயணிகள் இருந்தார்களா என்பது குறித்த தேடுதல் நடக்கின்றது.

ஹிங்குராக்கொடையை சேர்ந்த ஒருவருக்கு அது சொந்தமானது என்று நம்பப்படுகின்றது.

# தற்போதைய அரசின் தவறான கொள்கையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்கிறார் மஹிந்த

இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமற்ற நிலையை எட்டியதற்கு தற்போதைய அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளே காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஜேவிபி கட்சியின் உறுப்பினரின் உறவினரின் மரண வீடு ஒன்றில் கலந்துகொண்ட ராஜபக்ஷ, அங்கு செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# வெசாக் கால மதுபானத் தடை

வெசாக் தினத்தை முன்னிட்டு வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நாடெங்கிலும் உள்ள மதுபானக் கடைகளை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

வெசாக் தினம் ஏப்ரல் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் கொண்டாடப்படும் என்றும் ஏப்ரல் 26 முதல் மே மாதம் 2 ஆம் திகதி வரை வெசாக் வாரம் அனுட்டிக்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# வடகொரிய அணு ஆயுத சோதனைக்கூடம் சேதம்



வட கொரியாவின் அணு ஆயுத சோதனைத்தளம் பகுதியளவு சேதமடைந்துள்ளதாகவும், பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூங்கே ரியில் உள்ள அந்த சோதனைத் தளத்தில் 2006ஆம் ஆண்டிலிருந்து ஆறு அணு ஆயுத சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அந்த தளத்தில் கடந்த செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட சோதனைக்கு பிறகு அடுத்தடுத்து ஏற்பட்ட நில அதிர்வுகளால் மலையின் உள்பகுதி சேதமடைந்தது என புவி ஆய்வு வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

சனிக்கிழமையன்று அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகளை நிறுத்தி வைப்பதாக வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் தெரிவித்திருந்தார்.

இந்த ஆச்சரியம் அளிக்கும் அறிவிப்பு தென் கொரியா மற்றும் அமெரிக்காவுடன் ஏற்பட்ட பேச்சுவார்த்தைக்கு பின் வந்தது.

வட கொரியாவின் வட கிழக்கு பகுதியில் உள்ள மலைப் பகுதியில் இந்த பூங்கே ரி தளம் அமைந்துள்ளது.

சீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆய்வு அறிக்கை ஒன்றில், செப்டம்பர் மாதம் நடைபெற்ற அணு ஆயுத சோதனைக்கு பிறகு அந்த மலைப்பகுதியில் சோதனை நடைபெறும் இடத்தில் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -10 )

# மட்டு - திருகோணமலை வீதி அவலநிலை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் கவலை



மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதி கடந்த காலத்தில் சீன நிறுவனம் ஒப்பந்தகாரர்களினால்

தொடர்ச்சி... (பக்கம் -10 )



# சாத்தியமானதை சாதிப்போம் : அதிலிருந்து முன்னேறுவோம்

## தமிழர் தரப்பு யதார்த்தத்தை மக்களிடம் பேசவேண்டும்

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன கட்சி முன்னணியை பெற்றமை, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானப் பிரேரணை, அதனைத் தொடர்ந்த அரசியல் நெருக்கடிகள் ஆகியவற்றால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டது தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள்தான்.

அதற்கு முன்னதாகவே அந்த முயற்சிகள் இழுபறியில்தான் இருந்த போதிலும், தற்போது அது கிட்டத்தட்ட ஒரு ஸ்தம்பித நிலையையே அடைந்துவிட்டது.



நல்லாட்சி அரசாங்கத்தோடு சேர்ந்து இந்த அரசியலமைப்பு உருவாக்கத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்கலாம் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கூறிய போது, அதற்கு தமிழர்களிம் சார்பிலான ஏனைய பல கட்சிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது. “அது சாத்தியமில்லை” என்று அவை கூறின. ஆனாலும், அதற்கு மாற்றாக சாத்தியமான தீர்வு திட்டம் எதனையும் அவை இதுவரை முன்வைக்கவில்லை. தாம் எதிர்க்கிறோம் என்பதை மாத்திரம் முன்வைத்து அதன் மூலம் அரசியல் செய்யவே அவை முயற்சித்தன.

அதேவேளை, இருக்கக்கூடிய வழிகளுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிய வழியே பொருத்தமானது என்று ஏனைய தரப்புக்கள் வாதிட்டன. அதில் தவறும் கிடையாது.

ஆனால், அந்த முயற்சிகள் முட்டுக்கட்டையை கண்டு, தான் சொன்ன காலப்பகுதிக்குள் தீர்வை காணமுடியாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுமாறிய போது, அந்தக் கட்சி யதார்த்த நிலையை மக்கள் முன் வைக்காததுதான் இங்கு சங்கடமான நிலவரமாகும்.

அரசியல் முயற்சிகளில் தமது முனைப்புக்கள் முடங்கும் நிலை உருவாகும் போது உரியவர்கள் அதனை மக்கள் முன் தெளிவாகக் கொண்டு போவதே எப்போதும் அறம் சார்ந்த அரசியலாக இருக்க முடியும். ஆனால், பொதுவாக வரக்கூடிய தேர்தல்களை கருத்தில் கொண்டு தாம், தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்டுவிடுவோம் என்ற அச்சத்தில், அரசியல் கட்சிகள் அதை செய்வது கிடையாது.

இங்கும் இந்த நிலைதான் சிக்கலை உருவாக்கியுள்ளது. தமது முயற்சிகளின் சாத்தியம் குறித்து முன்னதாகவே மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசத்தொடங்கியிருக்க வேண்டும்.

ஆனால், இன்று தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் இப்படியான ஒரு அரசியலமைப்பை கொண்டுவருவது, அதன் மூலம் இனப்பிரச்சினையை தீர்ப்பது எல்லாம், பெரும் சவாலாக மாறியுள்ள இந்த நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் மௌனம் சாதிப்பது அல்லது வேறு காரணங்களைக் கூறி அதனைப் பூசி மெழுகுவது மிகவும் மோசமான காரியம்.

அடுத்து வரக்கூடிய இரு வருடங்களில் இலங்கை நாடாளுமன்றத்தைக் கொண்டு அரசியலமைப்பு மாற்றத்தை செய்ய முடியாது என்பதை உணர்ந்த டெலோ அமைப்பின் செயலாலர் நாயகம் என். சிறிகாந்தா, இருக்ககூடிய இரு வருடங்களில் 13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்தியாவது ஏதாவது செய்து கொள்வோம் என்று கூறியிருக்கிறார்.

இன்றைய யதார்த்த நிலையில் இது வரவேற்கத்தக்க ஒரு கூற்றுத்தான். அடுத்து வரும் இரு வருடங்களில் எதிர்க்கட்சிகளின் அழுத்தங்களை சமாளிப்பதே ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அரசுக்கு போதும் போதும் என்றாகிவிடும். ஆக, அரசியலமைப்பு மாற்றத்தை, அதுவும் தமிழர்களுக்கு விடிவு தரக்கூடிய அப்படியான ஒன்றை கொண்டுவருவது என்பதை அவர் கனவுக்கூடக் காணமாட்டார்.

இந்த சூழ்நிலையில் அடுத்த இரு வருடங்களுக்கு என்ன செய்வது எதனைச் சாதிப்பது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியாக முடிவு செய்தாக வேண்டும். அந்த வழியில் சிறிகாந்தாவின் ஆலோசனை வரவேற்கத்தக்கதே.

ஆனால், இருக்கக்கூடிய யதார்த்தத்தை இன்னமும் மக்களுக்கு மறைக்க நினைக்கும் த.தே.கூட்டமைப்பு வேறு காரியங்களை சிந்திப்பதாக புரியமுடிகிறது.

தீர்வு முயற்சி இல்லையாயின் தமிழர் தாயகப் பகுதிகளில் அரச நிர்வாகத்தை முடக்கி போராடுவோம் என்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன். இது, தீர்வை அடைவதற்கான முயற்சியாக தெரியவில்லை. தமது முயற்சியின் தோல்வியை மறைக்க, மக்களை வேறு திசைக்கு திருப்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் நடவடிக்கையாகத்தான் தெரிகிறது.

நல்லாட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து தீர்வை காணலாம் என்று சொன்னது நீங்கள்தான். அதில் தவறில்லை. அடுத்தவர்கள் எதிர்த்தபோதிலும் அதனை நீங்கள் முயற்சித்தது இருக்கக்கூடிய வழிகளில் ஓரளவுக்கு சிறந்த வழிதான். ஆனால், அதன் பின்னடைவுக்கான யதார்த்தமான காரணங்களை மக்களிடம் பேசியிருக்க வேண்டும். அதனை நீங்கள் செய்யவில்லை. இப்போது தென்னிலங்கை நெருக்கடி இவற்றை மேலும் முடக்கிவிட்டது. இப்போது இருக்கும் அரசாங்கத்தால் அடுத்த இருவருடங்களில் அசையக் கூட முடியாத நிலை. அந்த யதார்த்தத்தையாவது மக்களுக்கு நேரடியாக கூற முன்வரவேண்டும்.

**பூபாலரட்ணம் சீவகன்**

அப்படி செய்திருந்தால் அதில் தவறு கிடையாது. இல்லை மாற்றுத் திட்டம் ஒன்றையாவது பிரேரித்திருக்க வேண்டும். அதுவுமில்லாமல், நிர்வாகத்தை முடக்குவோம் என்பது மக்களை ஏமாற்றும் செயல்.

தமிழர் மகாசபை என்னும் கட்சியின் தலைவரான டாக்டர். விக்னேஸ்வரன் கூட அரசியமைப்பில் மாற்றங்களை கொண்டுவர, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் இல்லாமல் செயற்படக்கூடிய ஒரு வழியை கூறியிருக்கிறார். அதன் முழுவடிவத்தை அவர் முன்வைக்க வேண்டும். அதுதான்

தொடர்ச்சி பக்கம் - 23



# கொழும்பில் வாழும் வடக்கு கிழக்கு தமிழர்களும் வாக்கு அரசியலும்

கொழும்பு நகரில் நீண்டகாலமாக வாழும் சுமார் 60 ஆயிரம் வடக்கு கிழக்கு தமிழர்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யவில்லை என தேர்த்லகள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் சமீபத்தில் கூறியிருந்தார்.

கொழும்பில் வாழும் வடக்கு கிழக்கு தமிழர்கள், தமது ஊர்களில் இடம்பெறும் அரசியல் செயற்பாடுகளில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றனர். ஆனால் கொழும்பில் அரசியல் ரீதியாக கட்சி அரசியலில் ஈடுபட விரும்புவதில்லை. அவ்வாறு கட்சி அரசியலில் ஈடுபடவேண்டுமானால் அவர்களுக்கு இரண்டு தெரிவுகள் மாத்திரமே உள்ளன. ஒன்று மனோ கணேசனுடைய கட்சியில் இணைந்து செயற்பட வேண்டும். அல்லது ஸ்ரீலங்கா சுத்திரக் கட்சி ஐக்கியதேசியக் கட்சி என்ற பெரும்பான்மை சிங்கள கட்சிகளுடன் சேர்ந்து செயற்பட வேண்டும்.

விரல் விட்டு எண்ணக்கூடிய குறிப்பிட்ட சிலர் மாத்திரமே கொழும்பில் கட்சி அரசியலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் மனோ கணேசனுடைய கட்சியில் அல்லது ஐக்கியதேசியக் கட்சியில் இணைந்து செயற்படுகின்றனர்.

ஆனால் உள்ளூராட்சி சபைத்தேர்தல் வரும் போது மாத்திரம் தமிழர்களில் அனேகமானோர் மனோ கணேசனுடைய கட்சிக்கு அல்லது மேற்படி இரு பெரும்பான்மை கட்சிகளில் ஒரு கட்சிக்கு வாக்களிக்கின்றனர். நாடாளுமன்றத் தேர்தல் வரும்போது ஐக்கியதேசியக் கட்சியில் போட்டியிடும் யாரவது ஒரு தமிழருக்கு பெரும்பாலும் வாக்களிக்கின்றனர். மாகாண சபைத் தேர்தலிலும் இதேநிலைதான். ஜனாதிபதித் தேர்தலில் நூற்றுக்கு 95 வீதமான தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே



வாக்களிக்கின்றனர்.

ஆக, 1994ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது மாத்திரம் அப்போதைய தமிழ் வாக்காளர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 90 வீதமான தமிழர்கள் சந்திரிக்காவுக்கு வாக்களித்தனர். அதைவிட வேறு எந்த சந்தர்ப்பத்திலும் தமிழர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்ததில்லை என தேர்தல்கள் திணைக்கள புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

ஆகவே இவ்வாறான நிலையில் கொழும்பில் வாழும் தமிழர்கள் அரசியல், பொருளாதார ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் சவால்கள் போன்றவற்றுக்கு எவ்வாறு தீர்வு காணப் போகின்றனர் என்பது இங்கு கேள்வியாகும்.

கொழும்பின் நிலை என்பது வடக்கு கிழக்கு மாகாணத்தை போன்றதல்ல. உள்ளக அபிவிருத்தி, சாதாரண குடிமக்களுக்கான சலுகைகள், நிவாரணங்கள் போன்றவற்றை எல்லாம் கட்சி அரசியலில் ஈடுபடுகின்றவர்கள் பெருமளவில், பாய்ந்து பதறி செய்ய வேண்டும் என்ற ஒரு தேவை கொழும்பு அரசியலில் இல்லை.

ஆக கொழும்பின் சேரிப்புறங்களில், கடற்கரை ஓரங்களில், உட்புற தோட்டங்களில் (சிங்கள மொழியில் கூறுவதானால் வத்தைகள்) வாழும் மக்களுக்கான தேவைகளை சிங்கள, மலையகத் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய தேவை உண்டு. ஆனால் இவ்வாறான இடங்களில் வடக்கு கிழக்குத் தமிழ் வாக்காளர்கள் வாழ்வதில்லை.

ஆகவே, கொழும்பு அரசியலில் ஈடுபடும், விரல் விட்டு எண்ணக் கூடிய வடக்கு கிழக்கு தமிழர்கள், மக்களை சந்தித்து தமக்கு வாக்க்ளியுங்கள் என்று மாத்திரமே கேட்பர். உறுதிமொழி வழங்க வேண்டிய அவசியம் எதுவும் அவர்களுக்கு இல்லை. ஏனெனில் கொழும்பு என்பது தலைநகரம். அரசாங்கம் நிச்சயம் அபிவிருத்திகளை செய்தே ஆக வேண்டும் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. ஆக யுத்தத்திற்கு முன்னரான காலத்தில் மாத்திரம் மனோ கணேசனுக்கு அல்லது அவருடைய கட்சிக்கு வடக்கு கிழக்கு தமிழர்கள் வாக்களித்தமை என்பது தமது பாதுகாப்பின் நிமித்தமே.

ஆனால் கொழும்பில் வாழும் தமிழர்கள் அனைவரும் மனம் வைத்து வாக்களித்தால் நிச்சயம் நாடாளுமன்றத்தில் மூன்று தமிழ் உறுப்பினர்களையும். கொழும்பு மாநகர சபையில் குறைந்தது 35 உறுப்பினர்களையும் கல்கிசை தெஹிவனை மாநகர சபைகளில் குறைந்தது 12 உறுப்பினர்களையும் மேல்மாகண சபையில் 22 உறுப்பினர்களையும் தெரிவு செய்ய முடியும்.

கொழும்பு மாவட்டத்தில் 15 இலட்சத்து 25 ஆயித்து 881 வாக்களர்களில் கொழும்பு நிர்வாக பிரதேசத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வடக்கு கிழக்கு தமிழ் வாக்களர்கள் உள்ளனர். அவர்களில் கொழும்பு மாநாகர எல்லைக்குள் மாத்திரம் ஒரு இலட்சத்து 21 ஆயிரம் வாக்களர்கள் உள்ளனர். ஆனால் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர, வேறு தேர்தல்களின் போது, கொழும்பில் வாழும் வடக்கு கிழக்கை சேர்ந்த மொத்த தமிழ் வாக்களர்களில் 40 சதவீதமானவர்கள் வாக்களிப்பதில்லையென தேர்தல் திணைக்கள புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதேவேளை கொழும்பு நகரில் நீண்டகாலமாக வாழும் சுமார் 60 ஆயிரம் வடக்கு கிழக்கு தமிழர்கள் தம்மை வாக்காளர்களாகவும் பதிவு செய்யவில்லை என தேர்த்லகள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் சமீபத்தில் கூறியிருந்தார்.

தலைநகரத் தமிழர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். வாக்குரிமையே நமது பலம்.

## 19 ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



**தோற்றம் :**
பரமக்குடி

**மறைவு :**
கொழும்பு

## காயம்பு கருப்பையா

எம்மை அவையத்துள் முந்தியிருக்கச் செய்து
நீர் மட்டும் திரும்பா இடம் சென்ற எமது தெய்வமே,
உமது கனவுகளை நாமும் உங்கள் பேரக்குழந்தைகளும்
சிரமேற்கொண்டு நனவாக்கி வருகிறோம்.
ஆனாலும் உங்கள் இடம் இன்றும் நிரப்ப முடியா
வெற்றிடமாகவே தொடர்கிறது.
தன்னிடத்தை நிரப்ப ஆண்டவன் உங்களை
அழைத்தான் போலும்.
என்றும் உங்கள் நினைவில்...

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனி, பேரக்குழந்தைகள்






# தமிழர்களின் தலைவர்கள் யார்? எவரால் சதிக்க முடியும்?

## மக்களால் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டதால் மாத்திரம் ஒருவர் தலைவராக முடியாது

சிவராசா கருணாகரன்

“தமிழர்களுக்கு மெய்யாகவே தலைமைத்துவம் உண்டா?” என்று ஒரு “வெடிகுண்டுக் கேள்வி”யைக் கேட்டார் நண்பர் ஒருவர்.

நண்பரின் கேள்வி நியாயமாகவே எனக்கும் தோன்றியது. இதைப்பற்றி நானும் பல தடவைகள் யோசித்திருக்கிறேன்.

ஏனென்றால், ஒரு அரசியற் தலைமைக்கு கூர்மையான அரசியலுணர்வு, உலக அரசியல் தெளிவு, வரலாற்றறிவு, தமது மக்கள் மீதான நேசிப்பு, திட்டமிடல் - செயற்பாட்டுத்திறன், அர்ப்பணிப்பு, எளிமை, கருணை, மனிதநேயம், பிற சமூகத்தினரும் மதிக்கக்கூடிய நற்குணங்கள், சிக்கனம், நிர்வாகத்திறன், ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை, ஜனநாயகத்தை நடைமுறையில்



பிரயோகப்படுத்தும் உறுதிப்பாடு, எதிர்க்கட்சி மற்றும் எதிர்த்தரப்பினரையும் மதித்து நடக்கும் மாண்பு போன்ற அடிப்படைகள் அவசியமாகும்.

இத்தகைய அடிப்படைகளைப் பெற்றுள்ள ஆளுமைகள் என்று நமது தமிழ்த்தலைமைகளில் இப்பொழுது யாரை, யார் அடையாளப்படுத்தப்போகிறீர்கள்?

– செயற்பாட்டுப் பரப்பில் வைத்துச் செயற்படுகின்ற தலைமையோ கட்சியோ அமைப்போ இயக்கமோ இன்று உள்ளதா?

“ஏன் இருக்கின்றவை எல்லாம் தமிழர்களின் தலைமை இல்லையா?” என்றொரு அதிரடி – பதிலடிக் கேள்வியை நீங்கள் பதிலுக்குக் கேட்கக் கூடும்.

“சம்மந்தன், விக்கினேஸ்வரன், டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான் என்கிற சந்திரகாந்தன், வரதராஜப்பெருமாள், சுரேஸ் பிரேமச்சந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சந்திரகுமார், கஜேந்திரகுமார், சுமந்திரன், மாவை சேனாதிராஜா, கருணா என்கிற முரளிதரன் என்றொரு பெரிய பட்டியலை யாரும் இந்த இடத்தில் தமிழ்த்தலைமைகளாக உச்சரிக்கலாம்.

இதில் சிலவற்றை சிலர் நிராகரிக்கக்கூடும். சிலவற்றை ஏற்றுக் கொண்டாடலாம். எல்லாவற்றையும் நிராகரித்து விட்டு, தங்களுக்கு விருப்பமான, தாம் ஏற்றுக்கொண்ட, தாங்கள் நம்புகின்ற ஒரு பெயரை மட்டும் குறிப்பிடலாம்.

இப்பொழுது இதுதான் நடந்து கொண்டுமிருக்கிறது.

தற்போதைய தமிழ் அரசியற் களத்தில் இவர்கள் எல்லோரும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அந்த அடிப்படையில் இவர்களுக்கென்று கட்சிகளும் ஆதரவாளர்களும் கூட உள்ளனர் என்பதும் உண்மையே.

ஆனால், முன்சொல்லப்பட்ட அடிப்படைகள் இதிலே உள்ளவர்களிடம் இல்லை என்று துணிந்து கூற முடியும். சிலரிடம் சில அடிப்படைகள் உண்டு. குறிப்பிட்டளவுக்கு நற்குணங்களும் நல்லியல்புகளும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. அது ஒரு தலைமையை முழுமைப்படுத்தாது.

மட்டுமல்ல, முன்னே எழுப்பப்பட்டிருக்கும் கேள்விகள் கொண்டிருக்கும், கோரியிருக்கும் அரசியல் அல்லது சமகால, எதிர்கால வரலாற்றுத் தேவைகளை உணர்ந்து அகன்ற தளத்தில் செயற்பட வேண்டும் என்ற சிந்தனை எவரிடத்திலும் இல்லை என்பேன்.





இதனால்தான் இவர்கள் சமகாலத்திலேயே அளவுக்கதிகமான அளவுக்கு விமர்சிக்கப்படுகிறார்கள். கண்டனத்திற்குள்ளாகிறார்கள். எதிர்ப்புக்கும் நிராகரிப்புக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள்.

“ஏன், இவர்களில் பலர் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்களே! கட்சித்தலைவர்களாகவும் மக்கள் தலைவர்களாகவும் தொடர்ந்தும் இருக்கிறார்கள் அல்லவா? இதனை எப்படி உங்களால் நிராகரிக்க முடியும்?” என்று இன்னொரு பதிலடிக் கேள்வியை நீங்கள் தடுப்பரணாக முன்னிறுத்துகிறீர்கள்.

“மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுவதொன்றும் அரசியல் வெற்றிக்கான அடையாளமல்ல. தேர்தலின்போது ஒவ்வொரு கட்சியும், ஒவ்வொரு வேட்பாளரும் செயற்படுகின்ற முறைகளை ஒரு கணம் இந்த இடத்தில் சிந்தித்துப் பாருங்கள். வெற்றியைப் பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு தரப்பும் எவ்வளவு தரக்குறைவாக, கீழ்த்தரமாக நடந்து கொள்கின்றன என்பது தெளிவாகும்.

தேர்தல் என்றால் அப்படித்தான். இதெல்லாம் தவிர்க்க முடியாது என்று சொல்லி இலகுவாகக் கடந்து சென்று விடமுடியாது.

அரசியல் தலைமைத்துவம் என்பது சிந்தனையினாலும் செயற்பாட்டினாலும் ஆளுமையாக எழுந்து – உயர்ந்து நிற்பதாகும். அதேயளவுக்கு மக்களில் கலந்தும் கரைந்தும் கொள்வதாகும்.

இத்தகைய பேராற்றலும் பேராளுமையும் கொண்டிருக்கும் தலைமையினாலேயே அரசியல் வரலாற்றை உருவாக்க முடியும்.

**இப்போது பெயர் குறிப்பிடும் வகையில் உள்ளவர்கள் எல்லாம் முழுமையான தலைவர்கள் இல்லையா?**

**வடக்குக் கிழக்கின் பல்வேறு சிக்கல்கள் நிறைந்த சமூக, அரசியல், வரலாற்று, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளை - யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ற வகையில் தமது அரசியலை வரைய வேண்டும்.**

குறைந்த பட்சம் சமூகத்தில் என்ன நடக்கிறது? மக்கள் எதைப்பற்றிச் சிந்திக்கிறார்கள்? அவர்களுடைய விருப்பம் என்ன? அவர்கள் எவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதிருக்கின்றனர்? அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்ன?

நாட்டின் அரசியல் சூழல் எத்தகையதாக உள்ளது? அதில் எவ்வாறு இடையீடு செய்து மாற்றங்களை உண்டாக்க முடியும்? அதற்கான பொறிமுறைகள் என்ன? அதை நடைமுறைப்படுத்துவது எப்படி? அதற்கான பொறுப்புகளை யார் ஏற்றுக்கொள்வது? அதை வழிப்படுத்துவது யார்?

பிற சமூகத்தினருடன் உரையாடல்களை நடத்த வேண்டும். அதை எந்த அடிப்படையில் நடத்துவது? அதில் ஏற்படும் வளர்ச்சி, முன்னேற்றங்கள், உண்டாகும் பிரச்சினைகள் அல்லது நெருக்கடிகளை எப்படி எதிர்கொண்டு சீராக்குவது? என்றெல்லாம் கவனித்துச் செயற்படுத்த வேணும்.

இதையெல்லாம் தமது அரசியலில்





தன்முன்னே உள்ள நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணும் ஒரு தலைமையே சிறந்தாக இருக்கும். எத்தகைய சவால்களையும் அதற்குரிய திறனுடன் எதிர்கொண்டு முன்னேறும் தரப்பே சிறந்த தலைமையைக் கொண்டிருக்கும்.

தமிழ்த்தலைமை (தலைமைகள்) வடக்குக் கிழக்கின் பல்வேறு சிக்கல்கள் நிறைந்த சமூக, அரசியல், வரலாற்று, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளை - யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ற வகையில் தமது அரசியலை வரைய வேண்டும்.

அப்படிச் செயற்படக் கூடிய தலைமை எது?



# வடகொரியாவும் அமெரிக்காவும் கிட்டத்தட்ட தெருச்சண்டியர்கள் மாதிரி

## தெலுங்குப் பட வில்லன்கள் போல் ஏய்ய்.... ஏய் என்று கத்திவந்தவர்கள்



அண்மைய நாட்கள் வரை வடகொரியாவும், அமெரிக்காவும் கிட்டத்தட்ட தெருச்சண்டியர்கள் போல வாய்சண்டையில் ஈடுபட்டு வந்திருந்தனர். போதாக்குறைக்கு புதிதாக பதவிக்கு வந்த ரொனால்ட் டிரம்பும் சின்னப் பையன் போன்ற வடகொரிய தலைவர் கிம்யொங் உன்னும் பெரும் அட்டகாசம் செய்தனர்.

ஏதோ அடுத்த உலகப்போர் வந்துவிடும், ஒருவர் மீது ஒருவர் அணு ஆயுதத் தாக்குதலை ஆரம்பித்துவிடுவார்கள் என்று எல்லோரும் அஞ்சும் அளவுக்கு அவர்களின் வீராவேசப் பேச்சுக்கள் இருந்தன.

**இப்போது திடீரென்று சமாதானம் பேசுகிறார்கள்**

ஆனால், இப்போது நிலைமை அப்படியே மாறிவிட்டது. நேற்று வரை சண்டைபோட்டுக்கொண்ட மூன்றாம் வகும் மாணவர்கள் ஒருவருக்கு ஒருவர் நேசம் சொல்லிக்கொண்டது போல இருவரும் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கிறார்கள். ஏன் இந்த கூத்து என்பது ஒருபுறம் கேள்வியாக இருந்தாலும் இந்த வடகொரிய பிரச்சினையை புரிந்துகொள்வதும், அதனை வாசகர்களுக்கு சொல்வதும் இப்போது அவசியமான ஒன்றாகவும் இருக்கிறது.

அடிக்கடி அணுஆயுத சோதனைகளை நடத்தியும், அணுஆயுத போரை ஆரம்பிக்கப்போவதாக அச்சுறுத்தியும் வந்த வட கொரியா தனது நிலைப்பாட்டில் மிகப் பெரிய மாற்றங்களை செய்வதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. இந்நிலையில், பல ஆண்டுகாலமாக நிலவி வரும் இந்த பிரச்சனையின் பின்னணியை இங்கு பார்ப்போம்.
இரண்டாம் உலகப்போருக்கு பின்பு கொரிய தீபகற்பம் இரண்டாக பிரிந்தது. கம்யூனிஸ நாடான வட கொரியா, ரஸ்யாவின் ஸ்டாலின் உருவாக்கிய சர்வாதிகார அமைப்பை ஏற்றுக்கொண்டு கட்டமைக்கப்பட்டது.

அதனால், உலக மேடையில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் தனது நாட்டை அழிக்க நினைக்கும் மற்ற உலக நாடுகளிலிருந்து தன்னை தற்காத்து கொள்வதற்கான ஒரே வழி அணுஆயுதங்கள்தான் என்று அந்நாடு கூறுகிறது. அதனாலேயே அது அணு ஆயுதத்தை தயாரிக்க முனைப்புக் கொண்டது.

அப்படி இருந்தாலும் ஒரு அணு ஆயுதத் தாக்குதலை வட கொரியாவால் நடத்த முடியுமா என்ற கேள்வியும் இங்கு முக்கியமாகின்றது. அதற்கு பதில் செய்யும் ஆனால் செய்யாது என்பதுதான்.

ஒருவேளை அணுத்தாக்குதலை அது நடத்தலாம், ஆனால் வாய்ப்பு இல்லை. வட கொரியா இதுவரை ஆறு அணுசக்தி சோதனைகளை நடத்தியுள்ளது. அதில் ஒன்று ஹைட்ரஜன் குண்டுச் சோதனை என்று அது கூறுகிறது.

தொலைதூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணையில் பொருத்தக்கூடிய அளவுக்கு சிறிய ரக அணுகுண்டை உருவாக்கியுள்ளதாக வட கொரியா கூறினாலும் அது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

வட கொரியாவிலிருந்து நேரடியாக அமெரிக்காவை சென்று தாக்கும் வல்லமை கொண்ட கண்டம் விட்டு கண்டம் தாவும் பாலஸ்டிக் ரக ஏவுகணையையும் அந்நாடு கொண்டுள்ளதாக வல்லுனர்கள் நம்புகின்றனர்.

வட கொரியாவின் இந்த நடவடிக்கைகளை கண்டித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் போன்றவை பலவிதமான தடைகளை விதித்துள்ளன.

தென் கொரியா மற்றும் ஜப்பானை குறிவைத்தே வட கொரியா தனது ஏவுகணைகளை தயாரிக்கிறது. வட கொரியாவின் தற்காப்பு தாக்குதல் பேரழிவை ஏற்படுத்தும் பதிலடியாக இருக்கலாம். அதன் காரணமாக எண்ணற்ற வட கொரியர்கள்கூட உயிரிழக்க நேரிடலாம்.

ஆசியக் கண்டத்தின் மிகப் பெரிய சக்தியாக விளங்கும் சீனா, கொரியக் குடாவில் இருக்கும் இரு கொரியாக்களுக்கு இடையே நிலவும் சூழ்நிலையை எண்ணி கவலையடைந்துள்ளது. அதாவது, இரு



கொரியாக்களில் ஏதாவது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரு கொரியாக்களும் இணையும் பட்சத்தில், தற்போது தென் கொரியாவில் இருக்கும் அமெரிக்க படைகள் தனது எல்லைப்பகுதியை நோக்கி வரக்கூடும் என்று சீனா அஞ்சுகிறது.

இது உண்மையில் நேற்று இல்லாத ஒரு மாற்றந்தான் இரு கொரியாக்களுக்கும் இடையில் இதற்கு முன்பு நடந்த ஆயுத குறைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் தோல்வியையே சந்தித்துள்ளன. இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் தென் கொரியாவுடன் பேச்சு நடத்திய வட கொரியா, அதன் பிறகு தென்



கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியிலும் பங்கேற்றது.

அத்தோடு, அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயார் என்று வட கொரியா விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அதிபர் டிரம்ப், தாங்கள் அணுஆயுத குறைப்பை உறுதிசெய்யும் நடவடிக்கைளை ஆதரிப்பதாக தெரிவித்தார்.
அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் வட கொரிய தலைவர் கிம் யொங்-உன் இடையிலான சந்திப்பு குறித்த தகவல்கள், திட்டம் மற்றும் காலநேரம் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை.

ஆனால், இங்கு விடயம் என்னவென்றால் டிரம்ப் மற்றும் யுங் உன் இருவருமே, அடுத்த அடுத்த தெருவைச் சேர்ந்த சண்டியர்கள் போலத்தான் இதுவரை நடந்துகொண்டிருக்கிறார்கள். கோபம் என்று கூறுவது, நேசம் என்று கூறுவதும் அப்படித்தான். கிட்டத்தத்தட்ட தெலுங்கு சினிமா வில்லன்களைப் போல் தான் இவர்கள் இருவரும். ஏய், ஏய்.... ஏஏய் என்று மிரட்டுவார்கள். ஆனால் அடித்துக்கொள்வார்கள் என்று சொல்வதற்கில்லை. உண்மையில் இதுவரை பலவீனமாக உணர்வது யார் என்று எவருக்கும் தெரியவில்லை. வாய்சவடாலிலேயே காலத்தை கடத்துகிறார்கள். யாராவது ஏதாவது சூழ்ச்சியை வைத்திருக்கிறார்களா, அது பெரிய திட்டமா என்பதை எல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.






# காஸ்ட்ரோவின் கம்யூனிஸம் சரிக்கிறதா ?

ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்குப் பிறகு கியூபாவில் காஸ்ட்ரோக்களின் சகாப்தம் முடிவுக்கு வந்திருக்கிறது.

கம்யூனிசப் புரட்சியின் நாயகன் ஃபிடல் காஸ்ட்ரோவின் சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ, முதல் முறையாக காஸ்ட்ரோ குடும்பத்தைச் சாராத மிகயேல் டியேஸ்-கனேலிடம் நாட்டின் தலைமைப் பொறுப்பை கைமாற்றியுள்ளார்.

உலக ஜனநாயகம் மற்றும் முதலாளித்துவத்தின் விடிவெள்ளியாக தம்மைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்காவுக்கு மிக மிக நெருக்கத்தில், அதன் வாசற்கதவில், 1959-ஆம் ஆண்டு முதல் கம்யூனிஸத்தை எஃகுக் கோட்டையைப் போல் கட்டிக் காத்து



வந்த ஃபிடல் காஸ்ட்ரோவின் மறைவுக்குப் பிறகும், கம்யூனிசப் புரட்சியின்போது ஃபிடலுடன் தோளொடு தோள் நின்றுப் போரிட்ட அவரது சகோதரர் ரவுல் காஸ்ட்ரோவின் ஓய்வுக்குப் பிறகும்,



கியூபா தற்போதுதான் முதல்முறையாக முற்றிலும் புதியவர் ஒருவரின் கைகளுக்கு வந்துள்ளது.

தற்போது புதிய அதிபராகப் பொறுப்பேற்றிருக்கும் மிகயேல் டியேஸ்-கனேல், கியூபாவில் கம்யூனிசப் புரட்சியின் குண்டு ஓசைகளெல்லாம் அடங்கியதற்குப் பிறகு பிறந்தவர்.

57 வயதாகும் அவருக்கு, சமீபத்திய பொருளாதார தாராளமயாக்கலின் விளைவாக சில வசதிகளில் மேம்பட்டுள்ள, அதே நேரம் கம்யூனிஸக் கொள்கைகளால் கடும் பொருளாதாரச் சுமையை தலையில் சுமந்து கொண்டிருக்கும் நாட்டின் தலைமைப் பொறுப்பு தரப்பட்டிருக்கிறது.

தற்போதைய நிலையில், மொத்த மக்கள் தொகையில் 75 சதவீதம் பேர் அரசுப் பணியாளர்கள் என்ற நிலையில், கியூபா மக்களின் சராசரி மாத வருவாய் வெறும் 31 டாலராக (சுமார் ரூ.2,000) உள்ளது.

இதன் காரணமாக, பொருளாதாரச் சிக்கலில் இருந்து விடுபடுவதற்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் புதிய அதிபருக்கு உள்ளது.

சொல்லப்போனால், கியூபாவில் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன.

ஃபிடல் காஸ்ட்ரோவுக்குப் பிறகு அதிபரான ரவுல் காஸ்ட்ரோ, தனது முந்தைய ஆட்சியாளரின் ஆட்சியின்



போது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சில சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

பொருளாதாரச் சீரழிவிலிருந்து நாட்டைக் காக்க தனியார் நிறுவனங்களை அனுமதித்தார். எனினும், அரசுத் துறை நிறுவனங்களுக்கு சவால் விடும் அளவுக்கு வளர்ந்த பிறகு, தனியார் நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன.

இந்த நிலையில், புதிய தலைமுறைத் தலைவரான டியெஸ்-கனேல், முந்தைய காஸ்ட்ரோக்களைவிட அதிக சீர்திருத்தங்களை மேற்கொள்வார் என்று சிலர் தெரிவிக்கின்றனர்.
எனினும், கம்யூனிஸத்தில் ஊறிய அவர் காஸ்ட்ரோக்களின் பாதையை அவ்வளவு எளிதில் மாற்றிவிட மாட்டார் என்றும் மற்றொரு தரப்பினர் எச்சரிக்கின்றனர்.

சில முற்போக்கு அணுகுமுறையைக் கொண்டிருந்தாலும், மிகயேல் டியேஸ்-கனேலை ரஷியாவின் மிகயீல் கோர்ப்பசேவ் போன்ற சீர்திருத்தவாதியாகக் கருதிவிட முடியாது என்கிறார்கள் அவர்கள்.

கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான டியெஸ்-கனேலின் நிலைப்பாட்டையும், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பில் ரவுல் காஸ்ட்ரோ தொடர்வதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே, கியூபாவில் புதிய தலைமையின்கீழ் முன்பைவிட பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியுமே தவிர, அந்த நாட்டில் கம்யூனிஸத்துக்கு அவ்வளவு சீக்கிரம் முடிவு கட்டப்படாது என்கிறார்கள் அவர்கள்.

# பனியால் விமானந்தாங்கி கப்பல் செய்யும் ரகசிய திட்டம்

## ஒரு பிரிட்டிஷ் பொறியியலாலரின் ஹபக்குக் திட்டம்



ஹபக்குக் திட்டம் என்பது பனியால் ஆன ஒரு விமானந்தாங்கி கப்பலை அல்லது ஒரு போர் விமானங்கள் இறங்கக்கூடிய தீவை உருவாக்குவதற்கான திட்டம்.

இரண்டாம் உலகப்போரின் போது, அத்திலாந்திக் கடற்பரப்பில் ஜேர்மனிய யூ- போட் என்னும் நீர்மூழ்கிகளால் பிரிட்டன் பெரும் சேதத்தை எதிர்கொண்டிருந்த காலம் அது. ஜேர்மனியின் இந்த



யூ போட் அல்லது யூ- பூட் என்னும் நீர்மூழ்கிகள் அத்திலாந்திக் கடற்பரப்பில் பிரிட்டனின், குறிப்பாக கடல் மூலமான விநியோகத்துக்கு பெரும் சவாலாக உருவெடுத்திருந்த காலம் அது.

கனடாவிலும் பிரிட்டனின் ஏனைய காலனி நாடுகளில் இருந்தும் அமெரிக்காவில் இருந்தும் அத்திலாந்திக் கடல் மூலம் பிரிட்டனுக்கான இராணுவ மற்றும் வணிக விநியோகங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. போரில் இருந்த பிரிட்டனுக்கு இந்த விநியோகங்கள் மிக அத்தியாவசியமானவை. ஆனால், ஜேர்மனியின் யூ- போட்டுகள் கடலில் வரும் விநியோகக் கப்பல்களை தாக்கி அழித்து வந்தன. இது பிரிட்டனுக்கு பெரும் சிக்கலாக மாறியது.

அந்த யூ-போட் நீர்மூழ்கிகளை ஆழ்கடலில் சென்று காத்திருந்து அழிக்க விமானதாங்கி கப்பல்கள் பிரிட்டனுக்கு தேவைப்பட்டன. ஆனால், அப்படியான கப்பல்களை தயாரிப்பதற்கான ஸ்டீல்(எஃகு) மற்றும் அலுமினியம் கிடைப்பது அந்தக் காலகட்டத்தில் சிரமமாக இருந்தது.

ஆகவே பிரிட்டன் என்ன செய்வது என்று தடுமாறிக்கொண்டிருந்த போதுதான் பிரிட்டனின் கூட்டு நடவடிக்கை தலைமையகத்துக்கு ஜெஃப்ரி பைக் என்ற நிபுணரிடம் இருந்து ஒரு வித்தியாசமான பரிந்துரை வந்தது.

ஜெஃப்ரியின் பரிந்துரையின்படி ஐஸ்கட்டிகளை அதாவது பனிக்கட்டிகளை மரக்கூளுடன் சேர்த்து இப்படியான விமானந்தாங்கிக் கப்பலை செய்து அவற்றை அத்திலாந்திக் கடலில் நிறுத்துவது என்பது திட்டம். இதுதான் அப்போது பிரபலமாக பேசப்பட்ட "ஹபக்குக் திட்டம்". இந்தத் திட்டம் அப்போது பிரிட்டனின் கூட்டு நடவடிக்கை தலைமையகத்தின் தலைவராக இருந்த மவுண்ட் பேட்டன் பிரபுவுக்கு பிடித்துவிட்டது.

அவர் பரிந்துரைக்க பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலுக்கும் அது பிடித்து விட்டது. ஒரு பெரும் ரக்சிய திட்டமாகவும் அது பேணப்பட்டது.

அந்தத் திட்டத்தின்படி கட்டப்படவிருந்த ஐஸினால் ஆன, விமானந்தாங்கி கப்பலின் நீளம் 2013 அடி. எடை 18 லட்சம் தொன். ஆனால், இன்றுள்ள பெரிய கப்பல் 1607 அடி நீளமும், 6 லட்சம்



தொன் எடையும் உள்ளது.

அதில் உள்ள ஐஸ் (பனி) உருகாமல் இருக்க பாரிய குளிர்பதனியும் அதில் இருக்கும். குண்டு தாக்குதல்களை எதிர்கொள்ளக் கூடிய வல்லமையுடன் இதனை நிர்மாணிக்க ஜெஃப்ரி பைக் திட்டமிட்டார்.

திட்டம் அங்கீகரிக்கப்பட, அதன் மாதிரி ஒன்று கனடாவின் பற்றீசியா ஏரியில் செய்யப்பட்டது. ஆனால், அந்த திட்டம் 1945 வரை செய்து முடிக்கப்படாது என்றும் அதற்கு ஒரு கோடி பவுண்டுகள் செலவாகும் என்றும் தெரியவர, வின்ஸ்டன் சேர்ச்சில் அதனை கைவிட உத்தரவிட்டார். 1944 இல் அந்த மாதிரி கைவிடப்பட்டது.



யூ போட்டுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு போர்த்துக்கல்லின் விமான தளங்களை பயன்படுத்த அனுமதி தரப்பட்டமை, நீண்ட தூர பறப்புக்கு ஏதுவான பெற்றோல் தாங்கிகள் கிடைத்ததால், அத்திலாந்திக்கில் நீண்ட கடல் ரோந்துக்கு வழி ஏற்பட்டமை, பாதுகாப்பு கலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்ககூடியதாக இருந்தமை ஆகியவையும் இந்த திட்டத்தை கைவிட காரணமாக அமைந்தன.

# 80 வயதிலும் சதிர் நடனம் ஆடும் தேவதாசி மரபின் கடைசி வாரிசு

## இதுவும் தமிழர் பின்பற்றிய ஒரு பாரம்பரியந்தான் : பெருமைகொள்ள முடியுமா?

தேவதாசி முறை சென்னை மாகாணத்தில் (தற்போதைய தமிழகத்தையும் உள்ளடக்கியது) 1947ம் ஆண்டு ஒழிக்கப்பட்டபின்பு அந்த முறையின் கீழ் கோயில்களில் நடனமாடி வந்தவர்களில் ஒருவர் மட்டுமே தற்போது எஞ்சியுள்ளார். தற்போது ஒழிக்கப்பட்டுவிட்ட தேவதாசி மரபின் கடைசி வாரிசாகப் பார்க்கப்படும் 80 வயது முத்துக்கண்ணம்மாள் இன்றும் சதிர் நடனம் ஆடுகிறார்.

பொட்டு கட்டி கோயில்களில் கடவுள்களுக்கு மனைவியாக்கப்பட்டவர்கள் தேவதாசிகள் அல்லது தேவரடியார்கள் எனப்பட்டனர். இவர்கள் கோயிலில் சதிர் நடனம் ஆடினர். இந்த முறை பெண்களின் வாழ்க்கையை சீரழித்த காரணத்தால் 1947ம் ஆண்டு அப்போதைய சென்னை மாகாணத்தில் தேவதாசி முறையை ஒழிக்க சட்டம் கொண்டுவரப்பட்டது.

விராலிமலையைச் சேர்ந்த முத்துக் கண்ணம்மாளின் உடலில் வயதுக்கான தளர்வு இருந்தாலும் சதிர் நடனத்தின் மீதான ஆர்வமும் பற்றும் அவரை இன்றும் ஆடத் தூண்டுகின்றன. தாளத்திற்கு பாடிக்கொண்டே ஆடுகிறார்.

ஏழு வயதில் விராலிமலை சுப்ரமணியசாமிக்கு பொட்டுக்கட்டிவிடப்பட்ட இவர், ஆங்கிலேயர் காலத்தில், புதுக்கோட்டை சமஸ்தானத்தால் அங்கீகரிக்கப்பட்ட 32 தேவரடியார்களில் ஒருவராக இருந்தார்.



1947ஆம் ஆண்டில் தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்த பின்னர் கோயில் சேவகத்தைப் பலர் நிறுத்திவிட்டாலும், தான் மட்டும் நடனம் ஆடுவதை நிறுத்தவில்லை என்றும் அதை இன்றும் தொடர்வதாகவும் கூறுகிறார் அவர்.

### ஏழு வயதில் தொடங்கிய நடனம்

"ஏழு வயதில் ஆரம்பித்த நடனம், எப்போதும் என் கால்கள் ஆடுவதையும், என் நாவு பாடுவதையும் நிறுத்தமுடியாது. சுப்ரமணியசாமியே (கடவுள்) என்னைப் போன்ற 32 தேவரடியார்களுக்கும் முதல் கணவன். இறைவனை துதித்துப் பாடவும், ஆடவும் நாங்கள் பிறந்துள்ளோம் என்று என் பாட்டி சொல்லுவார். தினமும் 400 படிக்கட்டுகள் ஏறிப்போய் காலையும், மாலையும் சுப்ரமணியசாமியைப் பாடி, வணங்கிவிட்டு வரவேண்டும்,"" என்று கூறுகிறார் முத்துக்கண்ணம்மாள்.

"""அதிகாலை ஆடல் பயிற்சி, வழிபாடு, பள்ளிப் படிப்பு, மாலை நடனப்பயிற்சி, வழிபாடு என ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு சேவகம் செய்வதே எங்கள் பிறப்பின் நோக்கமாக



முன்னோர்கள் சொல்லிப் போனார்கள். தற்போது உடல் தளர்ச்சியால், தினமும் செய்ய முடியாவிட்டாலும், திருவிழா காலங்களில் சாமிக்கு பாடுவதும், ஆடுவதும் என் கடமை என்றே என் மனம் சொல்கிறது, அதையே செய்கிறேன்,"" என தனது தினசரி வாழ்க்கையை முத்துக்கண்ணம்மாள் விவரித்தார்.

### கோயில்களில் முதல் மரியாதை

முத்துக்கண்ணம்மாளின் மகள் கண்ணாமணி தனது தாய் கோயில் சேவகத்திற்காக நடனம் ஆடிய காட்சிகள் இன்றும் தன் நினைவில் பசுமையாக உள்ளதாக கூறுகிறார்.

"""தை மற்றும் மாசி மாதங்களில், விராலூர் கிராமத்தில் சுப்ரமணியசாமி கோயில் தேர்த் திருவிழாவில், தாத்தா பாடுவார், அம்மா நடனம் ஆடுவார். ஊரில் உள்ள பெரியவர்கள் வந்து மரியாதை செய்து, அம்மாவுக்கு பட்டுப்புடவை தருவார்கள்"" என்று தனது அம்மாவின் கச்சேரியைப் பார்த்த அனுபவங்களை கண்ணாமணி விபரித்தார்.

முத்துக்கண்ணம்மாள் சதிர் நடனம் ஆடுவதற்கு வெகு குறைவான வாய்ப்புகளே இருந்ததாலும், தனது தாயிடம் இருந்து கற்றுக்கொண்டு தனக்கான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியாது என்பதாலும், தேவரடியார்களுக்கு எந்த அங்கீகாரமும் இல்லாததாலும், தான் நடனம் கற்றுக்கொள்ளவில்லை என்றும் கூறுகிறார் கண்ணாமணி.

ஏழு தலைமுறையாக தேவரடியாராக இருந்த குடும்பத்தில் இனி யாரும் சதிர் நடனம் ஆடப்போவதில்லை என்பது முத்துக்கண்ணம்மாளுக்கு வருத்தம் தரும் விஷயமாகிவிட்டது.

தற்போது வாய்ப்பு கிடைக்கும் மேடைகளில் சதிர் நடனம் ஆடி, தேவரடியார்களின் வரலாற்றை இளைஞர்களிடம் கூறிவருகிறார் இந்த மூத்த சதிர் நடனக்கலைஞர்.

### தந்தைக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை

சென்னையில் தக்சின் சித்ரா காலசார மையத்தின் 2018ஆம் ஆண்டின் "தக்சின் சித்ரா விருது" நிகழ்வில் தனது வாழ்க்கை குறித்துப் பேசியதோடு அல்லாமல், சதிர் நடனத்தையும் முத்துக்கண்ணம்மாள் ஆடிக்காட்டினர். நிகழ்ச்சியைப் பார்க்க வந்திருந்த தொழில்முறை நடனம் பயிலும் பல பெண்களை தன்னுடன் கும்மியடி நடனம் ஆடவைத்தார். நொட்டுஸ்வரம் (முத்துசாமி தீக்ஷிதர் வடிவமைத்த, அயர்லாந்து நாட்டு இசை மெட்டுகளை கர்நாடக இசையில் பாடும் முறை), பாம்பு நடனம் மற்றும் விராலிமலை குறவஞ்சி ஆகியவற்றில் சில நடன அசைவுகளை விளக்கமாக இளைய தலைமுறையினருக்கு எடுத்துரைத்தார்.

"விராலிமலை கோயிலில் நான் உள்ளிட்ட 32 தேவரடியார்களுக்கும் குருவாக நடனம் சொல்லித்தந்தவர் என் அப்பா ராமச்சந்திரன். விராலிமலை குறவஞ்சியை ஆசைப்பட்டு கேட்ட எல்லோருக்கும் சொல்லிக்கொடுத்தார். அவரிடம் நடன அசைவுகளைக் கற்றுக்கொண்ட பரதக்கலைஞர்கள், அவருக்கான அங்கீகாரத்தை அளிக்காமல் போய்விட்டார்கள் என்ற வருத்தம் எனக்கு அதிகமாகவே உள்ளது,""என்று தனது தந்தைக்கான அங்கீகாரத்திற்காக போராடவேண்டிய நிலை குறித்து முத்துக்கண்ணம்மாள் குறிப்பிட்டார்.



80 வயதிலும், பாடிக்கொண்டே, பாடலுக்கேற்ற பாவத்துடன், அவர் நடனம் ஆடியபோது, நிகழ்ச்சியைப் பார்த்த பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

பரதநாட்டியம் பயிலும் மாணவிகளும், ஆசிரியர்கள் பலரும் முத்துக்கண்ணம்மாளுடன் பாடிக்கொண்டே ஆட முயற்சித்து களைப்புற்றனர்.

### சதிர் - பரதநாட்டியம் என்ன வித்தியாசம்?

பரத நாட்டியம் தமிழகத்தின் முக்கியமான கலாசார நடனமாக அறியப்பட்டு, பரதக் கலைஞர்கள் உலகளவில் பல மேடைகளில் ஆடுவது மகிழ்ச்சி அளிக்கிறது என்ற போதிலும், பரதத்தின் தொடக்க வடிவமான சதிர் நடனம் அழியும் தருவாயில் இருப்பதை எண்ணி வருத்தப்படுகிறார் முத்துக்கண்ணம்மாள்.

நவீன கால பரத நாட்டியத்திற்கும், சதிர் நடனத்திற்கும் இருக்கும் வித்தியாசங்களைப் பற்றி பேசிய அவர், """சதிர் நடனத்தில் நாங்கள் பாடிக்கொண்டே ஆடுவோம். நம் நடனத்திற்கு ஏற்றவாறு நாமே பாடவேண்டும் என்பது அடிப்படை பயிற்சி. ஒரு பாடலை புரிந்துகொண்டு ஆடுவது என்பதைத் தாண்டி, அந்த பாடலே நாமாக மாறிக்கொண்டு, முகபாவங்களைக் கொண்டும், உடல் அசைவுகளைக் கொண்டும் இயல்பாக நாங்கள் ஆடுவோம். பாடிக்கொண்டே ஆடுவது என்பது சதிர் நடனத்தின் முக்கிய அங்கம். சதிர் நடனத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பரதநாட்டியத்தில் நட்டுவனார் என்ற கலைஞர் பாட, நடனம் ஆடுபவர், முத்திரையுடன் ஆடுவது என்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது,"" என்று விளக்கினார்.

### தேவரடியார்களின் வாழ்க்கை நிலை

பிரமிளா கிருஷ்ணன்,
பிபிசி தமிழ்

தன்னுடைய காலத்தில் தேவரடியாராக வாழ்ந்த பெண்களின் நிலை பற்றி கேட்டபோது முத்துக்கண்ணம்மாள் விரிவாகப் பேசினார்.

"""விராலிமலை முருகனை முதல் கணவனாக ஏற்றவர்கள் நாங்கள். நித்திய சுமங்கலி என்று எங்களை கூறுவார்கள். திருமணங்களில் நாங்கள் நலங்கு பாடல்கள் பாடி தாலி எடுத்துக்கொடுக்கும் வழக்கமும் இருந்தது. கோயில்களில் நடனம் ஆடுவதால், எங்களை மரியாதையுடன் நடத்துவார்கள். நான் ஏழாம் வகுப்பு வரை படித்தேன். பள்ளிக்கூடத்திற்கு அரசு அதிகாரிகள் வந்தால், என்னை தான் முதல் வரிசையில் நிறுத்தி, பாடவும், ஆடவும் அழைப்பார்கள். மற்ற பிள்ளைகளும் எங்களை கண்ணியமாக நடத்துவார்கள்,"" என்று கூறினார்.

### இணையரை தேர்ந்தெடுக்கும் உரிமை

தேவரடியார்களாக இருந்தவர்களுக்கு பாலியல் தொல்லைகள் இருந்ததா, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்று கேட்டபோது, ""நானும் என்னுடைய தோழிகளும் பிரச்சனைகளை சந்தித்ததில்லை. நாங்கள்தான் கடைசி தலைமுறை தேவரடியார்கள். தினமும் கோயிலில் எங்களுக்கான வருகைப் பதிவேடு இருந்தது. அன்றாடம் கோயிலில் உணவு கொடுப்பார்கள். என் பாட்டி அம்மிணியம்மாளுக்கு 18 ஏக்கர் நிலம் கொடுத்திருந்தார்கள்".

"அந்த நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை கோயிலுக்கு தந்தது போக மீதமுள்ளதை எங்கள் பயன்பாட்டுக்கு சேமித்துக்கொள்வோம்.

பருவம் வந்ததும், இணையரை தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை

தொடர்ச்சி பக்கம் - 23



# "கிழக்கிலங்கை முஸ்லிம் ஆளுமைக்கு வித்திட்ட சுவாமி விபுலானந்த அடிகளர்"

## *சாதி மத பேதமற்ற மகானாக வாழ்ந்த ஒரு அற்புத ஞானி விபுலானந்தர் பற்றிய ஆவணப்படம் சொல்லும் பல அரிய உண்மைகள்*

அரங்கம் தயாரிப்பில் உருவான விபுலாநந்தர் ஆவணப்படம் பற்றி...

"அரங்கம்" அமைப்பின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கும் "முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்" என்ற ஆவணப்படத்தை இன்றைய இளைய தலைமுறை கட்டாயம் பார்ப்பதற்குப் பல உதாரணங்களை இங்கு முன்வைக்கலாம்.

இந்தச் சிறு கட்டுரையில், சாதி மத பேதமின்றி,யாவருக்கும் கல்வியறிவைக் கொடுக்கவேண்டுமென்ற அவரது கனவால் இன்ற கிழக்கிலங்கை மட்டுமல்ல இலங்கை பூராவும் முஸ்லிம் மக்கள் கல்வியில் முன்னேறியிருப்பதற்கு அவர் செய்த கைங்கரியம் பற்றி ஒரு முஸ்லிம் எழுத்தாளர், ஆய்வாளர், சொன்னவற்றை எழுத்துருவிற் தருகிறேன்.

" அரங்கம்" அமைப்பின் பூபாலரட்ணம் சீவகனின் இயக்கத்தில், அவரின் குடும்பத்தினர், மற்றும் பல கலைஞர்களின் உதவியுடன் கனடா வாழ் தம்பிராஜா பாபு வசந்தகுமார் அனுசரணையில் எடுக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணப்படம், விபுலானந்த அடிகளார் பற்றிய பன்முக ஆய்வுகளுக்கு அடித்தளமிட்டிருக்கிறது.

இந்த ஆவணப் படத்தை வெளிக் கொண்டுவரப்பாடுபட்ட அத்தனைபேருக்கும் எனது மனதார்ந்த நன்றிகள். இந்த ஆவணப்படத்தில், விபுலானந்தரின் பல சேவைகள் பற்றிப் பல அறிஞர்கள் தங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

விபுலானந்தர், "மாதங்க சூளாமணி" எழுதியதற்கு உந்துதலாகவிருந்த வில்லியம் ஷேக்ஸ்பியரை நினைவு கொள்ளும் இன்றைய நாட்களில், விபுலானந்தரின், இயல், இசை, நாடகத் துறைக்கு அப்பாலான இன்னுமொரு மகத்தான சேவையான கல்விச் சேவையையும், முஸ்லிம் மக்களையும் பற்றிச் சில வரிகள் எழுதுவது பற்றி மகிழ்கிறேன்.

அவரின் அடிப்படை ஆவலாக மலர்ந்த, ஆன்மீகச் சேவையுடன் கலந்த கல்விச் சேவை அதனால் இன்று முஸ்லிம் ஆளுமையாக விளங்கும் சிலர் பற்றி இந்த ஆவணப் படத்தில் ஆதம் லெவ்வை அஹமட் நஹியா அவர்கள் (ஆய்வாளர், மற்றும் எழுத்தாளர்) சொல்லியவை இங்கு பதிவிடப் படுகின்றன.

"விபுலானந்த அடிகளார் ஒரு முஸ்லிம் நேசராக வாழ்ந்தார். ஒரு கால கட்டத்தில் முஸ்லிம் மக்களின் கல்விக்கு அபார பங்களிப்பு செய்திருக்கிறார். அரசாங்கதுறை, கல்வித்துறை, சமுகத்துறையில் சுவாமிகளின் செல்வாக்கு இழையோடுவதை நாங்கள் காண்கிறோம்.

"இலங்கை அரசியலில், எத்தனையோ மஜீத்மார்களைச் சுவாமி விபுலானந்தர் சிவானந்தா பாடசாலை மூலம் உருவாக்கியிருக்கிறார். சம்மாந்துறையில் ஒரு அமைச்சர் மஜீத், மூதூரிலே ஒரு மஜீத், பொத்துவில் தொகுதியில் ஒரு மஜீத். இவர்கள் அரசியலில் ஈடுபட்டுப்




பல சேவைகளைச் செய்தார்கள்"".

இவ்விடத்தில், மூதுர் பாராளுமன்றப் பிரதிநிதியாகவிருந்த "மஜீத்" பற்றிய எனது நேரடி அனுபவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நான் திருகோணமலையில் மருத்துவத் தாதியாக வேலை செய்து கொண்டிருந்த கால கட்டத்தில் எங்கள் திருமணம் நடந்தது. திரு பாலசுப்பிரமணியம் கொழும்பிலிருந்தார். கணவர் கொழும்பிலிருப்பதால், எனது வேலையைக் கொழும்புக்கு மாற்றித் தரச் சொல்லிச் சுகாதாரத் திணைக்களகத்திற்கு எழுதி, எழுதி அவர்களின் ஏனோ தானோ என்ற போக்கைப் பார்த்து எரிச்சல் பட்டுக் கொண்டிருந்தோம். அது மட்டுமல்லாமல், நாங்கள் இருவரும் சேர்ந்து லண்டன் வர அப்ளை பண்ணியிருந்தோம். அதையொட்டி அடிக்கடி கொழும்பிலிருக்கும் பிரிட்டிஷ் ஹைகொமிஸன் போகவேண்டியிருந்தது.

திருகோணமலையிலிருந்துகொண்டு அடிக்கடி கொழும்பு வருவதால் மிகவும் கோபமாக இருந்த கால கட்டத்தில், மஜீத் அவர்களின் மிக நெருங்கிய உறவினப் பெண் ஒருத்தர், (அவர் மனைவியா அல்லது சகோதரியா என்று எனக்கு ஞாபகமில்லை) எனது வார்ட்டில் பிரசவத்திற்கு வந்திருந்தார். எனது பராமரிப்புக்கு நன்றி சொல்ல வந்த திரு மஜீத் அவர்கள், "உங்களின் அன்பான பராமரிப்புக்கு எப்படி நன்றி சொல்வது" என்று சொல்லத் தொடங்கியதும், நான் தயங்காமல், "உங்கள் உதவியால் எனக்கு கொழும்புக்கு மாறுதல் கிடைத்தால் மிகவும் சந்தோசப் படுவேன்", என்று சோகத்துடன் முணுமுணுத்தேன். அதைத் தொடர்ந்து, நான் ஏன் கொழும்பு செல்லத் துடிக்கிறேன் என்பதைச் சொன்னேன். அவர், தன்னால் முடியுமானவரையில் எனக்கு உதவி செய்வதாகப் புன்னகையுடன் சொல்லிச் சென்றார். நான்காம் நாள், சுகாதார திணைக்களகத்திலிருந்து எனது " கொழும்புக்கு உடனடி" மாற்றம்" பற்றிய தந்தி வந்திருந்தது.

மஜீத் அவர்கள்வ்அன்று செய்த நன்றியை நான் மறக்க மாட்டேன். திரு மஜீத் அவர்களும் நானும், விபுலானந்தர் ஆரம்பித்த கல்விக்கூடங்களில் வெவ்வேறு காலத்தில் எங்கள் "அகர முதல எழுத்துக்களை" ஆரம்பித்தவர்கள் என்பது விபுலானந்தரின் ஆவணப்படத்தைப் பார்த்போது புரிந்தது. விபுலானந்தரின் அறத்தின் வலிமை அளவிட முடியாதது. அவர் ஆரம்பித்த கல்வியில், சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற எந்தப் பாகுபாடும் கிடையாது.

கிராமத்தில் நான் படித்தகாலத்தில், அக்கரைப்பற்று மாவட்டப் பாடசாலைகள் "விபுலானந்தரின் வழிகாட்டிகளின் ஒருத்தரான பாரதியின் பிறந்த தின விழாவை ஒட்டி நடக்கும் கட்டுரைப்போட்டி பேச்சுப் போட்டிகளில் பங்கெடுப்போம். ஒருதரம் அக்கரைப்பற்று முஸ்லிம் மாணவர் ஒருத்தரும் நானும் பரிசு பெற்றோம் அவர் பெயர் ஞாபகமில்லை. பாரதி பிறந்த தின விழாவில் சாதி மத பேதமற்ற மனித நேயமான "சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம், நீதி உயர்ந்த மதி கல்வி, அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்" என்பது போன்ற பாரதி பாடல்களைப் பாடிக் கொண்டு ஊர்வலம் வருவோம். பாரதியை அடிப்படையாக வைத்த கலாச்சாரப் போட்டிகளில். பாரதியின் பாடலான" கும்மியடி பெண்ணே" என்ற பாடலுக்கு எனது தமக்கையார் சொல்லித் தந்த கும்மியை ஆடியிருக்கிறோம்.

அக்கால கட்டத்தில் சமய வேறுபாடுகள் எங்கள் கிராம வாழ்க்கையிலில்லை. ஒருத்தர் சமயப் பண்டிகைகளை இன்னொருத்தர் பகிர்ந்து கொள்வோம் இந்த, "அன்பு கனிந்த அழகிய கிராமத்து உறவுகள்" பற்றி எனது தில்லையாங்கரை நாவலில் எழதியிருக்கிறேன்.

சாதி சமய, இனபேதமற்ற அந்த உறவுகள் மலரவும் வளரவும், ஒரு பண்பான கலாச்சாரம் கிழக்கிலங்கையில் தொடரவும் சுவாமி விபுலானந்தர் எப்படி அத்திவாரமிட்டார் என்பதற்குத் நஹியா அவர்கள் கூற்றைப் படிப்பது நல்லது.

விபுலானந்தர் இராமகிருஷ்ண மிசன் மூலம் கிழக்கிலங்கையில் கல்வியை மேம்படுத்த, ஒன்றிரண்டு கிறிஸ்தவப் பாடசாலைகள் தவிர, அரசு எந்த நடவடிக்கையும் இந்த விடயத்தில் எடுக்கவில்லை. அக்கால கட்டத்தில், கல்வியில் முஸ்லீம்கள் மேன்மையடைய அடிகளார் செய்த சேவை பற்றி நஹியா அவர்கள்; மேலும் குறிப்பிடுகையில்,

" விபுலானந்தர் பல முஸ்லிம் கிராமத் தலைவர்களை உருவாக்கியிருக்கிறார். மருதமுனை மஜீத் என்பவர்தான் கிழக்கு மாகாணத்திலேயே முதலாவது விஞ்ஞான பட்டதாரி. சிவானந்தா வித்தியாலயத்தில் படித்தவர். சுவாமியினுடைய மாணவன். சம்சுதீன் என்பவர் அட்டாளைச் சேனையைச் சேர்ந்தவர். கல்விப் பணிப்பாளராக இருந்தவர். அவரை பி.எஸ்.ஸி என்று சொல்வார்கள். அவர்தான் அட்டாளைச்சேனையின் முக்கிய பதவியிலிருந்தவர். இபுறாஹிம் லெவ்வை என்பவர் பொலனறுவையில் பி.ஏ.அவர் ஓணகமயைச் சேர்ந்தவர்."

"சுவாமி விபுலானந்தர் சிவானந்தாவிலிருந்தபோது, இன்று பேராசிரியர், உவைஸ் அவர்களை உலகம் போற்றும் தமிழ் அறிஞராகக் காண்பதற்குக் காரணம் சுவாமி விபுலானந்த அடிகளாராகும், எஸ் எம். கமால்தீன் இந்த நாட்டின் மிக முக்கியமான ஒரு தமிழ்ப் பேறறிஞர் அவரையும் உருவாக்கியவர் சுவாமி விபுலானந்தரே.நல்லதம்பிப் புலவரிடம் சாகிராக் கல்லூரியிற் பயின்றபின்தான் கமால்தீன் அவர்கள் பல்கலைக்கழகம் சென்றார். அவர் இன்று உலகம் போற்றும்

இராஜேஸ்வரி
பாலசுப்பிரமணியம்

அறிஞராக வாழ்ந்து வாழ்க்கையை முடித்துக்கொண்டிருக்கிறார்".

"சுவாமி அவர்கள் அவரின் நண்பர்கள் மூலமும். முஸ்லிம் மக்களுக்குப் பல உதவிகள் செய்திருக்கிறார். ஏ.எஸ்.எம். அசீஸ் அவர்கள் இந்நாட்டின் முதலாவது முஸ்லிம் சிவில் சேர்வண்ட். அவர் கல்வித்துறையை நாடுவதற்கே காரணம் சுவாமி விபுலானந்தர் என்பதை அவரே (அசிஸ்) கூறியிருக்கிறார். அவர் சாஹிராக் கல்லூரி அதிபராவதற்கும், அகில இலங்கை கல்வி சகாயநிதியை உருவாக்கி, எத்தனையோ முஸ்லிம்களை கல்விபால் ஊக்குவித்து, அவர்களைக் கல்விமான்களாக்கியதற்கும் சுவாமிக்குப் பங்குண்டு" என்று சொல்கிறார்


அத்துடன் சுவாமியின் சாதி சமயமற்ற அறம் சார்ந்த அறிவுத் தேடல் பற்றிச் சிலவரிகள் சொல்லவேண்டும். அவர் துறவியாகக் காரணமாகவிருந்த இராமிருஷ்ண மிசன், சுவாமி பரமஹம்சரால் உண்டாக்கப்பட்டது. பரமஹம்சர் இந்து சமயத்தில் மட்டுமல்லாமல் மற்ற சமயங்களிலும் ஈடுபாடுள்ளவர் என்று அவர் பற்றிய ஆய்வுகள் சொல்கின்றன. முக்கியமாக இஸ்லாத்தின் ஒரு அங்கமான "சூபிஸ்; வழிபாட்டுமுறையிலும் மிகுந்த ஈடுபாடுகள் வைத்திருந்தார் என்று தெரிகிறது. பரமஹம்ஷரின் வழிவந்த விவேகானந்தர் சமய இன.நிறம் நடந்த மனிதநேயத்தை இந்தியா மட்டுமல்லாது, அகில உலகமெல்லாம் பரப்பியவர்.அவரின் மனிதநேயக் கருத்துக்களால் ஈர்க்கப் பட்ட வெள்ளையினப் பெண்ணான நிவேதிதா தேவி அம்மையார். கத்தோலிக்கம், இந்து சமய அறிவு மட்டுமல்லாமல் பௌத்த சமய வழிமுறைகளிலும் ஈடுபாடுடையவர்.

இவர்கள் வழிவந்த சவாமி விபுலானந்தர் தன்னோடு வாழும், தன்னிடம் மாணவர்களாக இருப்போரின் சமயம் பற்றி அறிய முன்வந்தது ஆச்சரியமல்ல் இதைப் பற்றி விளக்கும் நஹியா அவர்கள் மேலும் குறிப்பிடும்போது,

தொடர்ச்சி பக்கம் - 22

# அம்பாறை மாவட்டம் பிறந்த கதை!

## இலங்கையின் நெற்களஞ்சியம் என்று பெயர் பெற்ற பகுதியின் வரலாறு இது




இலங்கையின் இளைய வயதுடைய நான்கு மாவட்டங்களில் ஒன்று அம்பாறை மாவட்டம். அதற்கு இன்று வயது வெறும் ஐம்பத்தேழு தான். அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதி, 1961இற்கு முன்பு, மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சொந்தமாக இருந்தது. மட்டக்களப்பிலிருந்து அம்பாறை மாவட்டம் பிரிந்து உருவாகக் காரணமாக இருந்த உள்ளூராட்சிப் பிரிவுகள் எவை, அது உருவான பின்னணி என்ன என்பதை நாம் இங்கு சுருக்கமாகப் பார்க்க இருக்கிறோம். அப்படிப் பார்ப்பதென்றால் மட்டக்களப்பிலிருந்து தான் தொடங்கவேண்டும்.

இலங்கையின் கிழக்கே ”மட்டக்களப்பு” எனும் பிராந்தியம் இருப்பதையும், அதில் வன்னிமைகள் ஆண்ட மூன்றுக்கு மேற்பட்ட ஆட்சிப்பிரிவுகள் இருந்ததையும் போர்த்துக்கேயர் குறிப்புகள்தான் முதன்முதலாகச் சொல்கின்றன. 1600களின் நடுப்பகுதியில் எழுதப்பட்ட போர்த்துக்கேய ஆவணங்களின் படி அங்கு பழுகாமம், சம்மாந்துறை, ஏறாவூர், பாணமை ஆகியவற்றில் மூன்று அல்லது நான்கு ஆட்சி உபபிரிவுகள் நிலவியிருக்கின்றன. மட்டக்களப்புப் பூர்வ சரித்திரமும் உன்னரசுகிரி, மட்டக்களப்பு, மண்முனை ஆகிய மூன்று ஆட்சிப்பிரிவுகளைப் பற்றிச் சொல்வதை நாம் இங்கு ஒப்புநோக்கலாம். அதே கால ஒல்லாந்து ஆவணங்களில், பழுகாமம், சம்மாந்துறை, பாணமை, போரதீவு முதலியவற்றின் வன்னிமைச் சிற்றரசர்கள் பற்றிய தகவல்கள் வருகின்றன. பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவாகியிருக்கக்கூடிய நாடுகாடுப்பற்று எனும் புதிய குடியேற்றப்பிரிவு பற்றி, “நாடுகாடு பரவணிக்கல்வெட்டு“ விலாவாரியாகச் சொல்கிறது.

குடித்தொகை நெருக்கம், வன்னிமைகளிடையேயான அரசியல் முரண்கள் என்பன காரணமாக, இப்படி படிப்படியாக எண்ணிக்கையில் கூடிய மட்டக்களப்பின் உட்பிரிவுகள், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பதினொன்றாக வளர்ச்சி கண்டுவிட்டன. கோறளை, கரவெட்டி ஏறாவூர், மண்முனை, போரதீவு, கரைவாகு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பாணமை, நாடுகாடு (மற்றும் நாதனை), என்று இந்தப் பதினொரு உட்பிரிவையும் 1794இல் பட்டியலிடுகிறார் ஜாகொப் பேர்னாட் எனும் ஒல்லாந்து ஆளுநர். இவற்றுடன், மேற்கே வேடுவர்கள் செறிந்து வாழ்ந்த விந்தனைப்பற்றும் மட்டக்களப்பின் பகுதியாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியர் முழு இலங்கையையும் கைப்பற்றிய போது, இன்றைய அம்பாறை, தமணை பிரதேச செயலாளர் பிரிவுகள் நாடுகாடுப்பற்றாகவும், உகணை பிரதேச செயலாளர் பிரிவு நாதனைப்பற்றாகவும் அடர்ந்த காடாகக் கிடந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக வேடர்களும் தமிழர்களும் முஸ்லீம்களும் அவற்றில் வசித்து வந்தார்கள்.

1815இல் கண்டியைக் கைப்பற்றிய பின், தாம் பெற்ற வரிகளுக்கு மேலாக, இலங்கையரின் பாரம்பரியத் தொழிலான விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் கூடிய வருமானம் பெற நினைத்தார்கள் பிரித்தானியர்கள். அதே கோணத்தில் சிந்தித்த மட்டக்களப்பு ஆளுநர் ஜே.டபிள்யூ ப்ரிச்சின் (J.W.Brich) பார்வை நாடுகாடுப்பற்றில் விழுந்தது. அங்கிருந்த அம்பாறைவில், கொண்டைவெட்டுவான்வில், இறக்காமவில், குடுவில் ஆகிய நான்கு ஏரிகளும் பெருமளவு தண்ணீர்ர் கொள்ளக்கூடியவை என்பதை அவதானித்த அவர், தன் 1856ஆமாண்டு அறிக்கையொன்றில் ஒல்லாந்து அதிகாரிகள் அவற்றின் மீது காட்டிய அக்கறையையும், அந்தக்குளங்கள் மூலம் நீர்ப்பாசன வசதியை அதிகரிக்கலாம் என்பதையும், விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அம்பாறைவில்லை அண்டி தமிழ்க்குடும்பங்களே வசித்து வந்தன. 1911இல் இடம்பெற்ற இலங்கை சனத்தொகைக் கணக்கெடுப்பின் படி, அம்பாறையானது, 66 தமிழரையும் 7 முஸ்லீம்களையும் மாத்திரம் கொண்ட தனித்தமிழ்க் கிராமம். ஆறு பறங்கியர் உட்பட 17 கிறிஸ்தவர்களும், 55 சைவர்களும் அங்கு வாழ்ந்து வந்திருக்கிறார்கள்!

காலம் வேகமாக நகர்ந்தது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் மிகப்பெரிய மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டம் விளங்கியது. இன்றிருக்கும் பாராளுமன்றம் போல, 1931 டொனமூர் யாப்பின் படி அரசாங்க சபையே (State Council) இலங்கைத்தீவின் மிகப்பெரும் அரசியல் மன்றம். அதில் எருவில் - போரதீவுப்பற்று முதல் பாணமைப்பற்று வரையான ”மட்டக்களப்புத் தெற்கு” தேர்தல் தொகுதி ஒரு பிரதிநிதியைத் தேர்வு செய்து வந்தது. 1944 சோல்பரி யாப்புத்திருத்தத்தில் அரசாங்க சபையானது பாராளுமன்றமாக மாற்றப்பட்ட போது, இந்த மட்டக்களப்புத் தெற்கு தேர்தல் தொகுதியானது, பழைய பற்றுக்களின் எல்லை வரையறைகளை மீறி, பொத்துவில், கல்முனை, பட்டிருப்பு எனும் மூன்று தேர்தல் தொகுதிகளாக உடைக்கப்பட்டது.

1948 சுதந்திரத்தின் பின், தென்கிழக்கிலங்கையின் விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் கல்லோயாத் திட்டத்தை இலங்கை அரசு முன்மொழிந்தது. 1949இல் ஆரம்பித்த அத்திட்டம், 1953இல் முடிவடையும் வரை, பெருமளவான சிங்களக் குடியேற்றம், சம்மாந்துறை தென்பகுதியில் ஏற்பட்டது. 1959இல் மீண்டும் தேர்தல்தொகுதிகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்ட போது, பழைய நாடுகாட்டுப் பகுதியில், 19.03.1960 அன்று, ”அம்பாறை” எனும் புதிய தேர்தல் மாவட்டம் உருவானது. இவ்வாறு 1960இன் பின்னரையாண்டில், மட்டக்களப்பின் தென்பகுதியில், பட்டிருப்பு, பொத்துவில், கல்முனை, நிந்தவூர், அம்பாறை எனும் ஐந்து தேர்தல் தொகுதிகள் அமைந்திருந்தன.

10.04.1961 அன்று பட்டிருப்பு தவிர்ந்த நான்கு தேர்தல் தொகுதிகளையும் ஒன்றிணைத்து, புதிய நிர்வாக மாவட்டமொன்றை இலங்கை அரசு பிரகடனம் செய்தது. இதன்மூலம், பாரம்பரியமிக்க தமிழர் தாயகமான மட்டக்களப்புத் தேசம், மட்டக்களப்பு, அம்பாறை எனும் இரு மாவட்டங்களாகத் துண்டாடப்பட்டது. இதேவேளை, 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் படி ஓரங்கத்தவர் தெரிவாகும் தேர்தல் தொகுதிகள் அகற்றப்பட்டு, பல்லங்கத்தவர் தெரிவாகும் தேர்தல் மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. இப்படி உருவானதே இன்றைய திகாமடுல்ல தேர்தல் மாவட்டமும் அம்பாறை நிர்வாக மாவட்டமும் ஆகும். சிறிதுகாலம் மட்டக்களப்பிலிருந்து பிரிக்கப்பட்டு பதுளையுடன் இணைக்கப்பட்டிருந்த ”தெகியத்த கண்டி” பிரதேசம், இடைப்பட்ட காலத்தில் பல சிங்களக்குடியேற்றங்களைக் கண்டிருந்த நிலையில், அம்பாறை மாவட்டத்தின் உருவாக்கத்தின் பின்னர், மீண்டும் பதுளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு அம்பாறையுடன் இணைக்கப்பட்டு இன்றைய அம்பாறை மாவட்டம் முழுமை பெற்றது.

மிகப்பழைமை வாய்ந்த “பற்று” எனும் நிர்வாகப்பிரிவுகளை இன்றைய மட்டக்களப்பில் ஓரளவுக்கேனும் காணமுடியும் எனினும், புதிய அம்பாறை மாவட்டத்தில் இனப்பரம்பல் வேற்றுமைக்கேற்ப அவை பிரிந்தொழிந்து போயுள்ளன. கொஞ்சம் முயன்றால், அம்பாறை மாவட்டமாக உள்ள பழைய பற்றுகளையும் அவற்றின் இன்றைய வடிவங்களையும் சரியாக இனங்காண முடியும்.

1. அக்கரைப்பற்று - அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, திருக்கோவில்
2. கரைவாகுப்பற்று - கல்முனை தமிழ், கல்முனை முஸ்லீம், காரைதீவு, சாய்ந்தமருது, நாவிதன்வெளி,
3. சம்மாந்துறைப்பற்று - சம்மாந்துறை, இறக்காமம், நிந்தவூர்
4. பாணமைப்பற்று – பொத்துவில், லகுகலை
5. நாதனைப்பற்று - உகணை
6. நாடுகாடுப்பற்று- அம்பாறை, தமணை
7. விந்தனைப்பற்று - மகாஓயா, பதியத்தலாவை, தெகியத்தகண்டி

## வடகொரிய அணு ஆயுத சோதனைக்கூடம் சேதம்

தொடர்ச்சி

மேற்கொண்டு எந்தவித அணு சோதனைகளுக்கும் மாண்டாப் மலைப்பகுதியை பயன்படுத்தக்கூடாது என்றும் அந்த ஆய்வு சுருக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இறுதி அறிக்கையில், கதிரியக்க பொருட்களின் கசிவை தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் பெரிய அளவில் அணு சோதனைகள் நடத்தப்பட்ட பிறகு மாண்டாப் மலைப்பகுதியின் குகை சேதமடைந்திருக்கும் என சீன விஞ்ஞானிகள் ஏற்கனவே கவலை தெரிவித்திருந்தனர்.

## மட்டு - திருகோணமலை வீதி அவலநிலை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் கவலை

தொடர்ச்சி

250 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும்து அந்த வீதி இன்று உடைந்து போக்குவரத்து செய்யமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம கவலை தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வடியில் சன்சைன் கொட்டலில் ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம விசேட பத்திரிகையாளர் மாநாடு நடாத்தினர் இதன் போது இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த வீதியில் வாகரை பிரதேசத்தில் சுமார் 50 கிலோமீற்றர் தூரம் பழுதடைந்து உடைந்து காணப்படுகின்றது. இந்த வீதியால் நாளொன்றுக்கு சுமார் 5000 வானங்கள் பிரயாணிக்கின்றன. இந்த நிலையில் இந்த வாகரைப் பகுதியில் உள்ள பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் 15 நிமிடம் பிந்தியே செல்லவேண்டிய துப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

பெரும் தெருக்கள் அதிகாரசபை மக்களுக்கு இவ்வாறான ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது தொடர்பாக நான் கலையடைகின்றேன். அது தொடர்பாக மத்திய அரசு கவனம் செலுத்தி உடனடியாக புனர்நிர்மாணம்



செய்யவேண்டும். அவ்வாறு இல்லையேல் இனிவரும் மழைகாலங்களில் இன்னும் சேதமடைந்து மிகமோசமான நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.



# லொறி லொறியாக போகுது! எங்க போய் முடியப்போகுதென்றே தெரியாது!



பத்து வருடங்களுக்கு முன்பு யுத்தமிருந்தாலும், இயற்கை வளங்கள் சுரண்டப்படவில்லை. இப்போது, லொறி லொறியாக போகுது, சட்டவிரோதமான செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. எங்க போய் முடியப்போகுதென்றே தெரியாது? என மணற்பிட்டி சந்தியில் நின்று தனது ஆதங்கத்தினை வெளிப்படுத்தி நின்றார் நல்லதம்பி.

மூன்று தசாப்த யுத்தத்தினையும் கண்ணுற்று, அதற்கு முன்னமும் நான்கு தசாப்தகாலங்களாக வாழ்ந்து இன்றும் கம்பீரமாக, பிள்ளை, பேரப்பிள்ளை, பேரப்பிள்ளையின் பிள்ளை என கண்டு நிமிர்ந்து நிற்பவர்தான் நல்லதம்பி.

நமது பகுதியில் உள்ளவை நமக்கு பயன்படவேண்டும். நமக்கு பயன்பட்டு எஞ்சினால்தான் பிறபகுதிக்கு கொடுக்க வேண்டும். என்பதில் உறுதிகொண்டவர். எப்போதும் மரங்களை வெட்டுவதையும், கனியவளங்களை அழிப்பதையும் விரும்பாதவர். லொறி லொறியாக போகின்றதே! வேகமாக ஓடுகின்றார்களே! வீதியும் உடையுதே! நம்மட சனமும் அதிக பணத்தினை கொடுத்து வாங்குகின்றனரே! சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் குறையுதில்லையே! இதை கேட்பார் யாருமில்லையா? என்று, எப்போதும், இவர் வீட்டிற்கு யார் சென்றாலும் அவர்களிடம், கூறிக்கூறி அவரது ஆதங்கத்தினை வெளிப்படுத்துவதே இவரின் திருப்தியும் கூட.

படுவான்கரைப்பகுதியில் காடுகளும், மலைகளும், வயல்களும், ஆறுகளும், ஓடைகளும், குளங்களும் அமைந்திருக்கின்றன. இவை இறைவன் கொடுத்த இயற்கை கொடைகள். அவற்றினை பயன்படுத்தி நாம் முன்னேறுவதுடன், அவற்றினையும் பாதுகாக்க வேண்டியதும் நமது தலையாய கடமையாகின்றது. நாம் அனுபவித்துவிட்டால் போதும், என்ற சிந்தனையில் வாழ்ந்தால் நமது எதிர்கால சந்ததிகள் பயன்படுத்துவதற்கு ஒன்றுமே இராது என்பதே நிதர்சனம். அதேவேளை இயற்கைச் சமநிலைகளை பேணாவிட்டால் இயற்கை கொடுக்கும் அழிவுகளையும் எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பதே நல்லதம்பியின் உள்ளக்குமுறுலாகின்றது.

லொறி லொறியாக போகின்றதே! என்று நல்லதம்பி கூறிய வசனம், அவர் நாக்கில் மட்டுமிருந்து வருகைதந்தல்ல. ஒரு தசாப்த காலமாக அடி மனதில் பதியப்பட்டதும், நீண்ட ஆதங்கத்துடனும், யாருமே இதுபற்றி நல்தீர்வு கூறுகின்றார்களேயில்லை



என்ற விரக்தியிலும் கூறிய வசனமாக அமைந்திருந்தது.

படுவான்கரைப் பகுதியில் ஆற்றுமணல் ஆங்காங்கு ஆற்றை, வயல்களை அண்டிய பகுதியில் நிறைய இருக்கின்றன. அதேபோன்று நிரப்புமணல்களும் மேடுகளில் காணப்படுகின்றன. இவ்வாறான மணல்கள்தான் லொறி, லொறியாக ஏற்றிச் செல்லப்படுவதாக நல்லதம்பி கூறுகின்றார். பிரதேசத்து தேவைக்கு அதிகமாக மண்ணிருந்தால் அவை வேறு பிரதேசத்திற்கு எடுத்துச்செல்லப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு இல்லாத நிலையில் வேறுபிரதேசத்துக்கு ஏற்றிச்செல்வதை எவ்வாறு ஏற்பது? அதேவேளை படுவான்கரைப்பகுதியில் உள்ள மக்கள் பணத்தினை சம்பாதிப்பதே போராட்டமானது. இந்நிலையில் தற்போதைய பொருட்களின் விலைவாசியில் வீடுகள் அமைப்பதென்பதும் பெரிதும் சிரமமானதே. அதேவேளை குறைவான பணத்தினை

**படுவான் பாலகன்**

செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடிய மண்ணைக்கூட அதிக விலை கொடுத்து வாங்குவதென்பதும் மிகமிக வேதனையும் கூட.

ஆற்றுமணல், நிரப்புமணல் ஏற்றுவதற்கு அரசாங்கமும் அனுமதி வழங்குகின்றது. அரசாங்கம் மணல் ஏற்ற அனுமதி வழங்கிய இடங்களில் மட்டும்தான் மண் அகழப்படுகின்றதா?, அரசாங்கம் வழங்கும் அனுமதியளவில் மட்டும்தான் மண் ஏற்றப்படுகின்றதா? என்ற விடயங்கள் பற்றிய தெளிவு நல்லதம்பியை போன்ற பலருக்கும் தெரிந்ததொன்றே. ஆனாலும் ஆதங்கத்தினை பேசமட்டும்தான் முடியும் என்பது நல்லதம்பியின் கருத்தாகின்றது. ஏனெனில் பல கூட்டங்களில் பேசியும் பலனில்லையென்பதே அவரின் பதிலாகின்றது.

மண்ணேற்றி செல்லும் லொறிகள் இரும்பிலானவை. இதனால் லொறி விபத்தில் சிக்கினாலும் அதில் உள்ளவர்களுக்கு ஆபத்து ஏற்படுவது மிகக்குறைவு. ஆனால் இதில் யாரும் அகப்பட்டால் அவர்களின் உயிர் இருக்கும் என்பது சந்தேகமே. இதனால்தான், வேகமாக, லொறி சாரதிகள் மண்ணையேற்றி கொண்டு ஓடுகின்றனரோ? காவல்துறையினர் பிடித்துவிடுவார்கள் என்பதற்காக அஞ்சி ஓடுகின்றனரோ? கூடுதலான மண்ணை ஏற்ற வேண்டும் என்பதற்காக ஓடுகின்றனரோ? என்று தெரியவில்லை. வீதியில் நாம் நின்றாலோ, சிறுவாகனங்களில் சென்றோலோ எம்மை தள்ளிவிடுவது போன்று உள்ளது. இதனால் வீதிக்கு செல்வதற்கே அச்சமாக உள்ளதாக கூறுகின்றார் நல்லதம்பி.

வீதிகளும் லொறியின் பாரத்திற்கும், வேகத்திற்கும் ஈடுகொடுக்காமல் அடிக்கடி உடைவதும் இயல்பாகிவிட்டது. இதனால் ஏனைய வாகனங்களில் பயணிக்கும் பயணிகள் சிரமத்தினை எதிர்கொண்டும் வருகின்றனர்.

பத்துவருடங்களுக்கு முன்பிருந்த வாய்க்கால்கள் ஆறாகவும், ஆறுகளின் அணைக்கட்டு ஓரங்கள் உடைக்கப்பட்டு வருவதும் மண்அகழ்வின் பிரதிவிளைவுகளே. இதனால் பாதிக்கப்படுவதும் இப்பிரதேசத்தில் உள்ள விவசாயிகளும், மக்களுமே. நான்காயிரத்திற்கு பெறக்கூடிய மண்ணை நாற்பதினாயிரம் கொடுத்த வாங்கவேண்டியவர்களாக படுவான்கரை மக்கள் உள்ள நிலையிலும், இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாகவும் படுவான்கரைப்பகுதி மக்கள் உள்ளனர், இவர்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க கூடிய வழிவகைகளை மக்கள் பிரதிநிதிகள் எடுக்க வேண்டுமென்பதும் நல்லதம்பி போன்றவர்களின் கோரிக்கையாகும்.

## முஸ்லீம் ஆசிரியைகள் அபயா அணிந்ததற்கு எதிர்ப்பு

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் அதிபரை மிரட்டியதாகக் கூறப்படும் அந்தப் பாடசாலையின் முஸ்லீம் ஆசிரியைகள் சிலரது கணவன்மாரை கண்டித்தும், முஸ்லீம் ஆசிரியைகள் சிலர் அபாயா அணிந்துவந்ததை கண்டித்தும் அந்தப் பள்ளிக்கூட பழைய மாணவிகளும் பெற்றோரும் அங்கு புதனன்று போராட்டம் நடத்தியுள்ளனர்.

இதுவரை காலமும் சேலை அணிந்துவந்த இந்த முஸ்லீம் ஆசிரியைகள் திடீரென அபாயா அணிந்துவந்ததாக பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், பாடசாலைக்கு வந்த அவர்களது கணவன்மார், இனிமேல் தமது மனைவிமார் அபாயா அணிந்துதான் வருவார்கள் என்றும் அவர்களை அனுமதிக்க வேண்டும் என்று அதிபரிடம் கண்டிப்பாக கூறிச் சென்றதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதனை அடுத்தே அவர்கள் போராட்டத்திலும் குதித்துள்ளனர்.

ஆயினும், அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய தமது போராட்டங்களை தாம் தற்போதைக்கு கைவிட்டுள்ளதாக பெற்றோரும் பழைய மாணவிகளும் பின்னர் அறிவித்தனர்.

முஸ்லீம் ஆசிரியைகளின் உடைகள் கல்லூரியின் பண்பாட்டுக்கு பொருந்தாதவை என்று கூறும் பெற்றோர், அது குறித்த உரிய தீர்வு எட்டாத பட்சத்தில் மீண்டும் போராடுவோம் என்றும் எச்சரித்துள்ளனர்.



## மட்டகளப்பு மாவட்ட சித்திரைப் புதுவருட விழா

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் எண்ணக்கருவுக்கு அமைவாக மூவினமும் நான்கு மதத்தினையும் பின்பற்றுகின்ற மக்கள், புதுவருட நிகழ்வுகளின் ஊடாகவும் நாட்டில் நல்லிணத்தினைக் கொண்டுவர முடியும் என்று மட்டக்களப்பு மாவட் அரசாங்க அதிபர் மா. உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலகங்கள், ஸ்ரீலங்கா இராணுவம், கடற்படை, வான்படை, இலங்கைப் பொலிஸ் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தமிழ் - சிங்கள புத்தாண்டு விழா, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கச்சக்கொடி சுவாமிமலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே மாவட்ட செயலாளர் மா. உதயகுமார் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வு, பரிசு வழங்கல்களை அடுத்து மண்முனை



தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி தினேஸ் தெட்சிணகௌரியின் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.



இவ்விழாவில், மாவட்டத்தின் பலதுறைகளையும் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# என் கேள்விக்கென்ன பதில்! என்பார்வைக் கென்ன பொருள்!!




மட்டு மாநகரசபை தன் அமர்வை ஆரம்பிக்க ஆயத்தமான போது அன்னை பூபதியை எண்ணி மங்கல விளக்கேற்றல் நிகழ்வைச் செய்து ஆரம்பிப்போமென மாநகர அங்கத்தவர் வே.தவராசா வேண்டுகோள் விடுக்க, ஏனைய அங்கத்தவர்களும் சேர்ந்து ஏகமனதாக முதல் வேண்டுகோளைத் தட்டிக்களிக்காமல் அன்னை பூபதியை நினைத்து விளக்கேற்ற, தன் பணிகளை ஆரம்பித்தது மாநகரசபை. நல்ல விசயந்தான்.

அதேவேளை இதே மாநகரசபையில் அங்கத்தவர்களாக இருந்த திரு. மாலாராமச்சந்திரன்(மாநகர உறுப்பினர்), திரு. செழியன் பேரின்பநாயகம்(மேயர்), திரு. தோ. அந்தோணி(உதவி மேயர்) ஆகியோர் பதவியிலிருக்கும் போதே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள். இந்த மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள். இவர்களை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மாவுக்கு மாநகரசபை பிரார்த்தனை மேற்கொண்டிருந்தால் இந்த மங்கல விளக்கிற்கு இன்னும் கொஞ்சம் தூக்கலான மரியாதை கிடைத்திருக்கும் அல்லவா. நாம் ஏன் எல்லா விசயத்திலும் ஒரு பாதியை அப்படியே மறந்து போகிறோம். என்ன இருந்தாலும் இன்றைய மாநகர உறுப்பினர்களுக்கு அவர்கள் முன்னோடிகள் தானே. அவர்களின் கட்சிகளை சேர்ந்தவர்களும் இந்த தற்போதைய சபையில் உறுப்பினர்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. நாட்டில் வன்முறை தலைவிரித்தாடிய போது உறுப்பினர்களாக இருந்த அவர்களுக்கு மரியாதை செலுத்துவது இன்றைய உறுப்பினர்களின் தலையாய கடமையல்லவா. என்ன இருந்தாலும் உங்களைப் போல அவர்களும் இந்த மாநகர மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள். இனிமேலாவது நம் முன்னோடிகளை நினைப்போம், மதிப்போம். அப்போதுதான் வருங்கால சந்ததியும் இந்தச் சபை செய்யப்போகும் நல்ல காரியங்களை நினைவு கூரும். என்ன நான் சொல்றது சரிதானே?

பார்வையை இன்னொரு பக்கம் திருப்பினால்...
அன்னை பூபதியின் நினைவுநாளில் சிறையில் இருக்கும் ஆனந்த சுதாகரனை திறந்து விடும்படி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டது. நல்ல விசயம்.

இதே கட்சி ஆரம்ப காலத்தில் வடக்கு மாகாணத்தவர் கிழக்கை விட்டு வெளியேற வேண்டுமென கோசம் எழுப்பி, அதற்கான செயல்பாட்டிலும் இறங்கியதை மக்கள் இன்னும் மறக்கவில்லை. அதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்துக்கான கட்சியொன்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது வடக்கை சேர்ந்த ஆனந்த சுதாகரன் மீது இந்தக் கட்சி கரிசனை காண்பிப்பது நல்ல சமிக்ஞைதான். மாறிவிட்டார்கள் என எடுத்துக்கொள்வோம். ஆனால், இதுவும் அரைவாசி சரியான காரியந்தான். தாம் வடபகுதி மக்களை இங்கிருந்து வெளியேறச் சொன்னதற்காக (காரணம் எதுவாக இருந்தாலும், அது ஜனநாயகத்துக்கு உகந்த நடவடிக்கை அல்ல) அவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும் அல்லவா. மன்னிப்பு கேட்பார்களா? அல்லது தங்களது வருத்தத்தையாவது தெரிவிப்பார்களா? அதுதான் நல்லிணக்கமாக முடியும். நல்லிணக்கத்தின் முதற்படி.

## கடுகுக் கதை
## சந்தர்ப்பம் தந்த புகழ்

ஆடிக் காற்றுக்கு அகப்பட்ட அழுக்குக் காகிதமொன்று, கோயிலின் உச்சாணிக் கலசத்தில் ஒட்டிக்கொண்டு,



காற்றுக்கு படபடவென தம்பட்டம் அடித்து, தன்னை பெருமைப்படுத்திக் கொண்டேயிருந்தது. கோயிலுக்கு வரும் பக்தர்களெல்லாம் கலசத்தை கும்பிட்டு வழிபட்டால் அழுக்குக் காகிதம் தன்னைத்தான் கும்பிடுகிறார்களென இறுமாப்பும் கொண்டது.



கோயிலை புகைப்படம் எடுக்கும் பக்தர்களுக்கும் கலசத்தோடு ஒட்டிக் கொண்டு தன் முகத்தைக் காட்ட அழுக்குக் காகிதம் எப்போதும் முன்னுக்கே நிற்கும்.

அடித்த காற்று சற்று தணிந்து கலசத்தில் ஒட்டிக் கொண்டிருந்த அழுக்குக் காகிதம் பிடிமானமில்லாமல் கீழே வந்து விழுந்தது. கலசத்தில் காட்டாப்பு காட்டிய அழுக்குக் காகிதம் இப்போ பக்தர்களின் காலுக்கடியில் மிதிபட்டுக் கிடந்தது.



**“சந்தர்ப்பம் தரும் உயர்வு சரிந்தால் வரும் தாழ்வு“**

கலாபூசணம் - அரங்கம் இரா. தவராசா ஜே.பி

## குறுக்கெழுத்துப்போட்டி இல:–02

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | | ■ | | 4 | |
| | ■ | 5 | 6 | | ■ | |
| 7 | 8 | | | | 9 | ■ |
| ■ | 10 | | ■ | ■ | | 11 |
| 12 | | ■ | 13 | | | |
| 14 | | | | ■ | 15 | |

**இடமிருந்து வலம்:**
01. ஆண் குழந்தை பிறந்ததும் அடையாளமாகக் கொடுப்பது.
04. சூரிய நமஸ்காரத்துக்குத் தேவையானது.
05. தையில் வரும் இந்துக்களின் பிரதான தினங்களில் இதுவும் ஒன்று.
07. “ன”கரம் பிழைத்த மறு அமைப்பு.
10. ஒரு பறவையின் முன்னெழுத்துப் பறந்து விட்டது.
11. காதற்ற ஊசியும் இவ்வழிக்கு வராது, மாறிக்கிடக்கிறது.
12. கை நக்க வைப்பது.
13. அண்ணன்
14. இவன் சேற்றில் கால் வைப்பான்: நாம் சோற்றில் கை வைக்க
15. இலக்கம் முன்னெழுத்தை இழந்து விட்டது.

**மேலிருந்து கீழ்:**
01. இது தின்னக் கூலியும் வேண்டுமா?
02. எண்ணெயில்லாத் தீபம்.
03. அழகு
06. கணவன் மனைவியிடம் விரைவாக உணவை ......... என்றான்.
08. கண்கண்ட தெய்வம் கலைந்து கிடக்கிறது.
09. விச அரவம்.
11. நாற்று என்றும் பெயர்.
12. தேவனுக்குரிய பெண்பால்.
13. கடையெழுத்து இழந்த பாலுணவு.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 17.05.2018க்கு முன்னர் அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.
சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

குறிப்பு
சென்ற 09வது இதழில் (20.04.2018)
மேலிருந்து கீழ்
13வது இலக்கத்துக்குரிய கேள்வி:-
“13. இது சிரசாசனம் செய்கிறது.” என்பதே சரியானது.
சிரசாசனம் என்பது தவறுதலாக பிரசாரணம் என பதிவாகிவிட்டது.
திருத்திக்கொள்ளவும்.



# தீரனியம் “ஓட்டிசம்“ மாற்றுத்திறனாளி பிள்ளைகளின் பாடசாலைக்கு வயது ஒன்று

அன்புப்பணி சகோதரர்கள் சபையானது எமது மட்டக்களப்பு மறைமாவட்டத்திலே கல்முனையில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான பெனடிக் மினி என்ற பெயரைக் கொண்டு உளநல மருத்துவ புனர்வாழ்வு வதிவிட பயிற்சி நிலையமொன்றையும்; மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான புனித வளனார் விசேட தேவையுடையோர் தொழிற்பயிற்சி பாடசாலையையும் நடாத்தி வருகின்றனர்.

அந்தவகையிலே கடந்த வருடம் ஏப்பிரல் மாதம் 8ம் திகதி “தீரனியம்“ என்ற பெயருடன் ஓட்டிசம் பிள்ளைகளுக்கான பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகின்றது.

இப்பாடசாலையானது எமது மறைமாவட்டத்தின் ஆயர் அதி மேதகு வண. யோசப் பொன்னையா ஆண்டகை அவர்களினாலும், அன்புப்பணி சகோதரர்கள் சபையின் ஆசியா பிராந்திய அதிமேலாளர் அருட் சகோதரர் கொட்பிறி பிறகாட் அவர்களினாலும், மத்திய சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திரு. ஜெயசுந்தர பண்டார, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜனாப் இப்றா லெப்பை ஆகியோரினாலும் திறந்து வைக்கப்பட்டது.

ஓட்டிசம் என்ற பாடசாலை ஏன் ஆரம்பிக்கப்பட வேண்டும்?, ஓட்டிசம் என்பது என்ன? என்பதை முதலில் தெரிந்து கொள்வது நன்று. சாதாரணமாக பிறக்கின்ற ஒரு குழந்தை பல வளர்ச்சிப்படிகளை கடந்து ஆற்றலுள்ள, ஆளுமையுள்ள, சமூக இசைவாக்கத்துடன், உயிரோட்டமுள்ள மனிதனாக சமூகத்தில் நடமாடிவருகின்றது.





ஆனால் அதற்குமாறாக உயிரோட்டம் இருப்பினும், சமூக இசைவாக்கமற்ற நிலையில்,; மற்றைய சிறுவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாக தானாக இயங்க முடியாத நிலையில்; பிறர் உதவியோடு இயங்குபவர்களாகவும், குடும்பத்தாலும், சமூகத்தாலும் ஒதுக்கப்பட்டவர்களாக புறந்தள்ளப்பட்டு கேலிக் கூத்தாளனாக காணப்படுகின்றான்.

இவ்வாறு புறந்தள்ளப்பட்ட பிள்ளைகளைப்பற்றி கூறுவதானால் இவர்களுக்கு சாதாரணமாக பேச்சு இன்மை, பேச்சுத்தெளிவின்மை, அர்த்தம் கொண்ட முழுத்தொடராக தொடர்ந்து இரண்டு மூன்ற வார்த்தை பேச முடியாதவர்கள், ஒரே நடத்தையை திரும்பத் திரும்பச் செய்வதில் ஆர்வம் காட்டுபவர்கள்; கலந்துரையாட முடியாமை, நாளாந்தம் கேட்கும் சத்தத்தில் குழப்பமடைபவர்கள், கண்களை நேருக்கு நேராக பார்ப்பதில் சிக்கல், விநோதமாக சம்மந்தமில்லாமல் நடப்பது, நடத்தை கோலத்தில் மனவெழுச்சியில் பலவீனம், தொடர்பாடல், தனது செயல்களை தானே நிறைவேற்ற முடியாமை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுவார்கள்.

மேற்கூறப்பட்ட வகையில் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் எமது பகுதியில் இனங்காணப்பட்டனர். எவ்வாறெனில் டாக்டர் யூடி றமேஸ் ஜெயக்குமார் சிரேஷ்ட உளநல மருத்துவரிடம் சிகிச்சை பெற, ஆலோசனை பெற வருபவர்களில் அநேகமானவர்கள் மேற் கூறப்பட்ட காரணங்களினால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்பட்டனர். அத்தோடு இவ்வாறான பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதி கிடைப்பதுமில்லை. கல்வி கற்க முடியாத நிலையில் புறந்தள்ளப்பட்டனர். இதனால் பல பெற்றோர்கள் நெருக்கடிகளை சந்தித்தனர். குடும்பத்தில், பொருளாதாரத்தில்; தொழிலில், பராமரிப்பில்; உறவுகளில்; சமூக அந்தஸ்தில் பல பிரச்சனைகளை சந்தித்தனர். அவற்றை எல்லாம் டாக்டர் யூடி றமேஸ் ஜெயக்குமார் அவர்கள் இனங்கண்டார்.

எனவே டாக்டர் அவர்களின் சிந்தனையில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஓர் விசேட பயிற்சிப்பாடசாலை வேண்டும் அவர்களையும் சமூக அந்தஸ்துள்ளவர்களாக மாற்ற வேண்டும், பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும், பெற்றோர் மன நிலையில் ஓர் சாந்தி சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற ஓர் உயர்ந்த எண்ணம் அவருடைய சிந்தனைகளில் உருவாகிக் கொண்டே இருந்தது.

அவரது சிந்தனையின் கருவூலமாக அன்புப்பணி சகோதரர்களின் சபை அதியுயர் மேலாளர் அருட் கலாநிதி றெனே ஸ்றொக்மன் அவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்த போது இவற்றைப்பற்றி கலந்துரையாடப்பட்டது. இவர் உளநலத்துறையில் பாண்டித்தியம் பெற்ற அனுபவசாலியாவார்.

அருட் சகோதரர்
ஸ்டீபன் மத்தியூ
முன்னாள் அதிபர்
பற்றிமா உயர்தர பாடசாலை
கல்முனை

சபையின் அப்போஸ்தலிக்க பணியும் இவ்வாறானவர்களுக்கே உரியது. ஆராய்ந்து பார்த்து இவ்வாறான பணி அவசியம் தேவை என்பதை உணர்ந்தார். ஆரம்பிப்பதற்கான அனுமதியையும் கொடுத்தார். மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள அருட் சகோதரர்களின் இல்லத்தில் ஒரு பகுதியிலுள்ள கட்டிடங்களையும் வழங்கினார்.

அன்புப்பணி சகோதரர்களின் சபையின் அனுசரணையுடன் அமெரிக்காவிலுள்ள அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் நிதிப்பங்களிப்புடனும், 2017 சித்திரை மாதம் 8ம் திகதி திறந்து வைக்கப்பட்டு இயங்கிவருகின்றது.

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை வழிநடத்த தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இந்தியாவில், சென்னை மாற்றுத்திறனாளிகள் கல்லூரியில் ஒருமாத விசேடபயிற்சி வழங்கப்பட்டது. மேலும் உள்ளூரிலும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. காலத்துக்குகாலம் தொடருறும் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெறும் சிறுவர் பராமரிப்பு சிகிச்சை மூலம் இனங்காணப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள் இப்பாடசாலையில் அனுமதிக்கப்படுவார்கள். இங்கு விசேடமாக பயிற்றப்பட்ட சிகிச்சையாளர்களின் கண்காணிப்பில் வகுப்பறை செயற்பாடுகள் நடைபெறுகின்றன. பேச்சு சிகிச்சையாளர், உடலியக்க சிகிச்சையாளர், உளநல மருத்துவர், சிறுவர் மருத்துவர் என பல்வேறு உடல் இயக்க தேவைக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படும்.

விசேட நோக்கமாக முன்னேற்றம் காணப்படும் பிள்ளைகள் விசேட தேவையுடைய ஆசிரிய ஆலோசகர் வழிகாட்டல் மூலம் அண்மையிலுள்ள படசாலையில் இணைக்கப்பட்டு கண்காணிக்கப்படுவார்கள். தற்போது மூவர் பாடசாலையில் இணைக்கப்பட்டு, பிற்பகலில் இங்கு பயிற்சிபெற வருகின்றனர். அதேபோன்று பாடசாலையில் இணைய முடியாதவர்கள் வாழ்வாதார தொழிற்பயிற்சிக்கு அனுப்பப்படுவாகள். இவ்வாறான இரு மாணவர்கள் புனித வளனார் விசேடதேவை வாழ்வாதார பாடசாலையில் இணைந்து பயிற்சி பெறுகின்றனர்.

இப்பாடசாலைக்கு “தீரனியம்“ என்ற பெயர் வைப்பதற்கான காரணம் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பிள்ளையைப்பற்றி ஆய்வு செய்தனர். இப்பிள்ளைக்கு “தீரன்“ என்ற பெயரைச்சூட்டினர். எனவேதான் இப்பாடசாலைக்கும் “தீரனியம்“ என்ற பெயரை வைத்திருப்பதோடு ஓட்டிசம் மாற்றுத்திரனாளியாகவரும் பிள்ளைகளுக்கு “தீரனியர்“ என்று அன்போடு அழைக்கப்படுகின்றனர்.

ஒருநேர பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட தீரணியம் தற்போது இருநேர பாடசாலையாக இயங்கி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. நிலாவெளி தொடக்கம் பொத்துவில் வரையுள்ள பாதிக்கப்பட்ட தீரனியர்கள் இப்பாடசாலையில் பயிற்சிபெற அனுமதி பெற்றனர். எனினும் வதிவிட வசதிகள் இல்லாததினாலும், போக்குவரத்து பிரச்சனையாலும், பொருளாதார துறையில் பின்தங்கி வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வாதாரம்கொண்ட குடும்பங்களாக வாழ்வதால் பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலையில் இணைந்து பயிற்சிபெற சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இது ஒரு குறைபாடாக அமைகின்றது.

எனினும் சமூக விழிப்புணர்வு, ஏற்றுக்கொள்ளல், ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடல், தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலம் முன்னேற்றகரமான வழிமுறைகளில் “தீரனியம்“ பாடசாலை பாதிக்கப்பட்ட தீரனியர் மாற்றுத்திறணாளிகளுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமையும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

# ஸ்ரீவள்ளிபுரம் பள்ளி மாணவர்களுக்கு 14 சைக்கிள்கள்

வசீகரன் சமூக அறக்கட்டளை அமைப்பின் கல்விக்கு கைகொடுக்கும் முயற்சியின் ஒருபகுதியாக, அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய கிராமமாகிய ஸ்ரீவள்ளிபுரம் பள்ளி மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் 14 வழங்கப்பட்டன.

அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் யானைத் தாக்குதலாலும் தொழில்வாய்ப்பின்மையாலும்





வரட்சியினாலும் பாதிக்கப்பட்டு சொல்லொணா துயரதுன்பங்களோடு குடிப்பதற்கு நீரும் நிரந்தர குடியிருப்புக்களும் இன்றி வாழும் நிலையில் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வு மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் வேண்டுகோளுக்கமைய வசீகரன் சமூக அறக்கட்டளை அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டன.

காரைதீவு நிருபர் சகா

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 09

மட்டக்களப்பு படையணி எண்டு நான் கைவைக்கப்போக ஒண்டைச் சொல்லிப்போடுறன். ஏனெண்டா நான் என்ர பக்கத்தால பாத்ததை கேட்டதைத்தான் எழுதப்போறன். இதில சொல்லாத சங்கதியள் கனக்க வரலாம். அதுகள நான் சொல்லுறது கண்டு சொல்லாம கண்டவனைக்கண்டு சொல்லுறதாப்போகும், ஒருநாளும் தலைப்புக்கு அங்கால போறதில்ல எண்டதில நான் இப்பவும் உறுதியாத்தான் இருக்கிறன். இதில ஆரும் என்னோட தனகுப்பட வேண்டாம். அவளவுதான் சொல்லிப்போட்டன்.

பின்ன யாழ்வட்டத்துக்கு அப்ப பொறுப்பாளரா இருந்தவன் செந்தமிழன். பாவம் அவன் மிதிச்சசுத்துப் புல்லுஞ்சாகாது அவளவுபதுமை. கன்னங்கரேலெண்டு உரைச்சுப் பொட்டு வைக்கலாம் அப்பிடிக்கருப்பு. கண்ணுகள் எப்பவும் ரத்தச்சிவப்புத்தான். அவன்ர செயலகத்திலதான் நாங்கள் இப்ப எங்கட செயலகத்தையும் வைக்கிறம். இந்த மட்டக்களப்பு பெடியனையும் என்னையும் ரவி எண்டொருதர் பேட்டி எடுத்தார். முக்கியமா, "என்ன பேசுவியள் பேசிக்காட்டுங்க" எண்டார்.

அதெண்டப்பா சுவத்தைப்பாத்து பேசிறது பேசினதுதான், பின்னேரம் நாச்சிமார் கோவிலடியில கூட்டம் பேசுங்க அண்ணையும் வந்தாப்பிறகு பாப்பம்" எண்டார். பின்னேரம் வழமைபோல கூட்டத்துக்கு முதல் வீதி நாடகம்; அது முடிய அந்தப்பெடியன் எந்த அறிமுகமுமில்லாம ஒலிவாங்கியக் கையில பிடிச்சு பேச ஆரம்பிச்சான். ஏற்ற இறக்கமில்லாம ஒரே சீரா அப்பத்தைய நாட்டு நிலவரத்தை தூய தமிழில பேசி முடிச்சான். சத்தியமா அவன் மட்டக்களப்பெண்டு அவன்ர பேச்சில ஒரு இடத்திலயும் தட்டுப்படயில்ல. அவளவு கிளீனான பேச்சு. அது முடிய நான் அவன்ர கையிலயிருந்து ஒலிவாங்கிய வாங்கி பேசினன்.

அண்டைக்கே ராச் சாப்பாடு சாப்பிடக்கை பொறுப்பாளர் சொல்லிப்போட்டார் "நீங்கள் ரெண்டுபேரும் என்னோட நிண்டாக்காணும் யாழ்வட்டத்தை மாத்திக்காட்டுறன்"எண்டு. அலுங்காம தன்ர தேகத்திலகூட ஒரு அசைவில்லாம பேசுறதில வலு விண்ணன், ஆனா அவன் தனியக்கதைக்கக்குக்க மட்டக்களப்பு மணி வந்திடும்.

" இல்லமணி இப்பிடித்தான் செய்வம்"
"வாங்கமணி கானல்லண்டுபாத்தன்"
"சாப்பிட்டயளாமணி" எண்டு.

கொஞ்சம் கொஞ்சமா கேட்டதுக்கு மறுமொழி சொல்லி பிறகு சுகநலம் விசாரிச்சு எங்களுக்குள்ள பேச்சு வார்த்தை ஆரம்பிச்சிட்டுது.

இவனோட எப்பவும் ராமரோட லெச்சிமணன் மாதிரி இன்னொரு குட்டிப்பெடியன் சிவபாபா இருப்பான். அவன் ஏறக்குறைய என்ர வீரச்சாவடைஞ்ச மகன்மாதிரி இருப்பான். வயதும் அவ்வளவுதான் ஒரு பதினைஞ்சு பதினாறு வரும். என்ரபிள்ளை பதினாறுவயசிலயே வீரச்சாவு. பொடிகூட எடுக்காம விட்டிட்டாங்கள். அதால அவன் உயிரோட இருந்த காட்சி மட்டுந்தான் என்ர நினைவில இருக்கு. சுரேசும் அவனைப்போலவே இருந்ததாலயும் பிரச்சாரம் முடியிற வரைக்கும் எங்களோடயே நிண்டதாலயும் எனக்கு அவனில என்னவறியாம ஒரு பாசம் வந்திட்டுது. அவன் வின்சன்ர ஊர்தானாம். அட நான் முதல்லயிருந்து கதச்ச பெடியன் பேர்தான் வின்சன்.

நாப்பது நாள் ஒண்டா திரிஞ்சு, திண்டுகுடிச்சு பிரச்சார வேலை செய்தம் பிரச்சாரம் முடிய அவரவர் பாட்டில பிரிஞ்சு போயிட்டம். எனக்கா சரியான கவலை இவங்கள் ரெண்டுபேரையும் பிரிஞ்சது . வின்சன் அம்பாறையில மாணவர் அமைப்பு பொறுப்பாளரா இருந்தவனாம். அம்பாறைப்பக்கத்து கதையள் அவன்ர பேச்சில வரும். கேட்டா மறுபடியும் இயக்கத்தில சேரவேணும் போல அவ்வளவு உணர்ச்சிவரும். இப்ப ஆளைக்கண்டும் ஒருமாசமாகுது.

நான் கோப்பாயில ஒருமுகாமில இருந்து யாழ்ப்பாணம் போறதுக்கெண்டு நல்லூர் பின் வீதியில போகயுக்க கம்பன் கழகம் தாண்டி ஒரு கல்வீட்டு வாசல்ல நிண்டு,

### தமிழ்க்கவி

"அன்ரீ அன்ரீ" எண்டு கூப்பிட்டுக் கேக்கிது. சட்டெண்டு பிரேக்க அமத்தி சைக்கிளத்திருப்பினா "அட வின்சன்"பயங்கர சந்தோசம்.

"என்ன இதில நிக்கிறியள்"என்று பரவசத்தோட கேட்டுக்கொண்டே இறங்கினன்.

"வாங்க அன்ரி இதுதான் எங்கட ஒவ்ஸ்" எண்டு என்னைக்கூட்டிக்கொண்டு உள்ளுக்கபோய் ஒரு கதிரையப் போட்டு இருக்க வைச்சிட்டுத்தான் "சுகமா இருக்கிறீங்களோ?"

"ஓ...இதென்ன ஒவீஸ்"எண்டு கேட்டன். எனக்கும் யாழ்ப்பாணம் புதிசுதானே.

"அன்ரீ இது புலிகளின்குரல் ஒவீஸ் இஞ்சதான் பதில் பொறுப்பாளரா போட்டிருக்காங்க" என்றான். புலிகளின்குரல்?! (அதுமட்டுந்தான்) தினசரி கேக்கிறதுதான் ஆனா அந்த நிலையத்துக்கயே வாற வாய்ப்பு கிடைக்கு மெண்டு!..... நான் சத்தியமா கற்பனை செய்தும் பாத்ததில்ல.

ஆனா இது என்ன நாலைஞ்சு கதிரையளும் மேசையுமா ஒரு வீடு மாதிரிக்கிடக்கு. நான் வெளியில சொல்லயில்ல யோசிச்சன். இதுக்குள்ள எனக்கு தேநீர் வந்துது. எனக்கா பெருமை பிடிபடயில்ல. கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்திட்டு, வெளிக்கிடமுதல் வின்சன்,

"அன்ரி உவளவு நல்லா பேசிறீங்கள், உங்களால எழுதவும் முடியும், எங்கட நிலையத்துக்கு எழுதுங்க சிறுகதை கவிதை எதெண்டாலும்"

அடப்பாவி பதினாலு வயசிலயிருந்து எழுதிக்கொண்டுதானே இருக்கிறன். எழுதி எழுதி உரப்பையில போட்டு நிரப்பி நெருப்பு வைக்கிற கதைய இவனட்ட எப்பிடி சொல்லுறது பின்னேரமே நான் எழுதி வைச்சிருந்த கதையொண்டைக் கொண்டுவந்து வின்சனட்ட குடுத்தன்.

ஒரு கிழமை கழிச்சு நான் அதால போகேக்க சுரேஸ் என்னக் கண்டிட்டு அண்ணை தேடினவர் எண்டான். நான் வின்சனட்ட போனன். அண்டைக்கும்

தேத்தண்ணி உபசாரம், போக தங்கட ஊருத்துளவாரங்களையும் எங்கட வன்னித்துளவாரங்களையும் பங்கு போட்டம்; அட இப்ப நாங்கள் ரெண்டு பேரும் மணிக்கணக்கா கதைக்கிறதுக்கு விசயங்கள் வந்து கொண்டேயிருந்துது.

அப்பதான் ஒருவர் நிலையத்துக்கு உள்ள எங்கயோ இருந்து வந்தவர் எங்களக் கண்டிட்டு, நீங்கதானே அந்த கதை எழுதினது." எண்டார்.(இவர் மண்டபத்தில ஆரோ எழுதினதை நான் கொணந்திட்டன் எண்டு நினைக்கிறாரோ) "அட நானேதான்"; எண்டன்.

"திறங்கதை... வாற வியாழக்கிழமை எட்டரைக்கு போகுது கேளுங்க" எண்டார். பக்கெண்டு வானத்தில எழும்பினமாதிரி ஒரு உணர்ச்சியில, எனக்கு தலை சுத்திருச்சு..

(இன்னும் வரும்...)

## மட்டக்களப்பில் 1000 மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளும் நாட்டியாஞ்சலி



சர்வதேச நடன தினத்தை முன்னிட்டு, மே மாதம் 3 ஆம் திகதி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் மட்டக்களப்பு கல்வி வலய நடனப் பிரிவை சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளும் நாட்டியாஞ்சலி நிகழ்வு ஒன்று நடக்கவிருக்கின்றது.

சர்வதேச நடன தினம் ஏப்ரல் 29ஆம் திகதி நடக்கவுள்ளது. அதனை முன்னிட்டு மே 3 ஆம் திகதி நடக்கவுள்ள இந்த நிகழ்வில் மட்டக்களப்பு கல்வி வலயத்தை சேர்ந்த 1000 மாணவ மாணவிகளும், அவர்களை பயிற்றுவிக்கும் 25 ஆசிரியைகளும் கலந்துகொள்கிறார்கள்.

வெபர் மைதானத்தில் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு நடக்கவுள்ள இந்த நிகழ்வுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கே. பாஸ்கரன் தலைமை தாங்குகிறார்.

நாட்டியாஞ்சலி நிகழ்வுக்கான ஒழுங்கமைப்பு மற்றும் நெறியாள்கையை வலய நட ஆசிரிய ஆலோசகர் திருமதி மலர்விழி சிவஞானஜோதிகுரு மேற்கொள்கிறார்.

## மட்டக்களப்பு தமிழ் இளைஞர்களின் புதுவருட நிகழ்வுகள்




மட்டக்களப்பு தமிழ் இளைஞர்கள் என்னும் அமைப்பின் தமிழ் - சிங்கள புதுவருட கொண்டாட்ட நிகழ்வுகள் மாநகரசபை சிறுவர் விளையாட்டு மைதானத்தில் (கல்லடிப்பாலத்துக்கு அருகே) ஏப்ரல் 28ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.


புத்தாண்டை முன்னிட்டு இந்த கொண்டாட்டங்கள் மட்டக்களப்பின் தமிழர் பாரம்பரியம் மருவி விடாமல் காப்பாற்றும் நோக்கையும் இலக்காகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

மாட்டு வண்டி பவனி, மயில் நடனம், உறியடி, கபடி, குறவஞ்சி விளையாட்டுக்கள் போன்ற இன்னும் பல பாரம்பரிய கலை வடிவங்கள் மற்றும் விளையாட்டுக்கள் ஆடப்படவுள்ளன. இந்த வகையிலான சுமார் 32 நிகழ்வுகளுக்கு ஏற்பாடாகியுள்ளது.



# கடல் வேடுவர் : இறுதி ஆதிக்குடிகளின் அழிவு!?






"The Veddas " நூலை சிங்களத்துக்கு மொழிபெயர்த்த சந்திரசிறி ரணசிங்க இலங்கையின் பௌத்த கலைக் களஞ்சியத் தொகுப்புக்கே குழுவில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவமுடையவர். 19.04.2012 அன்று லண்டன் பி.பி.சி "சிங்கள சந்தேசய" தொகுத்த நிகழ்ச்சியில் இப்படிக் கூறுகிறார்.

இலங்கையின் வேடுவர் பற்றி இது வரை இப்படி விரிவான ஒரு நூல் வந்ததில்லை. மார்ட்டின் விக்கிரமசிங்க போன்றோர் மிகவும் போற்றிய நூல் இது. செலிக்மன் அன்று இந்த ஆய்வை செய்யாது போயிருந்தால் நாம் வேடுவர் பற்றிய எஞ்சிய விபரங்களைக் கூட பெறாது போயிருப்போம். சிங்கள மொழியில் நூற்றுக்கணக்கான நூல்களைக் காண முடிகின்றன. ஆயிரக்கணக்கான கட்டுரைகளையும் காண முடிகிறது. தமிழில் கட்டுரைகளாகக் காண்பது கூட அரிது.

கடல் வேடுவரை "வெர்தாஸ்" (Verdas) என்றும் அழைக்கப்படுவதை செலிக்மன் குறிப்பிடுகிறார். வேடுவரின் மொழி, நடனம், இசை, மருத்துவம், வாழ்வு முறை, உணவு, தற்காப்பு, தன்னிறைவு, சூழலியல் பற்றிய அவர்களின் கையாளுகை என அனைத்து குறித்தும் செலிக்மன் குறிப்பிட்டுள்ளார். மிகவும் வேகமாக அழிந்துவரும் வேடர் வகை என கடல் வேடுவரைக் குறித்தார் செலிக்மன்.

செலிக்மனின் ஆய்வை பின்வந்த பல ஆய்வாளர்களும் கொண்டாடியபோதும் பிரபல மானுடவியலாளரான பேராசிரியர் கணநாத ஒபயசேகர "செலிக்மன் தனது ஆய்வுக்காக போதிய அளவு 'தூய வேடுவர்களை' சந்திக்கவில்லை" என்று விமர்சிக்கிறார்.



கடல் வேடுவர்கள் ஒரு காலத்தில் நாட்டின் உட்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் என்று சில ஆய்வாளர்கள் எழுதிவைத்திருக்கிற போதும் அதில் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று வேறு சில ஆய்வாளர்கள் மறுத்திருக்கிறார்கள்.

செலிக்மனின் ஆய்வில் அவர் இலங்கை வேடுவர்களை மூன்று பிரிவினராக வகைப்படுத்துகிறார். கிராமிய வேடுவர், கல் வேடுவர், கடல் வேடுவர் (கரையோர வேடுவர்) என வரையறுக்கிறார். கிராமிய வேடுவர் ஓரளவு வளர்ச்சியடைந்தவர்கள், காலபோக்கில் எல்லைப்புற கிராமங்களோடு ஓரளவு ஒன்று கலந்தவர்கள். கல் வேடுவர்களும், வேட்டை வேடுவர்களும் செறிவான காடுகளுக்குள் வாழ்பவர்கள். சற்று காட்டுமிராண்டித்தனமான குணமுடையவர்கள். கிராமிய மக்களிடம் இருந்து ஒதுங்கி தனித்து வாழ்ந்து வருபவர்கள் என்று சாராம்சத்தில் கூறுகிறார்.

மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பரவலாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாவட்டங்களில் ஆதிவாசிகளின் வாழ்விடங்கள் இன்றும் உள்ளன.

கிழக்குக் கரையோரப் பகுதிகளில் குறிப்பாக மாங்கேணி, பனிச்சங்கேணி, குஞ்சங்கல்குளம், முருத்தனி போன்ற பிரதேசங்களைச் சூழ வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இவர்களின் பாரம்பரிய ஆதிவாசி மொழி இப்போது சிங்களமும், தமிழும் கலந்ததாக ஆகியிருக்கிறது. எந்தா மொழி செல்வாக்குள்ள பகுதியை அண்டி வாழ்கிறார்களோ அந்த மொழி அவர்களின் மொழியுடன் கலந்துவிட்டதை யதார்த்தம் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. அதுபோலத் தான் அவர்களின் இன்றைய பெயர்களும் தமிழ் பிரதேசங்களில் தமிழ்ப் பெயர்களாகவும், சிங்களப் பிரதேசங்களில் சிங்களமாகவும் இருக்கிறது. ஆனால் தமிழையே பெருமளவினர் கலந்து பேசுகின்றனர்.

"ஜேம்ஸ் ப்ரவ்" மேற்கொண்ட ஆய்வுகளின் படி செலிக்மனின் சில கருத்துக்களை மறுக்கிறார். வேடுவர் மத்தியிலும் சாதியத்துக்கு ஒப்பான கோத்திரங்கள் ரீதியான பிரிவுகள் (ருயசரபந என்று அந்த முறையை அழைப்பார்கள்.) இருப்பதாக அவர் தெரிவிக்கிறார். (துயஅநள டீசழற: ஏநனனய எடையயபந ழக யுரளெயனயிரசய: வாந ஈளைவழசல ழக யவெசழிழடழபல ழக ய உழஅஅரவெைல ழை ஞசை டுயமெய, ஒளைக, 268 ௗ. ஞநயவைடந யனெ டுழனெழெ: ருளைஎநசளைவல ழக றுயளாiபெவழெ ஞசநளள, 1978.). ஆனால் ஜேம்ஸ் ப்ரவ் ஆதாரம் காட்டும் வேடுவப் பிரிவினர் சிங்கள சமூகத்தை அண்டியவர்களாக இருப்பவர்கள். கிழக்கில் உள்ள கடல் வேடுவர் மத்தியில் அப்படி இருப்பதை எவரும் உறுதி செய்ததில்லை.

யுத்தத்தின் காரணமாக தமது வாழ்விடங்களைவிட்டு தொடர்ச்சியான இடப்பெயர்வுக்கு உள்ளான இம்மக்களின் அடையாளம் மீண்டும் தொலைந்து, சாதாரண ஏழை கிராமத்தவர்களோடு கலந்துவிட்டதையும் காணமுடியும். அதிலும் குறிப்பாக தமது பிரதேசங்களை அண்டிய கிராமங்களில் வாழ்ந்த விளிம்பு நிலை சமூகத்தினரோடு (குறிப்பாக ஒடுக்கப்பட்ட சாதியினரோடு) திருமணமாகி கலந்துவிட்டதையும் காண முடியும்.

1966 காலப்பகுதிகளில் காட்டு மரங்களை வெட்டுவதை அரசாங்கம் தடை செய்ததுடன் சில வேடுவர் வாழ்விடங்களில் வாழ்ந்த வேடுவக் குடும்பங்களை கிராமங்களில் கொண்டுவந்து குடியிருக்கச் செய்துள்ளனர். சமீபத்தில் சமுசர இணைவைத்தளத்திற்காக மட்டக்களப்பு கடல்வேடுவர் பற்றிய கட்டுரைக்காக இந்துனில் உஸ்கொடவத்த பல விபரங்களை சேகரித்து வந்திருக்கிறார். செலிக்மனின் நூலில் குறிப்பிட்ட பிரதேசங்கள் உட்பட பின்னர் அவர்கள் இடம்பெயர்ந்த இடங்களுக்கும் அவர் சென்று விபரங்கள் சேகரித்திருக்கிறார்.

அவர் தற்போதைய கடல்வேடுவர் தலைவராக அறியப்படும் நல்லதம்பி வேலாயுதம் அவர்களை மதுரங்குளம் பிரதேசத்தில் இருக்கும் குஞ்சன்குளம் கிராமத்திற்கு சென்று சந்தித்து எடுத்த பேட்டியில் வேலாயுதம் ஓரிடத்தில் இப்படி குறிப்பிடுகிறார்.

"...சிறு குடிசைகளை அமைத்து இங்கு வாழ்ந்து வந்தோம். யுத்த காலத்தின் போது அடிக்கடி இங்கிருந்து ஓட நேரிடும். பின்னர் வந்து பார்த்தால் யானைகள் எமது இருப்பிடத்தை முற்றாக சிதைத்திருக்கும். இப்படி அடிக்கடி நேர்ந்த நிலையில் அரசாங்கங்கள் எங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தன. இப்போது இந்த கிராமத்தில் "கலக்காத" (தூய) வேடுவ குடும்பங்கள் 64 உள்ளன. அருகில் உள்ள கிரிமிச்சை என்கிற கிராமத்தில் "கலக்காத வேடுவக் குடும்பங்கள் 95 உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் வேடுவக் குடும்பங்களைக் கொண்ட 22 கிராமங்கள் உள்ளன."

கல்விப் பொதுத் தராதரம் வரை கற்ற ஒருவரும் தமது கிராமத்தில் இல்லையென்றும் வேலாயுதம் தெரிவிக்கிறார். மாதமொருமுறை மட்டக்களப்பிலிருந்து வைத்தியர் வந்து விட்டு செல்வார் என்றும், அவசர தேவைகளுக்கு வாகரை அல்லது வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு செல்வதாகவும், தமது கிராமத்துக்கு தினசரி ஒரு தடவை மாத்திரமே பஸ் வந்து செல்கிறது என்கிற விபரத்தையும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"இந்த கிராமத்தில் வாழும் சில ஆதிவாசிகள் சற்று வசதிகள் வந்ததும் அவர்கள் தம்மை ஆதிவாசிகளாக அடையாளம் காட்டுவதை தவிர்த்தே வருகிறார்கள். பதிலாக தமிழர்கள் என்றே அடையாளப்படுத்துகிறார்கள். முன்னெல்லாம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் "இலங்கை வேடுவர்" என்றே பதிந்தவர்கள் இப்போது இலங்கைத் தமிழர் என்று பதிகின்றனர். இந்த சிக்கல் குறித்து கொழும்பிலும் நாங்கள் கதைத்திருக்கிறோம்" என்று வேலாயுதம் குறிப்பிட்டுள்ளார்.

மீன் பிடித்தல், தேன் சேகரித்து வருதல், சிறு பயிர்ச்செய்கை, நெற்பயிர்ச்செய்கை, சந்தைக்கு தேவையான சிலவற்றை தயாரித்தல் என்பவற்றை செய்து வந்தபோதும் கூலித் தொழிலில் இப்போது அதிகம் ஈடுபடுகிறார்கள்.

தமிழ் பெரும்போக்குக்குள் இவர்களை உள்ளிளுக்காத போக்கு தொடரவே செய்கிறது. ஒரு சாரார் தமிழ் மக்களுடன் கலந்து தமிழ் அடையாளத்துக்குள் இழுக்கப்பட்டுவிட்டபோதும் இன்னொரு

### என்.சரவணன்

சாரார் தமது சுய அடையாளங்களுடன் வாழ வழிவகுக்கும் செயற்திட்டம் தமிழ் அரசியல் சக்திகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

2014இல் வாகரையில் ஆதிவாசிகள் தினத்தின்போது கடல்வேடுவர்களும், சிங்கள பிரதேசங்களில் வாழும் "வன்னிய எத்தோ" எனப்படும் வேடுவரும் ஒன்றாக சந்தித்து கொண்டாடியிருந்தனர்.

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு 2017 யூன் மாதம் "இலங்கையின் மக்கள்" என்கிற ஒரு நூலை வெளியிட்டிருந்தது. 381 பக்கங்களைக் கொண்ட அந்த பெரிய நூல் இலங்கையர்களின் மொழியில் வெளியிடப்படாதது துரதிஷ்டவசமானது. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டவேளை அது விரைவில் சிங்கள, தமிழ் மொழிகளில் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் இன்று பத்து மாதங்கள் கடந்தும் அது நிறைவேற்றப்படவில்லை. அந்த நூலில் இலங்கையில் 19 இனக் குழுமங்களை அடையாளங்கண்டு அவர்களைப் பற்றிய சிறந்த கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. அதில் ஒன்று கடல் வேடுவர் பற்றியது. அந்த சிறந்த கட்டுரையை எழுதியிருப்பவர் இலங்கையில் விளிம்புநிலை மக்கள் பற்றிய ஆய்வுகளை தொடர்ச்சியாக செய்துவரும் பேராசிரியர் காலிங்க டியூடர் சில்வா.

செங்கலடி கிராமசேவைப் பிரிவுக்குட்பட்ட முருத்தனி கிராமத்தைச் சூழ 250 கடல் வேடுவக் குடும்பங்கள் வாழ்ந்துவருவதாக அங்கு 2016 இல் சென்று ஆய்வுகளை பேராசிரியர் காலிங்க டியூடர் சில்வா குறிப்பிடுகிறார்.

அருகிவரும் வேடுவர் இனத்தின் மத்தியில் தமது சுய அடையாளப்பேணல் என்பது இனிவரும் காலங்களில் போதிய அளவு சாத்தியங்கள் இல்லை என்று உணரத் தொடங்கியிருக்கிறது. தமது "வேடுவ" அடையாளம் அவமானமாக பார்க்கும் ஒரு சந்ததியும் கூடவே தலைக்கத் தொடங்கியிருக்கிறது. அவர்களின் வாழ்வியல் முறைமைகள் முற்றிலும் வேகமாக மாறுபட்டு வருகிறது. தலித் மக்கள் தம்மீதான ஒடுக்குமுறையிலிருந்து


தொடர்ச்சி பக்கம் - 22

# மட்டக்களப்பின் தனித்துவ அம்சங்கள்!

வரலாறு, மொழி, பண்பாடு, சமூகக் கட்டமைப்பு ஆகிய நான்கு அம்சங்களில் மட்டக்களப்பின் தனித்துவம் வெளிப்படுகின்றது. ஒப்பீட்டளவில் இது தனிமைப்படுத்தப்பட்ட பிராந்தியமும் (Zone of Relative Isolation) ஆகும். இந்த தனிமைப்படுத்தப்படுத்தலுக்கு புவியியல், வரலாற்றுக் காரணங்கள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார் மானிடவியலாளரான டெனிஸ் பி. மக்ஜில்வ்ரே. பண்பாடு என்பது இசை, இலக்கியம், வாழ்க்கைமுறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், திரைப்படம் எனப் பரந்த பொருளில் பயன்படுத்தப்படும் ஒரு சொல் என்பதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும். மானிடவியலாளர்களைப் பொறுத்தவரை பண்பாடு என்பது கலை, அறிவியல், நெறிமுறைகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.
மானிடவியலாளரான டெனிஸ் பி. மக்ஜில்வ்ரே (Dennis B. McGilvray), அக்கரைப்பற்று, கொக்கட்டிச்சோலை ஆகிய இரு இடங்களில் விரிவான ஆய்வுகளைச் செய்தவர். அவர் எழுதிய "முக்குவர் வன்னிமை : இலங்கையின் மட்டக்களப்பில் தமிழர் சாதியும் தாய்க்குடிக் கருத்தியலும்" என்ற கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.



டெனிஸ் பி. மக்ஜில்வ்ரே, Curcible of Confilct ஜமோதலின் உலைக்களம்ஸ எனும் நூலிலும் மட்டக்களப்பின் சமூக - வரலாற்றின் தனித்துவமான பண்புகளை விபரித்திருக்கிறார். இந் நூல் பற்றிய அறிமுகக் கட்டுரையொன்றை எழுதியிருக்கிற க.சண்முகலிங்கம், மக்ஜில்வ்ரேயின் நூலின் உதவியுடன் மட்டக்களப்பின் சமூக - வரலாற்றின் தனித்துவமான பண்புகளை பின்வருமாறு அட்டவணைப் படுத்தியிருக்கிறார்.
பிராமணர் முக்கியம் பெறாத சாதிப் படிநிலை அமைப்பு.
சமயப் பன்மைத்துவம் (இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர், பௌத்தர்).
தாய்வழிக் குடி மரபு.
சீதன முறை, கணவன் மனைவியின் தாய் வீட்டில் குடியிருத்தல் [Matrilocal Residence]
முக்குவரின் வீரமரபு அதாவது போர் வீரர்களாகவும் அரசாட்சி அதிகாரம் கொண்டோராகவும் முக்குவர் இருந்தனர் [Mertial Tradition]
சாதி மேலாதிக்கத்தை விட அரச அதிகார மேலாதிக்கம் அழுத்தம் பெற்று இருந்தமை.
வரலாற்று ரீதியில் ஆழமான வேர்களைக் கொண்ட முஸ்லிம் சமூகம் அருகருகே இருத்தல்.
வீரசைவ குருக்கள் வம்சம் பிராமண எதிர்ப்பு மரபை உடையதாக இருத்தல்.
மட்டக்களப்பு பற்றி விரிவான தகவல்களைத் தேடியறிந்து மட்டக்களப்பு தமிழகம் எனும் நூலை எழுதிய வி.சீ.கந்தையா தனது நூலில்; மட்டக்களப்பின் தனித்துவமான அம்சங்களாக உணர்ச்சிக் கவிநலம், நாட்டுக் கூத்துக்கள், நீரரமகளிர், செந்தமிழ்ச் சொல்வளம், கண்ணகி வழிபாடும் அதனோடிணைந்துள்ள கண்ணகி சடங்கு - வழக்குரை - கொம்பு விளையாட்டு – தமிழ்க்குரவை - வசந்தன் ஆடல் மற்றும் புலவர் பரம்பரை, மருந்தும் மந்திரமும், வரலாறு என்பன பற்றி விபரித்திருப்பதுடன், திருமணமுறை – சமயம் - குலவிருதுகள் - பழக்கவழுங்கங்கள் எனச் சில



தனித்துவமான அம்சங்கள் பற்றியும் விபரித்திருக்கிறார். மட்டக்களப்பின் பழக்க வழக்கங்கள் பற்றிய விபரிப்பில், மருமக்கட்தாய முறை, தேங்காய் கலந்த உணவுண்ணல், தலைக்குத் தேங்காயெண்ணெய் பூசுதல், மங்கல நிகழ்ச்சிகளில் குரவை அயர்தல், நாட்டுக்கூத்து நிகழ்த்துதல் - பெண்ணடி முதுசம் போன்ற சேரநாட்டுடன் - மலையாளக் கரையுடன் தொடர்புற்றுக் காணப்படும் பழக்கவழக்கங்கள் பற்றி குறிப்பிட்டிருக்கிறார் வி.சீ.கந்தையா.

**"பண்டைய சேரஉ தேசம் தொடங்கி மட்டக்களப்புவரை உள்ள பண்பாட்டுப் பிரதேசம் தாய்வழிப் பிரதேசம்"**

வி.சீ.கந்தையா, மட்டக்களப்பின் ஆரியக் கலப்பற்ற மணமுறை பற்றி தனது நூலில் விபரித்திருக்கிறார். தொடர்ந்து, மட்டக்களப்பின் வேளாண் செய்கை, வேளாண் செய்கையின் போது பயன்படுத்தும் குழூஉக்குறிச் சொற்கள், பொலிப்பாடல்கள், ஓய்வு காலங்களில் மக்கள் மேற்கொள்ளும் வசந்தனடித்தல் மற்றும் நாட்டுக்கூத்து, கொம்பு விளையாட்டு, கண்ணகியம்மன் குளுத்திப்பாடல், கண்ணகையம்மன் வழக்குரை, பழந்தமிழர் முருக வழிபாடு என்பவற்றுடன், பழங்காலத் தொடர்புடைய ஆபரணங்கள் எனப்பல விடயங்கள் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார்.
கலாநிதி சு.வித்தியானந்தன்; "ஈழ நாட்டிலே கிராமியக் கவிதை நலம் நிறைந்துள்ள பகுதி மட்டக்களப்பு, தேனுக்கும் பாலுக்கும் தமிழர் வீரத்திற்கும் பெயர் பெற்ற மட்டக்களப்பு, மக்கள் கலைகளைப்பேணி வளர்பதிலும் தலைசிறந்து விளங்குகின்றது. உணர்ச்சி கவிதை நிறைந்த மட்டக்களப்பு நாட்டுப்



பாடல்கள் பல்வேறு துறைப்பட்டு, நிறைந்து வழங்குகின்றன. கிழக்கிலங்கையின் மூலை முடுக்குகளிலும் வயல் வெளிகளிலும் வீடுகளிலும் வீதியிலும் உலவும் இப்பாடல்களை.." என "மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்" எனும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.
பேராசிரியர் மௌனகுரு "மட்டக்களப்புப் பிரதேசம் இந்தியாவினின்று வெகு தொலைவிலிருப்பதாலும் ஐரோப்பிய நாகரீகத்திற்குள்ளான இலங்கையின் பிரதான பகுதிகளிலிருந்து விலகியிருப்பதாலும் ஆரியமயமாக்கம், மேற்கு மயமாக்கம் என்ற இரண்டு பண்பாட்டுத் தாக்கங்களுக்குப் பெரிதும் உட்படாத பிரதேசமாகவே இருக்கின்றது. எனவே புராதன அடையாளங்களைத் தேடும் தமிழ்ப் பண்பாட்டாளருக்கு அரிய சுரங்கமாக இருப்பது மட்டக்களப்புத்தான். புராதன இலங்கைப் பண்பாட்டின் எச்சங்களைக் கூட மட்டக்களப்பின் மிகப் பின்தங்கிய கிராமப் பகுதிகளில்தான் காணமுடியும்." என, வெல்லவூர்க்கோபாலின் "மட்டக்களப்பு வரலாறு – ஒரு அறிமுகம்" எனும் நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

**கிரான் விஜய்**

பக்தவத்சல பாரதி, 2011 அக்டோபர் "காலச்சுவடு" சஞ்சிகையில் அவர் எழுதிய யாழ்ப்பாணத்து நினைவுகள்



என்ற கட்டுரையில், "மரபுவழிப்பட்ட இந்த மூன்று வாழ்வு முறைகளும் (யாழ்ப்பாணத் தமிழர்கள், மட்டக்களப்புத் தமிழர்கள், சிங்கள மக்கள்) மூன்று வெவ்வேறு சமூக அசை வியக்கங்களைக் கொண்டுள்ளன" எனக்குறிப்பிடுகிறார்.
மேலும், "தமிழகத்தில் தமிழ்ச் சமூகம் கொண்டுள்ள தொன்மையைவிட ஈழத்தமிழர்கள் கொண்டுள்ள பாரம்பரியம், தமிழர்களின் தொன்மையை நன்கு விளக்குகிறது.



தமிழ்ச் சமூகத்தின் தொன்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் சேரர் தேசத்தையும் மட்டக்களப்பு, யாழ்குடா நாட்டையும் ஒப்பிட்டு அறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.
மனித குலத்தில் தோன்றிய முதல் சமூக அமைப்பான தாய்வழிச் சமூக முறையை இத்தகைய ஒப்பிட்டு நிலையில்தான் மீட்டுருவாக்கம் செய்ய முடியும். சேர நாட்டில் காணக்கூடிய 'மரு மக்கள்தாய முறை' இன்னும் உயிர்ப்புடன் மட்டக்களப்பில் உள்ளது." எனவும் குறிப்பிடுகிறார்.
அத்துடன் "...பண்டைய சேரர் தேசம் தொடங்கி மட்டக்களப்புவரை உள்ள பண்பாட்டுப் பிரதேசம் தாய்வழிப் பிரதேசமாக இருப்பதை அறிய முடிகிறது." எனவும் "தமிழகத்தில் இன்று கண்ணகி வழிபாடு முற்றிலும் இல்லை. அது மாரியம்மன் வழிபாடாக முழுவதும் உருமாறிப்போய் நிற்கிறது. ஆனால் ஈழத்தில் கண்ணகி வழிபாடு உயிர்ப்புடன் இன்றும் காணப்படுகிறது. குறிப்பாக, மட்டக்களப்பில் 30க்கும் மேற்பட்ட கண்ணகி கோயில்கள் இன்றும் உள்ளன." எனவும் "கூத்து ஆற்றுகையுடன் தொடர்புடையவர்களை 'அண்ணாவியார்' என்று மக்கள் அழைக்கின்றனர். இத்தகைய வழக்கத்தைத் தமிழகத்தில் அதிகம் காண முடியவில்லை." எனவும் குறிப்பிட்டுள்ளார்.
மண்டூர் பிரதேச பிரயாணம், பிராமணியமும் ஐரோப்பியமும் அதிகம் கலக்காத ஒரு தனித்துவமான தமிழ்ப் பண்பாட்டினை தனக்கு உணர்த்தியதாகக் குறிப்பிட்டார் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். அவர் தனித்துவமான மட்டக்களப்பின் பழக்க வழங்கங்கள் பற்றியும் அக்கறை



கொண்டிருந்திருக்கிறார் எனக் குறிப்பிட்டிருக்கிறார் பேராசிரியர் மௌனகுரு, "நினைவில் நிலைத்தவை - பேராசிரியர் கா.சிவத்தம்பியின் மட்டக்களப்புடனான உறவுகள்" எனும் கட்டுரையில்.
அத்துடன், தேசத்துக் கோயில், ஊர்க்கோயில் என்ற பிரிவு, மட்டக்களப்புச் சமூகத்தையும் பண்பாட்டையும் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் எனவும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.
மேலும், "மட்டக்களப்பின் மதம்சாராக் கட்டிடக் கலைகள்", "மட்டக்களப்பின் பனையோலை வேலைப்பாடுகள்(கைவினைகள்)" போன்ற மட்டக்களப்பின் கலை வெளிப்பாடுகளின் ஆய்வுகள் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் வழிகாட்டுதலின் கீழுருவானவையாகும்.

**"புராதன அடையாளங்களைத் தேடும் தமிழ்ப் பண்பாட்டாளருக்கு அரிய சுரங்கமாக இருப்பது மட்டக்களப்புத்தான்"**

கிருபா இராஜரெட்ணம், "புவியியலின் பல்வகைமையான பண்புகளை ஒரே இடத்தில் அவதானிப்பதற்கு ஏற்ற இடம் மட்டக்களப்பு எனலாம். எழில்மிக்க கரையோரத்தையும், வளம் மிக்க வாவிகளையும், நிலத்தை வரண்டு போகவிடாது நகருக்குள் ஊடுருவிப் பாயும் நீரோடைகளையும் (தோணா) தனித்துவமாகக் கொண்டு புவியியல் ரீதியில் என்றும் சிறப்பு மிக்கதுதான் மட்டக்களப்பு மாவட்டம்." எனக்குறிப்பிட்டிருக்கிறார் 2011 தேனகம் மலரில் எழுதிய "மட்டக்களப்பு நகர் : - புவியியல் அமைவும் முக்கியத்துவமும்" எனும் கட்டுரையில்.
மேலும், மட்டக்களப்பின் புவியியல் ரீதியான இடம் சார் முக்கியத்துவமும் வெளியுருவவியல் ரீதியிலான அதன் கட்டமைப்பும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனக் குறிப்பிடுகிறார் கிருபா இராஜரெட்ணம். வட கீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று, உள்நாட்டு நீர்நிலைகள் முக்கியமானவை என்பது அவரது கருத்து.
மட்டக்களப்பின் தனித்துவமான அம்சங்கள் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கிற விடயங்களே இவை. இவை ஒவ்வொரு விடயம் குறித்தும் தகவல்களைச் சேகரித்துப் பாதுகாப்பதுவும், விரிவாக ஆய்வு செய்ய வேண்டியதும் அவசியமான பணிகளாகும்.
எனினும் மட்டக்களப்பிற்குரிய தனித்தவமான அம்சங்கள், இன்று வெகுதீவிரமான மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
அதேவேளை இங்கு குறிப்பிடப்படாத வேறு சில தனித்துவமான அம்சங்களும் மட்டக்களப்பிற்குரியதாக காணப்படலாம்

தொடர்ச்சி பக்கம் - 22





# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

## ஒருதலைக் காதல்

தங்களது மனதுக்குப் பிடித்த பெண்ணை எப்படியாவது அடைந்துவிடத் துடிக்கும் ஆண்களின் வாய்மொழிகளாகவும், அவற்றிற்கு மறுமொழிகளாகவும் அமைந்துள்ள பாடல்கள் சிலவற்றைக் இப்பகுதியில் காணலாம்.

வளமான மண்ணை மட்டுமல்ல, அழகான பெண்களையும் கொண்டது மட்டக்களப்பு நாடு. வீடுகள் எல்லாம் நெல் மூடைகள். வீட்டுக்கு வீடு கறவை மாடுகள். பச்சைப்பசேலென்ற காய்கறித் தோட்டங்கள். பால், தயிர், மீன், இறால், நண்டு... இப்படி பற்றாக்குறையில்லாத வளமான பிரதேசம் என்பதால் மக்களின் மனமெல்லாம் மகிழ்ந்திருந்தது. அதனால் அவர்களின் முகமெல்லாம் எப்போதும் மலர்ந்திருந்தது.

வாழ்வு செழித்திருந்ததால் வாளிப்பாக உடல் கொழித்திருந்தது. அதிலும் பெண்கள், கிராமத்து அழகையெல்லாம் தத்து எடுத்தவர்கள் போலப் பார்ப்பவர்களைப் பித்தாக்கும் அழகோடு பிறந்திருந்தார்கள்.

அத்தகைய அழகிய பெண்களை விரும்பிய ஆண்களுக்கு அவர்களை அடைந்தே தீரவேண்டும் என்கின்ற வேட்கை இருப்பது இயல்பானதே. அந்த ஆசையை வெளியிடுவதிலும் விரும்பிய பெண்ணை அடைவதிலும் எத்தனையோ வழிகளை ஆண்கள் நாடினார்கள்.

பெண்களைப் பொறுத்தவரை ஒருதலைக்காதல் வயப்பட்டுவிட்டால் அந்த எண்ணத்தைத் தம் மனதினுள்ளேயே போட்டுப் புதைத்து விடுபவர்களாகவே பொதுவாக இருக்கிறார்கள்.
ஆண்களோ அதற்கு மாறானவர்கள். அந்தப்பெண்ணை அடையும்வரை ஓயாதவர்கள் சிலர். நாடியவள் கிடைக்காமல் தாடி வளர்த்தவர்கள் பலர். தற்கொலை செய்தவர்கள் சிலர். வற்புறுத்தி மணந்தவர்கள் மற்றும் சிலர். பலவந்தமாக அடைய முயன்று வாழ்வைப் பாழாக்கிக்கொண்டவர்கள் இன்னும் சிலர்.

அத்தகைய வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஒருதலைக்காதல் வயப்பட்டோர் தமது எண்ணங்களை வெளிப்படையாகப் புலப்படுத்தி வெளியிட்ட எண்ணற்ற பாடல்கள் உள்ளன.

நெடுநாட்களாக வெளியூரிலிருந்தவன் தன் கிராமத்திற்குத் திரும்பியதும் தனது மாமியிடம் தன் ஆசை மச்சாளைப்பற்றி விசாரிக்கிறான்.

அஞ்சிலே பிஞ்சிலே
அறியாத நாளையிலே
தொட்டிலாட்டி நான் வளர்த்த - என்ர
தோகைமயில் எங்க மாமி?
ஒரு மாமியின் பதில் எப்படியும் இருக்கலாம். ஆனால் இந்த மாமியின் பதில் இப்படியிருக்கிறது.

கட்டிலிலே நீ படுக்க கையாட்கள்
வேலைசெய்ய
பட்டெடுத்து முகம் துடைக்க - இப்போ
பருவமில்லை மருமகனே

இதில் அவள் குறிப்பாக எதனைச் சொல்கிறாள் என்பதே இதிலுள்ள சிறப்பு.

அவள் இன்னும் பூப்படையவில்லை என்பதை எவ்வளவு பூடகமாக அவனுக்குப் புலப்படுத்துகிறாள்!

மாமி மாட்டுப் பண்ணைக்குச் சொந்தக்காரி. மருமகன் முறையான ஒருவனே அந்த மாட்டுப் பண்ணையைப் பராமரித்துக் கொண்டிருக்கிறார். அவளுக்குப் பருவமடைந்த பெண்கள் பலர் உள்ளனர். அவர்களில் ஒருத்திமேல் காதல்கொண்ட அவன் தனக்கேயுரிய தொழில்முறை வார்த்தைகளால் குறிப்பாக அவளைக் குறிவைத்துத் தனக்குக் கட்டித்தருதாறு கேட்கின்றான்.

பட்டியிலே நிற்கும் அந்தப்
பார்வைக்கு ஏற்ற நாகை
கட்டி எனக்குத் தந்தால்
கையெடுத்துக் கும்பிடுவேன்

பெண்ணைப் பெற்றவளின் பதில் பண்ணோடு வருகிறது.
ஏழவண நெல்லும்
எருமைமாடு கன்றுகளும்
தாறதுதான் உங்களுக்குச்
சம்மதமோ சொல் பொடியா

அவனிடம் இதையெல்லாம் கொடுக்க வசதியில்லை என்று தெரிந்துதான் இப்படிக் குத்தலாகக் கேட்கிறாள். திடீரென்று இப்படிக் கேட்டதும் அவன் திகைத்து விட்டான். இருந்தாலும் முயற்சியைக் கைவிடவில்லை. மேலும் கேட்டுப்பார்க்கிறான் இப்படி-

ஓடியோடிக் காசுழைப்பேன்
ஓலைமட்டை நான் இழைப்பேன்
சேனை வெட்டிச் சோறு கொடுப்பேன்
செல்ல வண்டைத் தா மாமி

சொந்தம் ஒருபுறம், நீண்டநாள் பழகிய பந்தம் மறுபுறம்; அதனால் எந்தவித கூச்சமும் இன்றி இரப்பதுபோல் கேட்கிறான். ஆனால் இதற்கெல்லாம் அவள் மசியவில்லை. சட்டென்று பதில் சொல்கிறாள் - வெட்டொன்று துண்டு இரண்டாக!

மண்ணாசை அறியாய் நீ
மரத்தாசை அறியாய் நீ
பொன்னாசை அறியாய் நீ
போபொடியா மாட்டடிக்கு

உலகம் தெரியாத மருமகனே! மாட்டுத் தொழுவத்திற்குப் போய் உன் வேலையைக் கவனி. மற்றதையெல்லாம் மறந்துவிடு இனி, என்று முற்றாகச் சொல்லிவிடுகிறாள்.

பெண்ணைக்கொடுக்கச் சம்மதிக்காத பெண்ணின் தாயிடம் நான் உன் மகளை அடைந்தே தீருவென் என்று சவால்விடும் பாடல்களும் உண்டு.

தன்மகளை மிகவும் கட்டுக்காவலுடன் பாதுகாப்பாக வளர்க்கும் தாயொருத்தியிடம் அந்தப் பெண்ணின்மேல் விருப்பம்கொண்ட ஒருவன் இப்படிச் சவால் விடுகின்றான்.
கல்லூட்டக் கட்டிக்
கற்கதவைப் போட்டாலும்
ஆலா வடிவெடுத்து
ராஞ்சிடுவேன் உன் மகளை.
இந்தப் பாடல் இப்படியும் வழங்குகின்றது.
கல்லால ஊடுகட்டி
காசால ஓடுபோட்டு
அறைக்குள்ளிருந்தாலும்
அணில் போல நான் வருவேன்
மற்றொரு விதமாகவும் இந்தப்பாடல் வழக்கில் உள்ளது.
கல்லால வேலிகட்டி
கதவுநிலை போட்டாலும்
பொல்லாத நாகம்
போரறிஞ்சி முட்டையிடும்

நீ எப்படித்தான் சிறை காத்து

**சட்டத்தரணி, பாடும் மீன், சு.ஸ்ரீகந்தராசா**



வைத்திருந்தாலும், உன் மகளை நிறைகாக்க முடியாமல் செய்து என் வசமாக்கிவிடுவேன் என்ற உட்பொருள் இந்தப் பாடல்களிலே உறங்கிக் கிடக்கிறது.

இதைக் கேட்டதும் கோபங்கொண்ட பெண்ணின்தாய் அவனுக்குச் சாபமிருவதுபோலப் பதில் சொல்கிறாள்.
குடத்தடி வாழை
குடல் அழுகிச் செத்ததுபோல்
ஈரல் அழுகிடுவாய் நீ
என்ன கதை சொன்னாயடா?

தன் விருப்பத்திற்கு இணங்காத அல்லது தன்னை மணமுடிக்க விரும்பாத பெண்ணை மந்திரமாயங்களால் மயக்கிவிடுவதாகக் கூறிப் பயமுறுத்துகின்ற வழிமுறைகளையும் அந்நாட்களில் ஆண்கள் மேற்கொண்டிருக்கின்றனர். அப்படியேதும் நடந்துவிட்டால் தன் மானம் போய்விடுமேயென்று பயந்து, சம்மதித்துவிடுவார்கள் என்ற நப்பாசையால் எழுகின்ற தப்பாசையே இதற்குக் காரணம்.

வசிய மருந்துகளால், மாந்திரீகத்தால் பெண்ணொருத்தியைத் தன்வயப்படுத்துவது, விரும்பாத பெண்ணை விரும்பவைப்பது என்பதிலெல்லாம் உண்மை இருக்கிறதா இல்லையா என்பது வேறு விடயம். ஆனால் மக்களுக்கு இவற்றிலெல்லாம் நம்பிக்கை இருந்தது என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை. நம்பாதவர்களும்கூட அத்தகைய சம்பவங்கள் தமது வாழ்வில் குறுக்கிடும்போது, எதிர்த்து நிற்பது விசப்பரீட்சை என்று விலகியே நடந்தார்கள்.
ஒருதலைக்காதல் வயப்பட்ட ஆண் ஒருவன், தன் நெஞ்சில் குடியிருப்பவளிடம் முதலில் கெஞ்சுவது போலத்தான் கேட்கிறான். தூரத்து உறவுமுறையில் அவள் அவனுக்கு மச்சாளும் கூட. அவளுக்கோ அவனைக் கண்டாலே பிடிக்காது.

கல்லுக்குப் புல்லிணக்கம்
கடதாசிக்கு மை இணக்கம்
என்ர கிளிக்கு நான்
இணக்கம் போதாதோ?

அவன் கேட்டது தனக்குக் கேட்காததுபோல அவனைக் கண்டும் காணாமல் அவள் இருக்கிறாள். அவன் தொடர்கிறான்.

சீவன் கிடந்து இந்தச்
சீமையிலே நான்கிடந்தால்
என்காயம் கிடக்குமென்றால் - உன்னைக்
கண்ணிகுத்தி நான்பிடிப்பேன்

இதைக் கேட்டதும் அவள் அவனை முறைத்துப் பார்க்கிறாள். அவன் தொடர்கிறான். தன் உடலிலே உயிர் இருக்குமானால் அவளை அடைந்தே தீருவதாகச் சொல்லும் அவன் எப்படி அதைச் செய்யப்போகிறான் என்பதையும் சொல்கிறான்.

வெள்ளைப் பொடிச்சி
வெள்ளிநகை பூண்டபுள்ள
கொள்ளிக்குப் போனேயெண்டா -
உன்னைக்

கொடுங்கையிலே தூக்கிடுவேன்

அவளது முறைப்பு மேலும் அதிகமாகிறது. முற்றம் பெருக்கிவிட்டு மூலையிலே வைத்திருந்த விளக்குமாறைக் கையிலெடுத்துக் காட்டுகிறாள். இதுதான் உனக்கு என் பதில் என்பதுபோல!

அவன் ஒரு கணம் கலங்கிவிட்டான். ஆனால் தயங்கவில்லை. மீண்டும் தன் மன்மத அம்புகளை வீசுகிறான்.

வானத்தைப் பார்த்தேன்
வளர்த்தேன் பாலமரத்தை - என்ர
சீனிப் பலாவே உன்னைத்
தின்னாமல் போகமாட்டேன்

மேலும் பொறுக்க முடியவில்லை அவளால். பேசாமல் இனியும் இருந்துவிட்டால், கூசாமல் எதையெல்லாமோ கதைத்துவிடுவான் என்றெண்ணி ஏசுகிறாள். கண்டவர்கள் எல்லாம் இப்படிக் கேட்பதற்கு கணிகையா நான் என்று வார்த்தையை வீசுகிறாள்.

போட்டா வரம்பால
புறா நடந்து போறதுபோல்
நாட்டாருக்கெல்லாம் ஒரு
நடைவரம்போ என் சரீரம்?

எனக்கு நீ தகுதியில்லை என்பது ஒரு கருத்து. உன்னைப் போன்றவர்களுக்கு விலைமகளன்றி வேறொருபெண் இணங்கமாட்டாள் என்பது இன்னொரு கருத்து. மார்பிலே ஈட்டிபோல் அவளது வார்த்தைகள் அவன் மனதிலே ஏறின.

தொடர்ச்சி பக்கம் - 22

# உண்டியல்கள் எனக்கு காவியமான கதை...

## தந்தை மகள் உறவு அற்புதமானது - ஆண்டி, அரசன் எல்லோருக்கும் இது பொருந்தும்

**சஞ்சயன் செல்லமாணிக்கம்**

நோர்வேயில் ஒரு பிரபலமான குரங்கு இருந்தது. அதன் பெயர் ஜூலியஸ். வங்கியில், எனது மூத்த மகளுக்கு முதன் முதலில் வங்கிக்கணக்கு திறந்தபோது ஜூலியஸின் உருவத்திலான ஒரு உண்டியலையும் கொடுத்தார்கள். அவள் சிறியவளாக இருக்கும்வரையில் அதனால் பிரச்சனை வரவில்லை.

அவளுக்கு 7- 8 வயதாக இருக்கும்போது என்னிடம் ஒரு பார்பி பொம்மை வாங்கித்தருமாறு கேட்டாள். சில நாட்களுக்கு முன்பு அவளுக்கு ஒரு பார்பி பொம்மை ஏற்கனவே வாங்கிக்கொடுத்திருந்தமையினால் அவளிடம், நீ காசு சேமித்து உனது பணத்தில் வாங்கவேண்டும் என்றேன். அதன் பின்னால் வரப்போகும் ஆபத்தை அப்போது நான் உணர்ந்திருக்கவில்லை.

”என்னுடைய ஜூலியஸ் உண்டியலைத் தா” என்றாள் மகள்.

”அம்மாச்சி, அது வீட்டில் இருக்கும் எல்லோருடைய உண்டியல். அதனுள் 20 குறோணர் (நோர்வே நாணயம்) நாணயங்கள் மட்டுமே போடுவது எனவே அதைத் தர முடியாது” என்றேன்.

”சரி, வா வங்கிக்குப் போவோம். எனக்கு புதிது ஒன்று வாங்கித் தா” என்று அடம்பிடித்தாள்.

வங்கிக்கு அழைத்துப்போனேன். நாம் வாழ்ந்திருந்ததோ ஒரு சிறு கிராமத்தில். அனைவரும் அனைவரையும் அறிவார்கள். வங்கியில் நின்றிருந்த பெண் மகளை நன்கு அறிவார்.

”வா .. காவியா.. வா .. வா” என்று அவர் ஆரம்பித்ததும் என்னை மறந்துபோனாள்,

## குழந்தைகளுடன் வாழ நாம் நிறையக் கற்க வேண்டும்

மகள். அந்தப் பெண்ணுடன் உரையாடி, வங்கியில் இருந்த ஜூலியஸ் உண்டியல் ஒன்றினையும், பலூன்கள், சித்திரம் வரைவதற்கான படங்கள், நிறம் தீட்டும் பென்சில்கள் என்று ஒரு தொகை பொருட்களுடன் (அந்தப் பெண்ணுக்கு ஒரு முத்தம் லஞ்சமாகக் கொடுத்தபின்) என்னுடன் புறப்பட்டாள்.

வாகனத்தினுள் ஏறி உட்கார்ந்தவுடன் வாகனத்தில் இருந்த சில்லறைகளை ஜூலியஸின் வயிற்றினுள் போட்டாள்.

பின்பு ” அப்பா, உன் பணப்பையைத் தா, ” என்றாள். கொடுத்தேன். இப்போது ஜூலியஸ் முன்பைவிட சற்று கொழுத்தது.

வீட்டுக்கு வந்ததும் தங்கையை அழைத்து ஜூலியஸை காட்டினாள். அவளுக்கு 3 - 4 வயது என்பதனால், அவள் ஜூலியஸை குலுக்கி அதனில் இருந்து வந்த ஒலியில் மகிழ்ந்திருந்தாள்.

வீட்டுக்குள் இருந்த சில்லறைகளை ஓடி ஓடிச் சேர்த்தாள். உண்டியலினுள் இட்டாள். தங்கையையும் வேலைக்கு அமர்த்திக்கொண்டாள். சாமியறையில் இருந்த சில்லறைகளிலும் சிலது காணமல் போயின.

மறுநாள் நான் வேலையால் வருகிறேன் வீட்டில் ஒரு கடை திறந்திருந்தாள். அதில் எனது கணிணி, உடைகள், சவர்க்காரம், சவரம்செய்யும் பெருட்கள் இருந்தன. தங்கையின் சூப்பியையும் விற்பனைக்கு வைத்திருந்தாள். எனது பொருட்களுக்கு 10 குறோணர்கள் கொடுத்துப் பெற்றுக்கொண்டேன். தங்கையின் சூப்பியின் விலை ஒரு குறோணாக இருந்தது. ஆனால் அவள் அதைக் கேட்டு அழத்தொடங்கியபோது அப்பாவிடம் பணம்வாங்கிவா என்று அனுப்பினாள். அதற்கும் பணம் கொடுத்தேன்.

அன்றிரவு தூங்கும்போது அவள் தூங்குவதற்கும் நான் பணம்கொடுக்கவேண்டியிருந்தது. அன்றிரவு ஜூலியஸை அணைத்தபடியே தூங்கிப்போனாள்.

இதன்பின், என்னுடன் கடைக்கு வருவதற்கு அடம்பிடித்தாள். கடையில் சில்லறைகிடைத்தால் அதை பறித்துக்கொண்டாள். காலப்போக்கில் கடையில் வங்கி அட்டைபாவிக்கவும் தடைவந்தது. நீ வங்கி அட்டையை பாவித்தால் சில்லறை தருகிறார்கள் இல்லை என்று வாதிட்டாள்.

சில நாட்களில் இத்தனை முத்தங்களுக்கு இத்தனை குறோணர்கள் என்று வாங்கிய நாட்களும் உண்டு. வீட்டுக்கு அருகில் இருந்த காட்டுக்குள் இருந்து பூக்களை பறித்துவந்து பூங்கொத்து என்று என்னிடம் விற்றாள். அதே பூங்கொத்தை மறுநாளும் நான் விலைகொடுத்து வாங்கிய கதையும் உண்டு. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ”உனக்கு தேனீர் கொண்டுவந்து தருவேன், சாப்பாடு தீத்துகிறேன் பத்துக்



குறோண் தா ” என்றாள். இப்படியான சேவைக்கு பத்து குறோணர்கள் காணுமா? நான் அதிகமாய் கொடுத்தேன். முத்தம் ஒன்று மேலதிகமாய் கிடைத்தது.

சில நாட்களில் நான் நிலத்தில் படுத்திருந்தபடியே எனக்கு முதுகு வலிக்கிறது எனது முதுகில் ”ஏறி நடவுங்கள்” என்பேன். முதலில் மூத்தவள் நடப்பாள். அப்புறமாய் தங்கையின் கையைப்பிடித்து நடாத்துவாள். என்மீது துள்ளி துள்ளி, விழுந்து, சிரித்து விளையாடியபின் அதற்கும் சேர்த்துப் பணம் கேட்பாள். ”தங்கையும் நடந்தாளே அவளுக்கும் பணம் கொடு ” என்று கூறி... தங்கைக்கு கிடைக்கும் பணத்தையும் தனது உண்டியலுக்குள் அவளைக்கொண்டே போட்டுக்கொள்வாள்.

வீட்டில் இருந்த புத்தகங்கள், பத்திரிகைகள் அனைத்திற்கும் வாடகை அறவிட்டாள். நான் சாய்ந்திருக்கும் சாய்மனைக் கதிரைக்கும் வாடகை கொடுக்கவேண்டியிருந்தது.

ஏறத்தாழ ஒரு கிழமைக்குள் அவளது ஜூலியஸின் கழுத்துவரை சில்லறை நிரம்பியிருந்தது. பெருமையில் அவள் மனமும், முகமும் பூரித்திருப்பதை ரசித்துக்கொண்டிருந்தேன் நான்.

இந்த உண்டியல் பழக்கம் அவளுக்கு 10 வயதாகும்போது தங்கைக்கும் தொற்றிக்கொண்டது. நான் இருபக்கமும் அடிவாங்கும் மத்தளம் போலானேன்.

ஒரு நாள் அவளின் உண்டியலை திறந்து எண்ணியபோது 2000 குறோணர்கள் இருந்தது. அதில் 1500 குறோணர்களை வங்கியில் வைத்தாள். மிகுதி 500 அவளிடம் இருந்தது.

ஒரு நாள் எனக்கு சற்று பணத்தட்டுப்பாடு வந்தபோது ”அம்மா, அப்பாவுக்கு கொஞ்சம் காசு கடனாகத் தாங்களேன்” என்றேன்.

”எவ்வளவு”

”500”

”பொறுங்கோ” என்றவள் .... உள்ளே சென்று பணத்துடன் வந்தாள்.

”இந்தாங்கோ”

எண்ணிப்பார்த்தேன். 400 குறோணர்கள் இருந்தது.

”என்னடி ... 400 தான் இருக்கிறது என்றேன்”

”ஓம்.. நீங்க தரும்போது 500 குறோணர் தரவேண்டும்” என்றாள்.


45 வருடங்களுக்கு முன் நான், அம்மாவின் பணப்பையில் இருந்து திருடிய பணத்திற்கான தண்டப்பணம் இது என்று நினைத்துக்கொண்டேன்.

10 வருடங்களின் பின்னான இன்று காலை, சிறிது பணத்தட்டுப்பாடு வந்தபோது, எனது உண்டியலில் கைவைத்தேன். அங்கு புதைத்திருந்தது இந்தக் கதை.

நினைவுகள் அற்புதமாய் தாலாட்டும்.

இது எனது காவியாவுக்கும், அட்சயாவுக்கும் சமர்ப்பணம். அன்புடன் அப்பா...

# சுமோ மல்யுத்தப் போட்டி வெற்றிகள்





சர்வதேச சுமோ மல்யுத்த சம்மேளனத்தின் இணை அனுசரணையுடன் இலங்கை சுமோ மல்யுத்த சங்கத்தினால் நடாத்தப்பட்ட இரண்டாவது தேசிய வளர்ந்தோருக்கான சுமோ மல்யுத்த விளையாட்டுப் போட்டிகள் 20/04/2018 அன்று கொழும்பு வைஎம்சிஏ உள்ளக விளையாட்டு அரங்கில் சங்கத்தின் தலைவர் கித்சிரி டி.சொய்ஸா தலைமையில் இடம்பெற்றது. இதில் சர்வதேச சுமோ மல்யுத்த சங்கத்தின் பிரதிநிதிகள் அதிதிகளாக கலந்து கொண்டதுடன் நடுவர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி சாண்டோ சங்கரதாஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் சுமோ மல்யுத்த விளையாட்டு பயிற்றுவிப்பாளர் சு. திபாகரன் தலைமையில் பங்கு கொண்டதுடன் பல பதக்கங்களையும் பெற்று மட்டக்களப்பு மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.
இதில் ம.வினோத் 115 Kg பிரிவில் வெள்ளிப்பதக்கத்தினை பெற்றுக்கொண்டதுடன் திறந்த நிறை பிரிவில் வெண்கலப்பதக்கத்தினையும்





பெற்றுக் கொண்டார். ரி. தக்சன், ஈ. பானுசன், எஸ். நிதுர்சன் ஆகியோர் வெண்கலப்பதக்கத்தினையும் பெற்றுக்கொண்டனர். மட்டு செங்கலடி மத்திய கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியரும் பயிற்றுவிப்பாளருமாகிய சு. திபாகரன் இப்போட்டியில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களினை பெற்றுக்கொண்டதும் குறிப்பித்தக்கது.






புனித மிக்கேல் கல்லூரியின், கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினராகிய நாங்கள் மேலே கூறப்பட்ட கூடைப்பந்துச் சுற்றுப்போட்டியை, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் ஏப்ரல் 28, 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடத்துவதில் பெருமையடைகிறோம். கடந்த ஆறுவருடங்களாக நடத்தப்படும் இந்த சுற்றுப்போட்டியில் இலங்கையின் பல பாகங்களைச் சேர்ந்த பல கழகங்கள் பங்கேற்றன.

மட்டக்களப்பின் கூடைப்பந்து விளையாட்டின் வளர்ச்சிக்கு உதவிய ஆளுமையான Rev. Fr. Eugene John Herbert S.J அவர்களின் வாழ்க்கையையும், சேவையையும் நினைவுகூருமுகமாகவும், மட்டக்களப்பில் கூடைப்பந்து மீதான ஆர்வத்தை பேணும் முகமாகவும், தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிக்குமுகமாகவும் இந்தச் சுற்றுப்போட்டி ஏற்பாடு செய்யப்படுகின்றது. கடந்த வருடங்களைப் போல் அல்லாது இந்த வருடம் இந்த சுற்றுப்போட்டி முன்னணிப் பாடசாலைகளின் குழுக்களுக்கிடையில் நடக்கவிருக்கின்றது. மாணவர்களின் தேவையை கருத்தில் கொண்டு, வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலைகளுக்கான கூடைப்பந்து சங்கம் ஆகியவற்றிம் ஆசியுடன் இது ஏற்பாடு செய்யப்படுகின்றது.
இந்த வருட சுற்றுப்போட்டியின் போது, பழைய மாணவரான சிரேஸ்ட உதவி பொலிஸ்மா அதிபர் இக்னேசியஸ் ரி. கனகரட்ணம் பழைய மாணவர் அமைப்புக்கும் போலிஸ் கூடைப்பந்துக்கும் மற்றும் தேசிய மட்டத்திலும் ஆற்றிய பணிகளை நினைவுகூரும் வகையில் ஐ. ரி. கனகரட்ணம் சவால் கிண்ணமும் ஆரம்பித்து வைக்க பிரேரிக்கப்பட்டுள்ளது.
அதனடிப்படையில் சுற்றுப்போட்டியின் இறுதித் தினத்தில், ஏப்ரல் 30ஆம் திகதி பி.ப 4 மணிக்கு ஐ. ரி. கனகரட்ணம் சவால் கிண்ணத்துக்காக பொலிஸ் அணியும் மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்து அணியும் மோதவுள்ளன.
இந்தப் போட்டி, பொலிஸ் திணைக்களத்தை சேர்ந்த ஐ. ரி. கனகரட்ணம் அவர்கள் தனது உணர்வால் கலந்த பாடசாலையான புனித மிக்கேல் கல்லூரிக்கும் தனது சொந்த ஊரான மட்டக்களப்புக்கும் ஆற்றிய பணிகளை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பழைய மாணவர் சங்கம் மற்றும் ஏற்பாட்டுக்குழு ஆகியவற்றின் சார்பில் இவற்றை சாதகமாக்கிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜே. சி. டானியல்
தலைவர், ஏற்பாட்டுக்குழு

07 ஆவது முறையாக நடைபெறவுள்ள Hebert ஊரி 2018 க்காக என் சிந்தையில் பொங்கிடும் எண்ணங்களில் மை கொண்டு வடிப்பதில் பேருவகை கொள்கின்றேன்.

இந்தக்கூடைப்பந்தாட்ட போட்டியானது கடந்த 6 வருடங்களாக இலங்கையின் பல மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கு இடையிலாக நடைபெற்று வந்தது, இம்முறை இலங்கையின் பல மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி பாடசாலைகளுக்கு இடையே நடைபெற இருக்கின்றது. இந்தப் போட்டியில் பங்குபற்ற உள்ள பாடசாலைகள் விபரம் பின்வருமாறு,

1. St.Peter's College, Colombo 4,
2. Maris Stella College, Negombo,
3. Trinity College, Kandy,
4. Wesley College, Colombo 8,
5. Angel International, Jaffna,
6. Zahira College, Colombo 10 ,
7. Mahinda College, Galle
8. St.Michael's College, Batticaloa

இம்முறை சுற்றுத்தொடரில் எமது ஒன்றியத்தின் சிரேஸ்ட போசகரும் ஓய்வுபெற்ற Seniour DIG யுமாகிய அமரர் I. T. Canagaretnam அவர்கள் ஞாபனார்த்த " I. T. Challenge Trophy " ஆனது மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி மற்றும் பொலிஸ் கூடைப்பந்துாட்ட அணிகளுக்கிடையில் முதல் முறையாக நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற உள்ள அணைத்து பாடசாலைகளுக்கும், கழகங்களுக்கும் எமது ஒருங்கிணைப்புக்குழு மற்றும் புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. பழைய மாணவர் சங்கம் கொழும்பு சார்பாக பாராட்டுவதில் பொரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அத்துடன் எமக்கு பொருளுதவி, சரீர உதவி, மற்றும் ஆலோசனை உதவிகளை வழங்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிள்றேன்

அ. பிருந்தன்,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம் கொழும்பு,
புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.

## Group Division and Match Draw for Hebert Cup 2018

**Group A**
St. Michael's College, Batticaloa
Trinity College, Kandy
Zahira College, Colombo 10
Wesley College, Colombo 08

**Group B**
St. Peter's College, Bambalapitiya
Mahinda College, Galle
Maris Stela College, Negombo
Angel Internalional, Jaffna

**Matches @ Hebert Stadium**

| No | Verses | Date | Time |
|---|---|---|---|
| 1 | St. Michael's College, Batticaloa<br>Zahira College, Colombo 10 | 28-Apr-18 | 7:00 AM |
| 2 | Trinity College, Kandy<br>Wesley College, Colombo 08 | 28-Apr-18 | 9:00 AM |
| 3 | Trinity College, Kandy<br>Zahira College, Colombo 10 | 28-Apr-18 | 15:00:00 PM |
| 4 | Maris Stela College, Negombo<br>Mahinda College, Galle | 28-Apr-18 | 16:30:00 PM |
| 5 | St. Michael's College, Batticaloa<br>Wesley College, Colombo 08 | 28-Apr-18 | 19:00:00 PM |
| 6 | Zahira College, Colombo 10<br>Wesley College, Colombo 08 | 29-Apr-18 | 7:00 AM |
| 7 | St. Michael's College, Batticaloa<br>Trinity College, Kandy | 29-Apr-18 | 9:00 AM |

**Matches @ Hebert Stadium**

| No | Verses | Date | Time |
|---|---|---|---|
| Semi Finals 1 | Rank 1 in Group A<br>Rank 2 in Grouop B | 29-Apr-18 | 17:00:00 PM |
| Semi Finals 2 | Rank 1 in Group B<br>Rank 2 in Grouop A | 29-Apr-18 | 19:00:00 PM |
| Consolation Finals | Looser Semifinals 1<br>Looser Semifinals 2 | 30-Apr-18 | 15:00:00 PM |
| I. T. Challenge Trophy | Batticaloa District Team<br>Police Sports Club | 30-Apr-18 | 17:00:00 PM |
| Finals | Winner Semifinals 1<br>Winner Semifinals 2 | 30-Apr-18 | 19:00:00 PM |



**Matches @ Miani Boys Town**

| No | Verses | Date | Time | Scores |
|---|---|---|---|---|
| 1 | St. Peter's College, Bambalapitiya<br>Angel Internalional, Jaffna | 28-Apr-18 | 7:00 AM | |
| 2 | Maris Stela College, Negombo<br>Angel Internalional, Jaffna | 28-Apr-18 | 15:00:00 PM | |
| 3 | St. Peter's College, Bambalapitiya<br>Mahinda College, Galle | 28-Apr-18 | 17:00:00 PM | |
| 4 | Angel Internalional, Jaffna<br>Mahinda College, Galle | 29-Apr-18 | 7:00 AM | |
| 5 | St. Peter's College, Bambalapitiya<br>Maris Stela College, Negombo | 29-Apr-18 | 9:00 AM | |

PAGE SPONSOR

SINGER Plus
கொமர்ஷல் வங்கிக்கு முன்னால்
No.23, Bar Road,
Batticaloa. Tel:0652228998


9BTU
SL-9LN
பணக்கழிவு ரூ.5,000/- ~~ரூ.65,999/-~~
குறைந்த விலை ரூ.60,000/-
வட்டியில்லா
12 மாதம் வரை

# கட்டிளமைப் பருவ உளநலம்



மனித வாழ்க்கைக் கோலத்தில் மிக முக்கிய காலகட்டம் கட்டிளமைப் பருவமாகும். இக்காலப்பகுதியில் இளைஞர், யுவதிகளில் உடலியல் மாற்றங்கள், மனப்பாங்கு மாற்றம், சிந்தனை மாற்றம், உள சமூக மாற்றம், உணர்ச்சி மாற்றம், நடைமுறை செயற்பாட்டு மாற்றங்கள் என அவர்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. பெற்றோரின் கீழ்படிதலில் இருந்து, சம வயது குழுக்களின் ஆளுகைக்கு உட்பட விளைகின்றனர். இதன் விளைவாக அரிய பல வெற்றிகளைப் பெறுவதுடன் விபரீதமான செயற்பாடுகளையும் செய்ய விளைகின்றனர்.

இவர்களது வளர்ச்சி, விருத்தி அனுபவங்களில் பெற்றோர்களின் தாக்கங்களிற்கு மேலதிகமாக சம வயது குழுக்கள், சமூக அங்கத்தவர்கள், ஆன்மீக குழுக்கள், கலாச்சார செயற்பாடுகள், நவீன தொடர்பு சாதனங்கள், பாடசாலை, உலக செயற்பாட்டு ஊடகங்கள் ஆகியன தாக்கம் செலுத்துகின்றன அல்லது அவர்களில் ஒரு ஆதிக்கத்தை செலுத்துகின்றன.

ஒவ்வொரு கட்டிளமைப்பருவ வயதினரும் ஒரு தனி உலகம். அதில் அவர்கள் சஞ்சரிப்பு, அவர்களது பாணி, எனவே சரியான வழிகாட்டல், நெறிப்படுத்துதல் இலக்கை நோக்கி கொண்டுசெல்லுதல், பயனுடைய நற்பிரஜையாக உருவாக்குதல் என்பன பெற்றோர், ஆசிரியர், சமூக-சமய பெரியவர்கள், உறவினர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இங்கு இவ்வயதினரின் செயற்பாடுகளிற்கு அவர்களிடம் மட்டும் குறை காணுவதை தவிர்த்து, கூட்டாக பொறுப்புக்கூறும் மனநிலை எம்மிடம் ஏற்படுமானால் கட்டிளமைப்பருவ வயதினருக்கு நாங்கள் நன்றாக உதவலாம்.

மாறவேண்டியவர்கள் பெரியவர்கள், பெற்றோர். பிள்ளைகளிடம் குறை காண்பதை விடுத்து, அவர்களது செயல்களிலும், நடத்தையிலும் உள்ள ஏற்றுக்கொள்ள முடியாத குறைகளை நல்ல கருத்துப் பரிமாற்றத்துடன் நடைமுறைப்படுத்துவது இன்றைய காலகட்டத்திற்கு பயனுடைய இடையீடாக அமையும். இதன் மூலமாக தற்கொலை, தற்கொலை முயற்சி, பாடசாலை இடைவிலகல், பொறுத்தமான வயதிற்கு முந்திய பால்நிலைத் தேர்வு, மது, புகை, போதைப் பழக்கம், அதிக கைபேசி, முகநூல் பழக்கம், முறையற்ற வன்முறை சார்ந்த தொடர்பாடல், பழிவாங்குதல், முறையற்ற உடலுறவு, கொலை, கொள்ளை, இலக்கடையாமை போன்ற பல பிரச்சினைகளிற்கு பயனுடைய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## கட்டிளமைப்பருவ வயதினரின் உணர்வுகளும், நடத்தைகளும் :

சில மாற்றம் சில வேளைகளில் “சுனாமி“ அனர்த்தமாக அல்லது சூறாவளியாக முடியுமெனில் அழிவைத் தவிர ஒன்றும் மிஞ்சுவதற்கு இல்லை. யுத்த காலத்தில் இவ்வயதினர், தமது நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து போராட்ட குழுக்களில் இணைந்தார்கள். யுத்தம் விடைபெற்ற இக்காலத்தில் இவர்கள் தமது நெருக்கீடுகளைப் பல்வேறு வன்முறை சார்ந்த செயற்பாடுகளாக வெளிக்காட்டுவதை குறிப்பாக, வடக்கு, கிழக்கு பகுதிகளில் தற்போது அவதானிக்கின்றோம். இக்கால மாற்றங்களில் இவ்வாறு குழுக்களில்,

1. சுயாதீனமாக இயங்க விளைகிறார்கள். இங்கு அவர்கள் ஏனையோரின் அறிவுரைகளைக் கேட்கும் பக்குவமில்லை.

2. அவர்களின் எதிர்கால தேர்வுகள் / ஆசைகள் வேறுபடுகின்றன.

3. பால்நிலைத் தேடல் (இருபால் / ஒருபால், சுய இன்பம்) அதிகரிக்கின்றது.

4. உடலியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக பெண்களில் மாதவிடாய் ஆரம்பிக்கின்றது. அத்துடன் இன்றும் எமது பெற்றோரின் மனநிலையால் பெண் பிள்ளைகள் பல அசௌகரியங்களை அனுபவிப்பதாகக் கூறுகின்றனர்.

5. அவர்களது விழுமியங்கள், எதிர்கால இலக்குகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. தான் செய்வது மட்டும்தான் சரியென்பது அவர்களது மனநிலை. இதுவே, வீட்டில் பெற்றோருடனும் பாடசாலையில் ஆசிரியர்களுடனும் முரண்படவும் பின்னர் வன்முறைகளை தனியாகவோ, குழுவாகவோ செய்வதற்கு அவர்களுக்கு உந்து சக்தியைக் கொடுக்கின்றது.

இக்காலத்தில் சமூக பாதுகாவலர்கள், ஆர்வலர்கள் இல்லாதபோது அது வாள்வெட்டாக, இருட்டடியாக மாறி இருப்பதை இன்று பொதுவாகக் காணக்கூடியதாக உள்ளது.

## விடலைப் பருவத்தில் வரக்கூடிய பொதுவான பிரச்சினைகள் :

இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீதத்தினர் விடலைப்பருவ வயதிற்குரியவர்கள். மிக முக்கியமான இவ்வயதினைக் கடப்பதென்பது நெருப்பாற்றைக் கடப்பதற்கு ஒப்பானது. எமது விடலைப் பருவம் யுத்தம், அனர்த்தம், இடப்பெயர்வு, அகதி வாழ்க்கை, போராட்டம் என்பவற்றுடன் கழிந்துவிட்டது. வன்முறை செய்ததைவிட அதற்கு சாட்சியாக இருந்ததே அதிகம். கலாச்சக்கரம் உருண்டோட போர் விடைபெற்றாலும் அது மறு வடிவம் எடுத்திருக்கும் இக்காலத்தில் இன்றைய விடலைப் பருவத்தினர் இலத்திரனியல் சாதனங்கள், மோட்டார் சைக்கிள் ∴ வாகனங்கள், நவீன தொடர்பாடல்கள், முகநூல், சமூக வலைத்தளங்கள், மது, போதைவஸ்து பாவனை, விபரீதமான பாலியல் சேர்க்கைகள், வன்முறை சார்ந்த செயற்பாடுகள் என அவர்களது அனுபவங்கள் மாறுபடுகின்றன.

பெற்றோரும் காலத்திற்கு ஏற்றாற்போல மாற்றங்களைக் கொணர்ந்து தமது பிள்ளைகளின் தேவைகளைச் சரியாக கண்டறிந்து உதவுவதைவிட, தாங்கள் நினைப்பதை செய்ய வேண்டும் என்ற மனநிலையில் இருப்பது, அனர்த்தங்களிற்கு வழிகாட்டுகின்றன. இற்றைக்கு பத்து வருடங்களிற்கு முன் இருந்த நிலை இன்றில்லை. ஒழுங்கு மிக வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. இந்த ஒழுங்கு இன்றைய விடலைப் பருவத்தில் செல்வாக்குச் செலுத்துவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். இங்கு பெற்றோர், ஆசிரியர், பெரியவர்கள் பிள்ளைகள் எதைச் செய்வார்கள் என்பதை அறிந்து அதற்கேற்றாற்போல் செயற்படுவதே பயனுடைய இடையீடாக அமையும். ஒரு கூட்டுக் குடும்பமாக பெற்றோர், சகோதர, சகோதரிகளுடன் பிறந்த வாழ்ந்த விடலைப்பருவ வயதினருக்கும் இடையில் பாரிய இடைவெளி உள்ளதை சமூகவியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறான வாய்ப்பான சூழல் இன்று எத்தனை விடலைப் பருவத்தினருக்குக் கிடைத்துள்ளது. யுத்தத்தில் பெற்றோரைப் பழிகொடுத்து, உறவினர் ஆதரவின்றி, சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்ட பிள்ளைகள் மீண்டும் சமூகத்துடன் இணைந்து வாழ்வதில் எதிர்நோக்குகின்ற சவால்கள் மிக ஏராளம். பெற்றோர்கள், பெரியவர்கள், ஆன்மீக தலைவர்களின் வழிகாட்டல்களில் நெறிப்படுத்தப்பட்ட குறுகிய உலக அனுபவத்துடன் வாழ்ந்த காலம் ஓடி ஒழிய, கைபேசி, முகநூல், சமூக வலைத்தளம், தொலைக்காட்சி வழிகாட்டுகின்ற இன்றைய காலகட்டம் விடலைப் பருவத்திற்கும் இடையில் பாரிய இடைவெளிகளை ஏற்படுத்தியுள்ளது.“காலத்திற்கு ஏற்ப மாறுவதே இன்றைய தேவை“ இங்கு மாறவேண்டியவர்கள் விடலைப் பருவத்தினரை விட அவர்களது வழிகாட்டிகள்.

டாக்டர் யூடி ரமேஸ் ஜெயக்குமார், உளநல நிபுணர்

## தொழிற்பாடற்ற குடும்பங்கள் :

இளவயது திருமணம், குடும்ப வன்முறை, தனித்த பெற்றோர், பெரியவர்களின் உதவியற்ற நிலை, போதுமான பெற்றோர் பராமரிப்பு இன்மை, உழைப்பதை சரியான முறையில் செலவிடாமை, பெற்றோர் வெளிநாடுகளிற்கு வருமானத்திற்குச் செல்லுவது, மதுபாவனை என்பன தொழிற்பாடற்ற குடும்பங்களை உருவாக்குகின்றன. இவ்வாறான குடும்பங்களில் பிறக்கின்ற குழந்தைகளிற்கு போதிய அன்பு, அரவணைப்பு, சுய தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல், கவனிப்பு கிடைப்பதில்லை. இவ்வாறான குழந்தைகள் வளரும்போது அவர்களில் மாறுபாடான நடத்தைகளைக் காணலாம். மிக இளவயதிலேயே இவர்கள் துஸ்பிரயோகங்கள், மது∴புகைப் பழக்கம், பொறுத்தமற்ற வயதினருடனான சேர்க்கை, அதனால் ஏற்படுகின்ற பழக்கங்கள், தற்கொலை முயற்சிகள் என்பன இவர்களில் காணப்படும்.

## பாடசாலை இடைவிலகல் :

குடும்பத்திற்கு அடுத்ததாக மிகப்பெரிய சமூகமயமாதல் தளம் பாடசாலைகளிலேயே மாணவர்கிற்கு கிடைக்கின்றன. குறிப்பாக விடலைப் பருவத்தைக் கடக்கும் வயது பாடசாலை காலமாகும். ஒரு மாணவன் 5 வயது தொடக்கம் குறைந்தது 18 வயதுவரை தனது காலத்தின் பெரும்பகுதியைப் பாடசாலையில் செலவிடுகின்றான். பாடசாலை கல்விச் செயற்பாடுகளிற்கு



மேலதிகமாக விளையாட்டு, ஆன்மீகம், கலாச்சார செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள், ஆக்க கலை சார்ந்த செயற்பாடுகள், கற்பியல் சார்ந்த செயற்பாடுகள், போசனை சார் செயற்பாடுகள், சூழலியற் சார்ந்த செயற்பாடுகள், சுற்றுச் சூழல் பராமரிப்பு சார்ந்த செயற்பாடுகள், குழுச் செயற்பாடுகள் என அவர்களது செயற்திட்டங்கள் நன்கு வடிவமைக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

## நாளாந்த செயற்பாடுகள் :

ஒரு நாளின் இருபத்துநான்கு மணி நேரங்களை சரியாகப் பயன்படுத்துவதில் வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. இந்த நேரத்தைச் சரியாக முகாமைத்துவம் செய்து வெற்றி பெற்றவர்களின் அனுபவத்தை உற்று நோக்கினால் அதில் அவர்களை தூக்கம், கல்விச் செயற்பாடு, தனிநபர் செயற்பாடு, குடும்பச் செயற்பாடு, விளையாட்டு, பயனுடைய பொழுதுபோக்கு, தொலைக்காட்சி பார்த்தல், குடும்பம் ∴ நண்பர்களுடன் அளவலாவுதல், ஆன்மீக செயற்பாடுகள் என ஒரு நாளை மிக பயனுடையதாக பயன்படுத்தியிருப்பர். மறுதலையாக நேர முகாமைத்துவம், பிழைத்தவர்களின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியாக உள்ளதைக் காணலாம்.

## இடை பாட விதான செயற்பாடுகள் :

ஆரோக்கியமான கட்டிளமைப் பருவத்தினருக்கு ஒரு பாடசாலையில் பயிற்றுவிக்கப்படுகின்ற கல்விக்குப் புறம்பான அனைத்துச் செயற்பாடுகளும் மிக மிக அத்தியாவசியமானவை. கல்வியையும், பெறுபேற்றையும், அடைவுமட்டத்தையும் மட்டும் இலக்காகக் கொண்டு செயற்படுகின்ற பெற்றோர், அதிபர், ஆசிரியர் போன்ற யாவரும் ஒரு மாணவனின் எதிர் காலத்தையும், அந்த எதிர்காலத்தை அவன் எதிர்கொள்ளக்கூடிய திறனையும் பற்றி சிந்திக்க வில்லை. இங்கு ஒரு மாணவன் உயர்தரம் பரீட்சையில் எடுக்கப்போகின்ற ஒரு சித்தி மட்டும் அவனை உருவாக்கிவிடப் போவதில்லை. இலவச கல்வி, இலவச உயர்கல்வி என்பன வறுமைப்பட்ட மாணவரகளிற்கு மிக தேவையானவை. அவற்றைப் பெற்றுக்கொள்ளும் அதே வேளை, ஏனைய திறன்களையும் பெற வேண்டும்.

## கல்விச் செற்பாடுகள் :

கல்வி ஒரு மனிதனை பட்டை தீட்டி பளபளக்கும் வைரமாக மாற்றும். கல்வி ஒன்றே மனிதனை சீரிய பண்புள்ளவனாக மாற்றி அவனை ஒழுக்கமுள்ளவனாக்கும். காலத்திற்குப் பொறுந்தாத போட்டிப் பரீட்சைகள், அதற்கு தயார்படுத்த பெற்றோர், ஆசிரியர் செய்கின்ற நடவடிக்கைகள் இவையாவும் ஒரு உயர்தர மாணவனிற்கு மிகப் பொருத்தமாகும். தனது எதிர்கால இலக்கை அடைவதற்கான துறையைத் தீர்மானிக்க, சாதாரண தர பரீட்சையைக் கடந்து அவன் சுயமாக கல்வி கற்கின்ற இரண்டு வருடங்களும் அவனது / அவளது வாழ்க்கையில் மிக முக்கியமானது. தவிர

தொடர்ச்சி பக்கம் - 22



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுகள்

மீன்பாடும் தேனாட்டுக்கு பலதடவைகள் வந்திருக்கின்றேன். 1965 இல் மாணவப்பராயத்தில் பாடசாலையிலிருந்து சுற்றுலா வந்திருக்கின்றேன். அங்கு எனக்கு அம்மா வழியில் உறவினர்களும் இலக்கியரீதியாக பல நண்பர்களும் இருக்கின்றனர்.

1978 இல் இந்தப்பிரதேசம் சூறாவளி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டபோதும், 2004 இல் சுனாமி கடற்கோள் அநர்த்தத்தின்போதும் அங்கிருந்த உறவினர்களைப் பார்க்கவும் ஓடிவந்திருக்கின்றேன்.

இவ்வாறு ஏதோ ஒரு வழியில் மீன்பாடும் தேனாட்டுடன் எனது உறவு நீடித்துக்கொண்டுதானிருக்கிறது. பயணியின் பார்வையில் தொடரில், இனிவரும் அங்கங்களில் இந்தப்பிரதேசத்தில் வாழ்ந்திருக்கும் ஆளுமைகள் பற்றிய எனது நினைவுப்பதிகையை எழுதவிருக்கின்றேன். அந்த வரிசையில் இந்த அங்கத்தில் பெரியார் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை இடியப்பச்சிக்கலைப் போன்றது. 1972 இல் அந்த இடியப்பத்தை பிழிந்தவர் சட்டமேதை கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா.


அறுதிப்பெரும்பான்மையுடன் 1970 இல் ஸ்ரீமாவின் தலைமையில் பதவிக்குவந்த கூட்டரசாங்கம் 1972 இல் உருவாக்கிய ஜனநாயக சோஷலிஸ குடியரசு அரசியலமைப்புத்தான் அந்த சிக்கலான இடியப்பம்.

இன்றுவரையில் எத்தனையோ உயிர்களை காவுகொண்ட பின்னரும் சிக்கல் தீரவில்லை!

எதிர்காலத்தில் வரக்கூடிய பாரிய நெருக்கடிகள் இழப்புகளை கருத்தில்கொண்டு தீர்க்கதரிசனமான ஒரு முடிவுக்கு வந்தது எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

1954 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இச்சங்கம் இலங்கையில் பல மாநாடுகளையும் இலக்கிய ஆய்வரங்குகளையும் நடத்தியிருக்கிறது. இலங்கையின் தேசிய அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட பல படைப்பாளிகளும் இச்சங்கத்தில் இணைந்திருந்தமையினால் 1972 இல் உருவான புதிய அரசியல் அமைப்பு எதிர்காலத்தில் தோற்றுவிக்கவுள்ள பாரிய நெருக்கடிகள் தொடர்பாக ஆராய்ந்து தேசிய இனப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வாக 12 அம்ச திட்டம் தயாரித்து இரண்டு நாள் மாநாட்டை கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தியது.

இக்காலப்பகுதியில் இலக்கியப்பிரவேசம் செய்திருந்தேன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய சபை உறுப்பினராக நான் இணைந்திருந்தபொழுது, குறிப்பிட்ட தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு 1975 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியும்




அதற்கு மறுநாள் ஜூன் 1 ஆம் திகதியும் நடைபெற்றது.

குறிப்பிட்ட 12 அம்சத்திட்டம் மூவின மக்கள் பல அமைச்சர்கள் பல தலைவர்கள் தமிழ் சிங்கள் முஸ்லிம் படைப்பாளிகள் முன்னிலையில் அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் கையளிக்கப்பட்டது.

“குறிப்பிட்ட திட்டங்களுக்கு அனைத்துக்கட்சிகளினதும் ஆதரவைத்திரட்டிக்கொண்டுவாருங்கள் “என்று ஸ்ரீமாவோ சொன்னார்.

ஆனால், அந்த முயற்சியில் அரசியல் கட்சித்தலைவர்களுடன் ஒரு நல்ல உடன்பாட்டிற்கு வரவே முடியவில்லை.

பின்னர் குறிப்பிட்ட 12 அம்சத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு பல முக்கியஸ்தர்களின் மேலதிக ஆலோசனைகளும் இணைத்துக்கொள்ளப்பட்டு மற்றுமொரு மாநாடு கொழும்பு கோட்டையில் இஸ்லாமிய கலாசார நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடந்தது.

அரசிடம் கையளிக்கப்பட்ட புதிய யோசனைகளில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அறிஞர்கள் மார்க்கத் தலைவர்கள் படைப்பாளிகள் தொழிற்சங்கத்தலைவர்கள் உட்பட பலர் கையொப்பம் இட்டிருந்தனர்.

ஆனால், அன்றைய ஆட்சியாளர்கள் தமக்கு கிடைத்த பல நல்ல சந்தர்ப்பங்களை இழந்தார்கள். தமிழ்மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யத்தவறினார்கள். ஆனாலும் தேசத்தின் நலன் தமிழ்மக்களின் உரிமைகளை கவனத்தில்கொண்டு அறிஞர்கள் பெருமளவு அங்கம்வகித்த குறிப்பிட்ட மாநாட்டில் பங்கேற்றவர்களில் ஒருவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

கிழக்கு மாகாணத்திலிருந்து அவர் கொழும்புக்கு வந்தால் தங்குவது அவரது நீண்ட கால நண்பர் கிழக்கிலங்கை காகித ஆலை கூட்டுத்தாபனத்தின் தலைவர் கே.ஸி. தங்கராசாவும் புலவர்மணியும் மேலேகுறிப்பிட்ட அரசிடம்கையளிக்கப்பட்ட தீர்வு யோசனைகளில் ஒப்பமிட்டிருந்தனர்.

புலவர்மணியை மாநாட்டில் சந்தித்து பேசியிருந்தேன். அவரை பேட்டி காணவேண்டும் எனச்சொன்னதும் அருகே நின்ற பெரியவர் கே.ஸி. தங்கராசா தனது முகவரி தந்து வீடுக்கு அழைத்தார்.

மெலிந்த நெடிய தோற்றமும் தீட்சண்யமான கண்களும் கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை தங்கராசா அவர்களின் பம்பலப்பிட்டி இல்லத்தில் ஒரு முற்பகல் வேளையில் சந்தித்தேன்.

“இலங்கைமணித்திருநாடெங்கள் நாடே“ என்ற பாடலை இயற்றியுள்ள புலவர்மணி, அன்று எனக்கு அந்தப்பாடலை ராகத்துடன் பாடியும் காண்பித்தார். அருகேயிருந்த தங்கராசா கண்களை மூடியவாறு அவரது குரலை ரசித்தார்.

முருகபூபதி அவுஸ்திரேலியா

முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கா பிறந்த நாளன்றே தாமும் பிறந்ததாகச் சொன்னார். மண்டூரில் ஆரம்பக்கல்வி. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையுடன் சக மாணவன். அக்காலத்தில் தன்னையும் பண்டிதமணியையும் இரட்டையர்கள் என அழைப்பார்கள் என்று அவர் சொன்னபொழுது அவரது முகத்தில் பெருமிதம் படிந்திருந்தது.

1917 -1921 காலப்பகுதியில் சுவாமி விபுலானந்தருடனும் நட்புறவு பாராட்டியிருக்கிறார்.

1921 இல் இந்தியாவுக்குச் சென்றார். அங்கு மகாத்மா காந்தியின் அகிம்சைப்போராட்ட இயக்கத்துடன் இணைந்தார். ஐந்து ஆண்டுகளில் தாயகம் திரும்பி திருகோணமலை இந்துக்கல்லூரி கத்தோலிக்க ஆசிரிய பயிற்சிக்கல்லூரியிலும் மட்டக்களப்பு அரசினர் உயர்தரக்கல்லூரியிலும் விரிவுரையாளராக பணியாற்றியிருக்கிறார்.

மகாத்மா காந்தி 1928 இல் இலங்கைக்கு வருகைதந்த பொழுது அவரை வரவேற்று புலவர்மணி பாடிய வெண்பா மிகவும் முக்கியமானது என தமது மட்டக்களப்பு தமிழகம் நூலில் பண்டிதர் வீ.சி.கந்தையா அவர்கள் பதிவுசெய்துள்ளார்.

மதுரகவி சித்தாந்தஞானபானு முதலான பட்டங்களை பெற்றிருந்தாலும் புலவர்மணி என்ற பட்டமே அவரை அடையாளப்படுத்துகிறது. 1950 இல் மட்டக்களப்பு கலைமன்றம் தமக்கு அந்தப்பட்டம் வழங்கி கௌரவித்தது என்றார். அத்துடன் மேலும் சில தகவல்களையும் சொன்னார்.

இலங்கை கலைக்கழகத்தில் அவரை இணைத்துவிட்டவர் அறிஞர் ஏ.எம். ஏ. அஸீஸ். (அஸீஸ் கொழும்பு சாகிராக் கல்லூரியின் அதிபராகவும் செனட்டராகவும் விளங்கியவர்)

இலங்கை வானொலி கல்விச்சேவை அரச கல்வி விதானச்சபை முதலானவற்றிலும் புலவர்மணி ஆலோசகராக பணியாற்றியவர்.

இலங்கை மணித்திரு நாடெங்கள் நாடே என்ற பாடலை தாம் 1926 ஆம் ஆண்டு இயற்றியதாகச்சொன்னார். பகவத்கீதை வெண்பா கர்மயோகம் உட்பட பல நூல்களை எழுதியுள்ளார். இதில் கர்மயோகம் நூலுக்கு சாகித்திய விருதும் பெற்றவர்.

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளுடனும் நட்புறவு கொண்டிருந்தவர்.



இலங்கையின் தேசிய இனங்கள் தத்தமது தனித்துவத்தை பேணிக்காத்து ஒருமைப்பாட்டை வளர்க்கவேண்டும் என்றும் கொள்கை கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மனிதவேறுபாடுகள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும் என்றார்.

உள்ளதை உள்ளபடி விமர்சிக்கும் பண்பு விமர்சகர்களிடம் வளரவேண்டும். அத்தகைய வளர்ச்சியைத்தான் தன்னால் மதிக்கமுடியும் என்றும் முகத்திற்காக புகழுரையாற்றுவதில் தனக்கு உடன்பாடில்லை என்றும் அழுத்தமாகச் சொன்னார்.இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வு காணப்படல் வேண்டும் என்ற கனவில் புலவர்மணி வாழ்ந்தார். ஆனால் சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளும் தீவிர இனவாத மற்றும் குறுகிய சிந்தனையுள்ள சக்திகளும் அந்தக்கனவை தொடர்ந்தும் நிர்மூலம் செய்துவருவதுதான் காலத்தின் சோகம். (பயணங்கள் தொடரும்)

சுகந்தி 3D கல்லடி




தினமும் 10:00-AM, 04:00-PM
7:00-PM, 9:30-PM
தொடர்புகளுக்கு
065 -5675311

## கடல் வேடுவர் : இறுதி ஆதிக்குடிகளின் அழிவு!?
தொடர்ச்சி

அவமானத்திலிருந்தும் மீள்வதற்காக ஓடி ஒளிந்து தமது சுய அடையாளங்களை மறைத்து வாழத் தலைப்பட்டது போல 'வேடுவ" சமூகத்துக்கு இல்லை. வேடுவ சமூகத்துக்கு தீண்டாமையும் இருந்ததில்லை.

ஆனால் அவர்கள் இன்று எதிர்கொள்ளும் பண்பாட்டு அடையாள நெருக்கடி நவீன வாழ்வாதாரத்தோடும் சம்பந்தப்பட்டது. அவர்கள் அவர்களாகவே சுயமரியாதையுடன், இறைமையுடனும் வாழ வழிசெய்யும் கட்டமைப்பு இலங்கையில் இல்லை. அதற்கான சாத்தியங்களும் கேள்விக்குரியதே. இன்று அம்மக்களைத் தேடிச் செல்வது "உல்லாசப் பிரயாண" நிகழ்ச்சிநிரலின் அங்கமாக ஆகியிருக்கிறது. மிருகக் காட்சிச் சாலைக்கு சென்று மிருகங்களைக் கண்டு பூரிப்பதற்கு ஒப்பானது போல ஆகியிருக்கிறது. பல செலிக்மன்கள் அவர்களைத் தேடிச்சென்றுகொண்டிருக்கிறார்கள். இலங்கையில் எஞ்சியுள்ள இறுதி ஆதிக்குடிகள் கண் முன்னால் தொலைந்துகொண்டிருக்கிறார்கள்.

| கிராம சேவைப் பிரிவு | வேடுவ குடும்பங்கள் | வேடர் தொகை |
|---|---|---|
| மாங்கேணி மத்தி | [illegible] | [illegible] |
| காயங்கேணி | [illegible] | [illegible] |
| பனிச்சங்கேணி | [illegible] | [illegible] |
| மதுரங்கேணிக்குளம் | [illegible] | [illegible] |
| கிரிமிச்சை | [illegible] | [illegible] |
| மாங்கேணி தெற்கு | [illegible] | [illegible] |
| உரியங்கட்டு | [illegible] | [illegible] |
| கதிரவெளி | [illegible] | [illegible] |
| கட்டமுறிவு | [illegible] | [illegible] |
| அம்மந்தனாவெளி | [illegible] | [illegible] |
| வாகரை வடக்கு | [illegible] | [illegible] |
| புன்னை கிழக்கு | [illegible] | [illegible] |
| மொத்தம் | [illegible] | [illegible] |

அட்டவணை : கோரளைப்பற்றிலுள்ள வடக்கிலுள்ள 12 கிராம சேவைகள் பிரிவுகளில் வாழும் கடல் வேடுவர் பற்றி கோறளை பற்று வடக்கு கிராமசேவைப் பிரிவினால் 2015 வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்து.

## கட்டிளமைப் பருவ உளநலம்
தொடர்ச்சி

பத்து வயதினில் ஆண்டு ஐந்து புலமைப் பரீசில் பரீட்சைக்காக அவர்களை கடினப்படுத்தும். அத்துடன் மிக இளம் வயதில் போட்டி போட்டு, மிகக் கடுமையாகப் படித்த களைப்பு, வெறுப்பு என்பன பெரும்பாலான மாணவர்களில் பரீட்சைக்குப் பின்னும் இந்த நிலையே தொடரப்போகின்றது என்ற ஆழ் மன அவநம்பிக்கை ஏற்படுவதை பல மாணவர்களுடன் புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பின் உரையாடியதில் விளங்கிக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

கல்விக்காக ஒதுக்குகின்ற நேரத்தைச் சரியாக ஒரு மாணவன் முகாமைத்துவம் செய்து அதனை செயற்படுத்தினால் இலக்கையடைதல் மிக எளிதானது. பாடசாலை நேரம், மேலதிக வகுப்பு நேரம் அவை சுய கற்றலிற்கான நேரம் என அம்மாணவன் நேர முகாமைத்துவத்தை ஒரு ஒழுக்கமாக கருதி செயற்படுத்த வேண்டும்.

## "கிழக்கிலங்கை முஸ்லிம் ஆளுமைக்கு வித்திட்ட சுவாமி விபுலானந்த அடிகளர்"
தொடர்ச்சி

"குரானை மற்ற மதத்தினர் படிக்கக் கூடாது என்றபோது சுவாமிகள் மிகவும் ஆத்திரப் பட்டார். அவர்," குரான் என்பது உண்மை,அந்த உண்மைக்கு நடுவே யாரும் நிற்க முடியாது. அந்த உண்மையை அறியும் உரிமை எல்லோருக்குமிருக்கிறது" என்று சுவாமி விபுலானந்தர் ஆத்திரத்துடன் தெரிவித்திருந்தார்."

சாதி சமயப் பிரிவினைகளால் சிதறுப்பட்ட சமுதாயத்தை, எல்லைகளைக் கடந்த மனிதநேயக் கண்ணோட்டத்தில் மக்களை ஆரத்தழுவிய சுவாமி விபுலானந்தரின் தெய்வீகமானதும், ஆழமானதுமான அன்பை விபரித்த, படுவான்கரையைச் சேர்ந்த, மறைந்த மாவட்ட முகாமையாளாரான மீன்பிடித் திணைக்கள மாணிக்கம் பிள்ளை கிருஷ்ணபிள்ளை என்ற கிஸ்தவ மத்தைச் சேர்ந்த அன்பர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனாகி,
மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்து,
குணமான மனிதரையும் படைத்து தான்
உதித்த குருவாய் வந்து,
சனமான சம்சாரம் ஒன்றில்லாமல்,
சன்னியாசி போலிருந்து தவத்தைக்
காட்டி,
அன்பான சித்தர்களை இருத்தி, அகன்ற
தளம் சென்றவனே அருளுவாயே"என்ற
பாடலைச் சொல்லி

"குருவாக வந்தவர் யார்?"என்று கேட்டு விட்டு, "இயேசுதான்" என்கிறார்;.அவர் தொடர்ந்து சொல்லும்போது,

"விபுலானந்தரும் கிறிஸ்துவாகவே வாழ்ந்தார். அத்துடன், எனது பள்ளிக் கூடத்தில், மஜீத் என்ற ஒரு முஸ்லிம் சகோதரர்,சொன்னார், "தம்பி, சுவாமியைப்போல் ஒருத்தரை என் வாழ்நாளில் கண்டில்லை. அவர் இமயமலைக்குப் போகும்போது, மாணவர் எல்லோரையும் கூப்பிட்டு, அவர்களைப் பார்த்துக் கும்பிட்டு, தான் இமயமலைக்குப்போகப் போவதாகச் சொன்னார்", அப்போது. மஜீத் அண்ணா யோசித்தாராம். "நாங்க முஸ்லிம், எங்கட மார்க்கத்தின்படி யாரையும் கும்பிட முடியாது," அப்போது சுவாமிகள் வந்து, முஸ்லிம்கள் கைகளைப் பிடிக்கும் மாதிரிப் பிடித்து மஜீத் அவர்களிடம் வணக்கம் சொல்லி விட்டுப் பிரிந்து சென்றாராம், மஜீத் சொன்னாராம், "இவர் ஒரு கடவுள், அப்படி ஒரு "இது" உள்ளவர்".

சுவாமிகளைப் பற்றிய வாழ்க்கையைப் பல கோணங்களிலும் வைத்து ஆய்வு செய்யும்போது, அவர் எவ்வளவு தூரம் மனித மேம்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் உழைத்தார் என்று தெள்ளத் தெளிவாகப் புரிகிறது.
இன்று கிழக்கிலங்கையில், தமிழ்,முஸ்லிம் பிணக்குகளையுண்டாக்கி அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேட மிகப் பிரமாண்டமான சக்திகள் பல வழிகளையும் தேடுவதை சமுதாய பிரக்ஞை உள்ள தமிழ்-முஸ்லிம் புத்திஜீவிகள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

சுவாமிகள் அமைத்த அறமும் அறிவும் சார்ந்த ஒரு ஒற்றமையின் அத்திவாரத்தை உடைக்கப் பல புல்லுருவிகள், உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் முனைவதையுணர்ந்து கிழக்கின் ஒற்றுமையையும் வளத்தையும் காப்பாற்றவது எதிர்கால இளைஞர்களின் கைகளிலுள்ளது.


சுவாமி எங்களின் மேம்பாட்டுக்குத் தன்வாழ்க்கையை அர்ப்பணித்தார். அந்தத் தியாகத்தின் தீபம் அணையாமற் பாதுகாப்போம்.

"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு,
உய்வில்லை,
செய் நன்றி கொன்ற மகர்க்கு"
என்ற குறளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, ஒன்றே குலமாக மனிதத்தை மதித்த விபுலானந்தர் எங்களுக்குச் செய்த சேவைக்குத் தலைவணங்குவோம்.

## மட்டக்களப்பின் தனித்துவ அம்சங்கள்!
தொடர்ச்சி

என்றே எண்ணத்தோன்றுகிறது.

(((((வி.சீ.கந்தையா 1964, மட்டக்களப்புத் தமிழகம்,
கலாநிதி சு.வித்தியானந்தன், 1962, "மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்", பதிப்பாசிரியர்- இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு.
சி. மௌனகுரு, 2008 "நினைவில் நிலைத்தவை - பேராசிரியர் கா.சிவத்தம்பியின் மட்டக்களப்புடனான உறவுகள்" மட்டக்களப்பும் பேராசிரியர் சிவத்தம்பியும், மட்டக்களப்பு வாசகர் வட்டம்
க.சண்முகலிங்கம், 2011 "மட்டக்களப்பில் சாதி" - இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
க.சண்முகலிங்கம், 2011, "இலங்கையின் கிழக்குக் கரையோரத்தின் தமிழர்களும், முஸ்லிம்களும் - இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்" , குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
பக்தவத்சல பாரதி,(2011) யாழ்ப்பாணத்து நினைவுகள், காலச்சுவடு, அக்டோபர் - 2011))))



## மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்
தொடர்ச்சி

பயமுறுத்துவதைத் தவிர அவளைப் பணியவைக்க வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வருகிறான்.

பயமுறுத்துவதன் மூலம் அவளைத் துன்புறுத்தவேண்டும் என்று அவன் நினைக்கிறான் என்றும் சொல்லமுடியாது. இந்த அளவுக்கு முயல்கிறான் என்றால், தன்மேல் எந்த அளவுக்குப் பிரியம் வைத்திருக்கிறான் என்று இரக்கத்தோடு தன்னைப்பற்றி எண்ணிப் பார்க்க அவளைத் தூண்டுவதாகவும் இருக்கலாம். அதனால் அவன் சொல்கிறான்,

மண்ணைக் குமிச்சிவைச்சி
மாங்கொட்டை நாட்டிவைச்சி
தேங்காய் உருவேற்றி - உன்னை,
தேடிவர வைச்சிடுவேன்.

கேட்டதும் பொங்கியது அவளுக்கு கோபம். பாட்டிலே கொடுத்தாள் அவனுக்குச் சாபம்!

ஊரான்ர வள்ளத்தில
உப்பேத்திப் போற மச்சான்
கல்லாத்து விரிசலில
உன்னக்கவிழ்த்து வெள்ளம்
கொட்டாதோ?

மச்சான் என்று இங்கே அவள் குறிப்பிட்டது உறவுமுறை சொல்லியழைத்தல்ல. ஒரு நக்கலாகத்தான்! மச்சான் உறவு கொண்டாட வந்தவனே - அடேய் மச்சானே- உன் உள்ளத்திலே இப்படியான கள்ள எண்ணம் உனக்கு இருக்கிறதே, கல்லாற்றிலே, கடலோடு ஓடை கலக்கின்ற இடத்திலே, நீ போகும் வள்ளம் கவிழ்ந்து, ஓடுகின்ற வெள்ளத்திலே உன்னைத் தள்ளிவிடமாட்டாதா? என்று சாபமிடுகின்றாள்.

அவன் விடுவதாயில்லை. தொடர்கிறது அவனது அச்சுறுத்தல்.

கடலால் பொழுதெழும்பி
காலை வரும் வேளையிலே
மடையால் உருப்பண்ணி
வரவைப்பேன் காலடிக்கு

என்னதான் அவனை எடுத்தெறிந்து பேசினாலும், இப்படியெல்லாம் அவன் சொல்லும்போது அவளுக்குச் சற்றுப் பயமாகத்தான் இருக்கிறது. என்ன கதை கதைக்கிறான் இவன்? துக்கம் தாங்காமல் சபிக்கிறாள் அவள்.

கல்லில கரடி ஒத்தக்
கரைச்சையில திராய் முளைக்க
வில்லுக்குப் போற மச்சான் உன்ன
விரிபுடையன் தீண்டாதோ?

இப்படிச் சொல்லிவிட்டுப் பொங்கிவரும் அழுகையை அடக்கிக்கொண்டு வீட்டுக்குள் ஓடுகின்றாள். அங்கே கால்களை நீட்டி அமர்ந்து வெற்றிலை இடித்துக்கொண்டிருக்கும் பாட்டியிடம் நடந்ததைச் சொல்லி அழுகிறாள். அவனுக்குச் சாபமும் இடுகிறாள்.

தோடங்காய் போல
தொண்டையிலே கட்டிடுவான் - என்ர
பால்போல மனசைப்
பதறவைச்சிப் போட்டான்கா

பாட்டிக்கோ அவனுக்கு இவளைக் கட்டிக்கொடுப்பதற்குப் பரிபூரண சம்மதம். பழைய உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ளும் ஆதங்கம். ஆனால் அவளுக்குத்தான் அவனை அறவே பிடிக்கவில்லை. கிழவி தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் விதமே தனி. சக்கையாக இடித்து முடிந்த வெற்றிலைப்பாக்கைத் தன் பொக்கை வாயில் போட்டுக்கொண்டே, பக்குவமாய்த் தன் கருத்தை ஒரு பெருமூச்சோடு வெளிப்படுத்துகிறாள் பாட்டி.

வட்டமிட்டு வட்டமிட்டு
வாசலுக்கு வாறவர்க்குத்
திட்டமொன்று சொல்லத்
திறம்போதா தென்கிளிக்கு

(தொடரும்)



## தென்கிழக்கு பல்கலைக்கழகம் போராட்டம்



இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் கத்துவாவில் ஒரு சிறுமி கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும், அவ்விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்தும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், புதன்கிழமை மதியம் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றில் ஈடுபட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுமார் 1500 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியினை, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்திருந்தது.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீட கட்டடத்தின் அருகிலிருந்து ஆரம்பமான இந்தப் பேரணி, பல்கலைக்கழக முன்றல் வரை சென்று திரும்பியது.




சிறுமி கொல்லப்பட்டமைக்கு இந்தப் பேரணியில் கலந்து கொண்டோர் தமது கண்டனங்களைத் தெரிவித்ததோடு, அவற்றினை வெளிப்படுத்தும் வகையிலான பல்வேறு முழக்கங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

மேலும், இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துக் குற்றவாளிகளும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு, நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என இதில் கலந்து கொண்டோர் கோஷமெழுப்பினர்.

இந்த பேரணியின் இறுதியில், இலங்கைக்கான இந்திய தூதரக உயரதிகாரிக்கான மனுவொன்றினை, அவருக்கு அனுப்பி வைக்குமாறு கோரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி ரமீஸ் அபூபக்கரிடம் மாணவர்கள் சமர்ப்பித்தனர்.

## வெசாக் கால மதுபானத் தடை
தொடர்ச்சி

இதனடிப்படையில் மதுபானச் சாலைகள், இறைச்சிக் கடைகள், சூதாட்ட விடுதிகள், ஆகியவை மூடப்படும். இந்த இரு தினங்களிலும் இந்தப் பொருட்களை அங்காடிகள் விற்பனை செய்யவும் முடியாது.

## தற்போதைய அரசின் தவறான கொள்கையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்கிறார் மஹிந்த
தொடர்ச்சி

கூறியுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்து அங்கு செய்தியாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த மஹிந்த, அது குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு வந்த பின்னரே அது பற்றி தான் முடிவெடுப்பேன் என்று கூறினார்.

நாட்டில் உள்ள ஸ்திரமின்மை அனைத்து விடயங்களையும் பாதிப்பதாக மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இவற்றை தீர்ப்பதற்கு பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதே ஒரே வழி என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில் தன்னால், சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் இணைந்து தொடர்ந்து வேலை செய்ய முடியாது இருப்பதாகவும் அவர் கூறினார்.

## மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கோரி போராட்டம்
தொடர்ச்சி

உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமேல் ஆகிய மாகாண சபைகளின் ஆயுட்காலம் கடந்த வருடம் நவம்பரில் முடிவடைந்ததோடு அதற்கடுத்து அவை கலைக்கப்பட்டன.

விசேட ஆணையாளருக்கு கீழ் மாகாண சபைகளை கொண்டுவந்து இதுவரை ஆட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

எனினும் இதுவொரு ஜனநாயக விரோத செயல் என்று சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, இதுகுறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தவும், அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பலையை ஏற்படுத்தவும் தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளதாகக் கூறினார்.

இந்த விவகாரம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் கொழும்பு விஜேராமயவிலுள்ள இல்லத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ஆயுட்காலம் முடிவடைந்து கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை இந்த வருட இறுதிக்குள் நடத்த எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நியமனத்தில் அதிருப்தி
தொடர்ச்சி

அதிகரிக்கும் என்று இன்னுமொரு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.
ஊழல் குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்டவர்களை கட்சி நிர்வாகத்தில் இருந்து தள்ளி வைக்கவேண்டும் என்று கட்சியின் சாதாரண உறுப்பினர் ஒருவர் கூறினார்.

கட்சியை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு ஏதுவான தலைவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் என்றும், அதற்காக கட்சியின் அடிமட்டத்தில் இருந்து உயர் பீடம் வரை மாற்றங்கள் தேவை என்று அவர் கூறினார்.

## சாத்தியமானதை சாதிப்போம் : அதிலிருந்து முன்னேறுவோம்
தொடர்ச்சி

என்றில்லாவிட்டாலும், வேறு ஏதாவது சாதகமான வழியை முயற்சித்து, கிடைக்கக்கூடியதை பெற்று, அதிலிருந்து முன்னேற தமிழர் தரப்பு முயற்சிக்க வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் நடந்ததும் இதுதான். கூட்டாட்சி எங்களுக்கு தேவையில்லை, மாகாண சபை தேவையில்லை, அடைந்தால் தமிழீழம் மட்டுந்தான் என்று சண்டையை தொடர்ந்தது, இன்று எதுவும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. மக்களுக்கு பேரழிவையும் உருவாக்கியுள்ளது.

ஆகவே தமது முயற்சிகளை பாதிக்கிணற்றில் விட்டுவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச நிர்வாகத்தை முடக்குவோம் என்றெல்லாம் பயனில்லாத, மக்களுக்கு மேலும் சிரமத்தை ஏற்படுத்தக்கூடிய வழிகளை காண்பிப்பது, மக்களை சிக்கலுக்குள் தள்ளும் நடவடிக்கையாகவே முடியும்.

முதலில், எமது முயற்சி ஒன்று தோல்வியை அடைந்தால் அதனை தார்மீக அடிப்படையில் ஒப்புக்கொண்டு, அடுத்த கட்டத்துக்கு முன்னேற வேண்டும். இல்லாவிட்டால், போர் இன்னமும் முடியவில்லை, நாளை சண்டை எந்த நேரத்திலும் ஆரம்பிக்கலாம் என்று கூறி புலம்பெயர் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கும் சில குழுக்களை போலவே இங்கும் நிலைமை ஆகிவிடும்.

அரசியல் என்பது சாத்தியமானவற்றை அடைந்து அதிலிருந்து முன்னேறுதல், சாத்தியமில்லாததை செய்வேன் என்று கூறி மக்கள் வாக்குகளை பெற்று, அரசியல் செய்வது பெரும் அனர்த்தத்துக்கு வழி செய்யும் என்பது, எமது தமிழ் மக்கள் ஏற்கனவே அனுபவித்த யதார்த்தம்.

முதலில் சாத்தியமானவற்றை சாதிப்போம். அதிலிருந்து அடுத்த கட்டத்தை நோக்குவோம். அதனை தற்துணிபுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்தால், மக்கள் ஆதரவை தக்கவைத்து, அது தொடர்ந்தும் முன்னணியில் திகழ வாய்ப்பிருக்கிறது. இது இலகுவல்ல. சிரமமான சவால்தான். அதனைச் சாதிப்பதுதான் சிறந்த அரசியல்.

## 80 வயதிலும் சதிர் நடனம் ஆடும் தேவதாசி மரபின் கடைசி வாரிசு
தொடர்ச்சி

தேவரடியார்களுக்கு இருந்ததால், முறைப்படி திருமணம் செய்யாவிட்டாலும், வாழ்க்கைத் துணையாக ஓர் ஆணுடன் வாழ்வது சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்தது. எங்களுடன் வாழ்க்கை நடத்தும் ஆண்கள் எங்களின் வேலைகளை புரிந்தவர்களாகவும், கண்ணியமாக எங்களை நடத்துபவர்களாகவுமே இருந்தனர். ஆனால் பிற ஊர்களில் தேவரடியார்கள் எப்படி நடத்தப்பட்டனர் என்று தெரியவில்லை"" என்று கூறினார் முத்துக்கண்ணம்மாள்.

சதிர் நடனத்தை மீட்க முயற்சி

---

முத்துக்கண்ணம்மாளின் மேலாளர் தரணியின் ஊக்குவிப்பால், கோவையில் 15 பரத நாட்டிய ஆசிரியர்களுக்கு சதிர் நடனத்தின் பிரத்யேக அசைவுகளை சொல்லிக்கொடுத்ததாக அவர் கூறினார்.

""சதிர் நடனம் என்னோடு அழிந்து போய்விடுமோ என்ற பயத்தால் யாரெல்லாம் ஆர்வமாக இருக்கிறார்களோ, அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும் என்று விரும்புகிறேன். தேவரடியார்கள் என்ற ஒரு கலை இனத்தின் கடைசி அடையாளமாக நான் இருப்பதாக நினைக்கிறன். காலம் மாறிவிட்டது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டாலும், இந்த கலைவடிவத்தை நம் சமூகம் மறந்துவிட்டால், தேவரடியார் என்ற ஒரு இனத்தின் வரலாற்றையும் மக்கள் மறந்துவிடுவார்கள்,"" என்று உணர்ச்சி பொங்க முத்துக்கண்ணம்மாள் குறிப்பிட்டார்.

"சமூக அந்தஸ்து குறைந்துபோனது"


---


தேவதாசி ஒழிப்புச்சட்டம் வந்த பின்னர், ஏதோ காரணங்களுக்காக தங்களது குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் 17 ஏக்கர் நிலம் கைவிட்டுப்போனது என்றும் ஒரே ஒரு ஏக்கர் நிலத்தில் மட்டும் இன்றும் பயிர் செய்து, முன்னோர்கள் சொன்னபடி கோயிலுக்கு தருவதாக முத்துக்கண்ணம்மாள் கூறுகிறார்.

""அரசாங்கம் தேவரடியார் முறையை ஒழித்துவிட்டது. ஆனால் பரம்பரை பரம்பரையாக கோயில் சேவகம் செய்த எங்களின் நலனில் அக்கறை காட்டாமல் போய்விட்டார்கள். கோயில் சடங்குகளில் இருந்த முக்கியத்துவமும் குறைந்துவிட்டதால், சமூக அந்தஸ்தும் இல்லாமல், வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டோம்"" என்று அவர் கூறினார்.

அவரது இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளும் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு தங்களது குடும்பத்தை நடத்தவே சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், அரசு அளித்துவரும் நாட்டுப்புறக் கலைஞர் உதவித் தொகையான மாதம் ரூ.1,500 மட்டுமே தனக்கு கிடைப்பதாக முத்துக்கண்ணம்மாள் கூறுகிறார்.

"தமிழக அளவில், தேவரடியாராக இருந்தவர்கள் யாரும் தற்போது உயிரோடு இல்லை. எனக்கு அளிக்கப்படும் மாத உதவித்தொகையை உயரத்திக்கொடுத்தால், என் மருத்துவச் செலவுக்கு உதவியாக இருக்கும்,"" என்றும் கூறினார் முத்துக்கண்ணம்மாள்.







**FCC வழங்கும் இவ்வார சிந்தனை!**

கப்பல் மூழ்கிறதே என்று பதை பதைத்தால் நீங்கள் பயம் கொண்ட பயணி. நண்பா, இது நீர்மூழ்கிக் கப்பல், அப்படித்தான் இருக்கும் என்று புன்னகைத்தால் நீங்கள்தான் நம்பிக்கை மாலுமி!

